KALKI
21.1.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

பொங்கல் முதல்...

புதிய தொலைக் காட்சி?




அன்னையின் அன்பைப் போல் பரிசுத்தமானது
உதயகிருஷ்ணா
அசல் நெய்
100% VEG
எங்கும் கிடைக்கும்
"5 ml முதல் 15 litre வரை அனைத்து
அளவுகளிலும் கிடைக்கும். கவர்ச்சிகரமான
ரீபில் பேக் மற்றும் petjar வடிவிலும் கிடைக்கும்."
தயாரிப்பாளர் : ஸ்ரீராம் அன் கோ, 163, பல்லடம் ரோடு, புளியம்பட்டி, பொள்ளாச்சி-2.

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

21.1.2007

கல்கி

'இப்படி எல்லாம்கூட நடக்குமா?' என்று பயம் கலந்த குரலில், டெல்லி புறநகர்ப் பகுதியான நொய்டா மக்கள் ஒருவருக்கொருவர் சந்தேகக் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். இங்குள்ள நித்ஹாரி கிராமத்தைச் சேர்ந்த மோனிந்தர்சிங் மற்றும் அவனது வேலையாள் சுரேந்தர் இருவரும் சேர்ந்து பல குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்து கொன்றுள்ள செய்தி, இந்தியாவையே ஆட வைத்துவிட்டது. எளிய மக்களின் அறியாமையும் காவல் துறையினரின் அலட்சியமும்தான் இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்று சொல்லப்படும் சூழலில், நாம் நொய்டாவுக்கு விசிட் செய்தோம்.

நித்ஹாரியில் வசிப்போர் பெரும்பாலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள்தான். அம்மா, அப்பா இருவரும் வேலைக்குப் போய் விடுவதால் இங்குள்ள குழந்தைகள் தன்னந்தனியாக வீடுகளில் இருக்க வேண்டிய நிலைமை. நான்கு மாதமே நிரம்பிய தம் கைக்குழந்தையை, ஆறு வயது நிரம்பிய தம் பெரிய குழந்தையின் பொறுப்பில் விட்டுச் செல்லும் அம்மாக்கள் இங்கு அதிகம்.

நொய்டா சாய் சமித்தியைச் சேர்ந்த திருமதி கீதா விஸ்வநாதன், "நாங்கள் பலமுறை இலவச மருத்துவ முகாம்களை நொய்டாவின் குடிசைப் பகுதிகளில் நடத்தி உள்ளோம். அப்பொழுது சிறு குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவோம். நான்கு வயது குழந்தை, தன் கையில் மூன்று மாதக் குழந்தையோடு வந்து நிற்கும். 'உங்கம்மா எங்கே?' எனக் கேட்டால் சரியாகப் பதில் சொல்லத் தெரியாது. பாதுகாப்பற்ற இந்த நிலைமையைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தச் சதியைச் செய்திருக்கிறார்கள் அந்த அரக்கர்கள்" என்றார் நம்மிடம்.

"நித்ஹாரி தெருக்களில் அனாதையாகப் பல குழந்தைகள் எப்போதும் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அங்கே ஓர் அறையை வாடகைக்கு எடுத்து, நாற்பது குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்புறம் விட்டு விட்டேன். சென்ற ஆகஸ்ட் முதலே அங்கே குழந்தைகள் காணாமல் போக ஆரம்பித்தார்கள். இன்றைக்குப் பல குழந்தைகளின் கதி என்னவென்றே தெரியவில்லை. அதில் என்னிடம் படித்தவர்கள் எத்தனை பேரோ" என்று கண் கலங்கி



ஏடு செய்ய முடியாத

ளார் அந்தப் பகுதியைச் சேர்ந்த சமூக சேவகி ஒருவர்.


பெங்காலிலிருந்து பிழைப்புத் தேடி நொய்டா வந்து தம் குழந்தைகளைத் தொலைத்துவிட்டு நிற்கும் பெற்றோர்கள், கையில் தம் குழந்தைகளின் புகைப்படத்துடன் பரிதவித்துப் போயுள்ளனர். போலீஸாரால் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளின் துணியோடும், செருப்புகளோடும் அழுத வண்ணம் நீதிக்காகக் காத்திருக்கின்றனர்.

"நாங்கள் ஏழைகள், படிப்பறிவில்லாதவர்கள் என்ற காரணத்தால்தானே எங்கள் குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடித்து எங்களிடம் ஒப்படைக்க போலீஸால் முடியவில்லை. இதோ இந்த ஒரு வாரத்தில் ஏதேதோ கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் வருகிறார்கள், போகிறார்கள், ஆறுதல் சொல்கிறார்கள். இவர்கள் எல்லாம் யார் என்றே எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குப் பணம் வேண்டாம். தொலைந்துபோன பிள்ளைகள்தான் வேண்டும். அவர்களைத் திருப்பித் தர முடியுமா, சொல்லுங்கள்"

அவர்களின் கதறலுக்கு யாரிடமும் பதில் இல்லை!

- நொய்டாவிலிருந்து...

நளினி சம்பத்குமார்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்


Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

தமிழ்நாட்டுத் தாய்க்குலங்களுக்காக பொங்கல் திருநாள் முதல் புதிய தொலைக்காட்சி உதயமாகிறது. இதில் இருபத்து நான்கு மணி நேரமும் மெகா தொடர்கள் மட்டுமே ஒளிபரப்பாகுமாம். அதுமட்டுமல்ல, மற்ற தொலைக்காட்சிகளில் ஒவ்வொரு தொடரும் அரைமணி நேரமே ஒளிபரப்பாகின்றன. இந்தக் 'கண்ணீர் டி.வி.'யில் எல்லா தொடர்களும் ஒரு மணி நேரம் வருகிறது. இதற்காக பல பிரபல நடிகைகளை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே தாய்க்குலங்கள் கைகுட்டைகளை அதிகம் வாங்கி வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.





தெலுங்கிலிருந்து
மொழிமாற்றம் செய்து
ஒளிபரப்பாகும்
அதிரடி குடும்பத் தொடர்
நடிப்பு : விஜயசாந்தி



குசும்புராஜ்


காலை 8.00 மணிக்கு
மும்பையில் முனியம்மா!
வெள்ளித் திரையில் விழுந்து விழுந்து சிரிக்க வைத்த கோவை சரளா குட்டித் திரையில் குலுங்கக் குலுங்க அழவைக்கப் போகிறார்.
கண்ணீர் TV
பொங்கல் முதல் புதிய தொலைக்காட்சி?
பிற்பகல் 12.00 மணிக்கு
திருமதி ஜோதிகா சூர்யாவின்
ரா..ரா...
சரித்திர காலத்துப் பெண்ணின் கண்ணீர் வரலாறு!
கண்ணீர் TV

'பணம் என்னும் பூதம்' தலையங்கம் அருமையிலும் அருமை. 'வளம் கொழிக்கும் தீவுகளைச் சுற்றி வறுமைக் கடல் ஆர்ப்பரிக்கிறது' என்ற வரி நெஞ்சைப் பிளக்கும் நிதர்சனம்.

- சரயு, கோவை

'ம்..' ஆரம்பம் ஆனந்தம்; சுபம் சுகம்; ஓவியம் காவியம்! இன்னும் இல்லையே என ஏக்கம்!

- என்.கௌரி, கோவை

'ம்' என்ற ஓரெழுத்தைப் பிரதானமாக்கி ஒரு திகிலான படத்தைப் பார்த்த திருப்தியினைத் தந்துவிட்டார் பி.கே.பி.

- வே.ஈஸ்வரன், இராஜபாளையம்

'ம்' - இதம் தந்த சஸ்பென்ஸ் தொடர். சபாஷ் ஓவியர் ஷ்யாமுக்கும்.

- சாமி, திருவண்ணாமலை

எழுத்தாளர்கள் இந்திரா பார்த்தசாரதியும் அசோகமித்ரனும் இணைந்த சந்திப்பில் எத்தனை இளமை! வயதில் அல்ல; வார்த்தைகளிலும் - மனதிலும்!

- எஸ்.விவேகானந்தன், சென்னை

'குஷி' சிறப்பிதழ் அட்டையில் விவேக் படு ஜோர். 'நானும் காதலிக்க வேண்டாமா?' என்று அவர் கேட்டதைப் பார்த்துச் சிரிப்பு வந்தது.

- கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி, சென்னை

நடுப்பக்கத்தை நயமாய் அலங்கரித்த 'கண்ணில் நிற்கும் கன்னிமாரா' கட்டுரையும் படங்களும் நேரில் சென்று வந்த உணர்வை ஏற்படுத்தின.

- எஸ்.எம்.பாலசுப்ரமணியன், தேனி

நா.முத்துக்குமாரின் மழை கவிதை, நிஜமாகவே நனைந்த சுகத்தை மனத்தில் தந்தது.

- எஸ்.ராஜம், காந்திகிராமம்

சின்னக் குழந்தைகளின் கமெண்ட் குஷிக்குக் குஷி சேர்த்தது.

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்



தேவமருந்து 13

நவீன உலகத்தில் காதலின் சின்னமாக, மனசாட்சியின் இருப்பிடமாக இருதயத்தைச் சொல்கிறோம். ஆனால் இருதயத்தின் இயக்கத்தையும் செயல்பாட்டையும் விஞ்ஞான ரீதியாகவே நமது பாரம்பரிய நூல்கள் விளக்கி விட்டன - பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்!

ஆயுர்வேத நூலில் இருதயத்தை 'ஹரதி ததாதி யாதி இதி ஹ்ருதயம்' என்று குறிப்பிடுகிறார்கள். 'ஹரதி' என்றால் இரத்தத்தை வாங்கிக்கொள்வது, 'ததாதி' என்றால் இரத்தத்தைக் கொடுப்பது, 'யாதி' என்றால் இரத்தம் உடல் முழுவதும் வியாபிக்கச் செய்வது.

இருதயமானது கவிழ்த்து வைத்த தாமரை மொட்டு வடிவத்தில் உள்ளது. அது மார்புப் பகுதியில் இருக்கிறது என்றெல்லாம் நவீன மருத்துவ வசதிகள் இல்லாத காலத்திலேயே பழைமையான நூல்கள் விவரித்துள்ளன. இருதயம், உயிரின் அதிஷ்டானம், ஓஜஸ் (நோய் எதிர்ப்புச் சக்தி), சாதக பித்தம் (மனோபலம்) ஆகியவற்றின் இருப்பிடம் என்றும் அந்நூல்கள் விவரித்துள்ளன.

இந்த இருதயம் எப்போது பாதிக்கப்படும் தெரியுமா? மனநோய்களினாலும், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களினாலும் பாதிக்கப்படும். நவீன மருத்துவத்தில் மாரடைப்புக்கும் இருதயத் துடிப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கும் (Rhythm abnormalities) அவசர சிகிச்சைப் பிரிவில் உடனடியாக சிகிச்சை அளிக்கப்படுகின்றன. ஆயுர்வேதமோ இந்த நோய்கள், பாதிப்புகள் வராமல் இருப்பதற்கான தற்காப்புக்கு மிகச் சிறந்த வழிகளைக் கூறுகிறது. 'பிரக்ருதி' எனும் உடல், மனத் தன்மைகள், உணவின் மேன்மை, உடற்பயிற்சியின் முக்கியத்துவம், மன அழுத்தம் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பேசுகிறது ஆயுர்வேதம்.

இது தவிர, இருதயத்தின் செயல்பாட்டை அதிகரிப்பதற்கான மருந்துகளும் ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ளன.


எண்ணெயும், உணவு முறைகளும்...

உடல் கொழுப்பினை அதிகரித்தால் இருதயம் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு என்கிறது ஆயுர்வேதம். நல்லெண்ணெய் கபத்தைக் குறைக்கும். இதனால் இதயம் கெட்டுப் போவதில்லை. ஆகவே நல்லெண்ணெய் சிபாரிசு செய்யப்படுகிறது.



தேங்காய் எண்ணெய், கிருதம், நெய் போன்றவை வாத பித்தத்தை சமன் செய்து கபத்தை அதிகமாக்கும். உடலில் அக்னிபலம் குறைவாக உள்ளவர்கள் தேங்காய் எண்ணெய், நெய் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ளும் போது அவை கொழுப்பாக மாறி கெடுதல் செய்யும். உணவு உண்ட பின்பு சாப்பிடும் நொறுக்குத் தீனியும் ஆபத்து. காய்கறிகளை

■ டாக்டர் எல்.மஹாதேவன் ■



இருதயம் VS கொலஸ்ட்ரால்!

உணவுகள், மாட்டிறைச்சி, உருளைக் கிழங்கு சிப்ஸ் போன்றவை கொலஸ்ட்ராலை அதிகரிக்கும். வெள்ளைச் சீனி Triglycerides எனும் கொழுப்பை அதிகரிக்கும.

ஆயுர்வேதம் கொலஸ்ட்ராலை மேதோ துஷ்டி... அதாவது நச்சுப்பொருள் என்கிறது.

கொழுப்பைக் குறைக்க ஆயுர்வேதம் சொல்லும் வழிகள்...

- நார்ச்சத்துள்ள உணவுகளையும் கொள்ளு, வெந்தயம், கீரை, சோயா, முள்ளங்கி ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- வெள்ளைப் பூண்டு, திப்பிலி, ஓரிலை வேர், கருஞ்சீரகம் ஆகியவற்றைப் பொடித்துச் சாப்பிட்டு வர, கொழுப்புச்சத்து நன்றாகக் குறையும்.
- வெள்ளைப் பூண்டை முந்தைய நாள் இரவு மோரில் ஊறப் போட்டு, அடுத்த நாள் காலை பிழிந்து, சாறெடுத்துக் குடிக்கலாம்.
- கொள்ளை, முளை கட்டி அப்படியே சாப்பிடலாம்.
- 'நவக் குக்குலு' (மூலிகைகளால் பதப்படுத்தப்பட்ட ஒரு வகை மரப் பிசின்) கொலஸ்ட்ராலைக் குறைக்கும்.
- 'அர்ஜுனாரிஷ்டம்' எனும் மருதப் பட்டை சிறந்தது.
- Triglycerides என்னும் கொழுப்பைக் குறைக்க, கறிவேப்பிலைப்

அதிகமாக்கி, சாதத்தைக் குறைத்து, நார்ச் சத்துள்ள உணவுகளையும், அதிக பழங்களையும் உண்ணுதல் நலம் பயக்கும்.

அசைவ உணவுப் பழக்கம் உள்ளவர்கள் எல்லா மீன்களையும் சாப்பிடக் கூடாது. நெத்திலி மீனைச் சேர்த்துக் கொள்ளலாம். இரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஊறுகாய், உப்புப் பண்டங்கள், அப்பளம், வடை போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.

மாமிசம், கொழுப்பு மிகுந்த பால், முட்டையின் மஞ்சள் கரு, சாதம், மைதா, நெய் சேர்ந்த



பொடியை தினமும் காலை, இரவு இரண்டு வேளைகளில் 20 கிராம் வீதம் உட்கொள்ளலாம்.

● கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், திப்பிலி இவற்றைச் சமமாகப் பொடித்து வைத்துக்கொண்டு தினமும் 1 ஸ்பூன், இரண்டு வேளை வெந்நீருடன் சாப்பிடலாம் (வயிறு எரிச்சல், குடல் புண் உள்ளவர்கள் திப்பிலியை' அதிகம் பயன்படுத்தக் கூடாது).

● சர்க்கரை நோய் உள்ளவர்கள் (கொலஸ்ட்ரால் இருந்தால்), சர்க்கரையைக் கட்டுப்படுத்துவதோடு மர மஞ்சள், வெட்பாலை அரிசி, கடுக ரோஹிணி, கடுக்காய், கொடுவேலி, கோரைக்கிழங்கு ஆகியவவற்றைக் கஷாயம் வைத்துக் குடிக்க வேண்டும்.

● இரத்த அழுத் தம் உள்ளவர்கள் மருந்தோடு தியான முறைகள், சங்கீதம் கேட்பது, தலைக்கு க்ஷிரபாலா தைலத்தைத் தேய்ப்பது போன்ற அமைதிப்படுத்தும் வழிகளை நாடலாம்.

● வாதத்தைச் சமச்சிராக்கும் கந்தர்வ ஹஸ்தாதி கஷாயம், கபத்தைக் குறைக்கின்ற புனர்னவாதி கஷாயம் போன்றவை இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.

● பித்தம் அதிகமிருப்பவர்கள் இராக்ஷாதி கஷாயம் உட்கொள்ளலாம்.

இன்று இளைஞர்களிடையே குறிப்பாகப் பெண்களிடம் அதிக படபடப்பு, நெஞ்சு வலி, பயம், இருதயம் திற்பது போன்ற உணர்வு ஆகியவை காணப்படுகின்றன. இவர்களுக்கு 'எக்கோ கார்டியோகிராம்' மூலம் 'மைட்ரல் வால்வு புரோலாப்ஸ்' ஆகியுள்ளதா என்று கண்டறிய வேண்டும். அசுத்த ரத்தத்தைச் சுத்திகரிக்கப்பட்ட ரத்தத்துடன் கலக்கவிடாமல் காக்கும் கதவு போன்ற அமைப்பு இந்த வால்வ். இவர்களுடைய படபடப்பு போன்றவற்றுக்கு தியானம் போன்றவை மிக்க பயன் அளிக்கின்றன.

(தொடரும்)

“படபடப்பு, நெஞ்சுவலி, பயம் போன்ற உணர்வுகளுக்கு தியானம் சிறந்த பயனளிக்கும்”

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 10

கொலஸ்ட்ராலைக் குறைக்கும் எளிய, சரியான குறிப்புகளை எழுதி அனுப்புங்கள்.
டாக்டர் எல்.மஹாதேவன் தன்வந்தரி டாலர் பரிசளிப்பார்.
இரண்டாவது பரிசாக தேவமருந்து முதல் பாகம் புத்தகம்.
கடைசி தேதி: 22.1.2007
ஆசிரியரின் தீர்ப்பே இறுதி

முக்கூட்டு மருத்துவத்தால் குறைந்த செலவில் குழந்தை பெறலாம்

இந்த உலகம் என்றென்றும் அழியாமல் நிலைத்திருக்க வேண்டுமானால் வாரிசுகள் பிறந்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் திருமணமான சில தம்பதியரில் தனது ஆஸ்தியை ஆளவும், தனது பரம்பரை வம்சத்தை இனவிருத்தி செய்யவும், பெற்றோரைக் காப்பாற்றவும், கடைசி காலத்தில் ஈமக் கிரியைகள் செய்யவும் தங்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லையே என்று ஏங்கி கண்ணீரோடு கோயில் குளங்களை சுற்றிக் கொண்டும், மந்திர தந்திரங்களில் ஈடுபட்டும், தாயத்துக்களை கட்டிக் கொண்டும், அரச மரத்தையும் - வேப்ப மரத்தையும் சுற்றிக் கொண்டும் சிலர் நரபலி கொடுத்துக் கொண்டும், வயோதிக காலம் வரை தங்களது வாழ்நாளை வீணாக்கிக் கொள்ளுகிறார்கள். அதோடும் இல்லாமல் பெண்கள் மலடி என்ற பட்டத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் கணவராலும், உறவினராலும் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்படுகிறார்கள். சிலர் தற்கொலை முயற்சியிலும் ஈடுபடுகிறார்கள்.

இவர்களின் துன்பங்களைப் போக்க திருவண்ணாமலை மாவட்டம் **வந்தவாசியிலும், சென்னை வடபழனி 100அடி சாலையிலும் 'நவீன வைத்தியாலயா'** என்ற ஆஸ்பத்திரி நடத்தி வரும் 'மருத்துவ திலகம்' **டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா, டாக்டர் M. A. சரவணன்** ஆகிய மூவரும் **ஹோமியோ - சித்த - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவ சிகிச்சையில் குழந்தை பாக்கியம் உண்டாக்கித் தருகிறார்கள்.**

"எங்களிடம் சிகிச்சைக்கு வரும் கணவன் - மனைவி தம்பதியரை பரிசோதித்து பார்த்ததில் ஆண்களுக்கு 60 முதல் 70 சதவிகித குறைபாடும், பெண்களுக்கு 30 சதவிகித குறைபாடும், இருப்பது தெரிய வருகிறது. அதனால் குழந்தை பெறுவதில் கணவன் - மனைவி இருவருமே பொறுமையுடன் பொறுப்புடன் சிகிச்சை பெற முன்வர வேண்டும்.

சில ஆண்களுக்கு சிற்றின்பத்தில் நாட்டம் இல்லாமல் இருப்பதாலும் ஆண்மை அழிந்திருப்பதாலும், உயிரணு உற்பத்தி அறவே இல்லாமையாலும் சிலருக்கு உயிர் அணுக்கள் உற்பத்தி குறைவாகவே இருப்பதாலும், அம்மை நோயினாலும், புட்டாளம்மையாலும், மஞ்சள் காமாலையாலும், டைபாய்டு ஜுரத்தாலும், முறையற்ற செக்ஸ் பழக்க வழக்கங்களாலும் உயிரணு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதற்கு முக்கூட்டு மருத்துவத்தால் சிகிச்சையளித்து குழந்தை பிறக்கச் செய்கிறோம்.



• உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாயில் அடைப்பு நீங்கியும் - ஆண் குழந்தைகள் பெற்ற செஞ்சியைச் சேர்ந்த தமிழரசி முருகன்.

பெண்களுக்கும் பல குறைபாடுகள் இருக்கிறது. மாதவிடாய் கோளாறுகள், கருப்பை ஓவரிகள் வளர்ச்சியின்மை, கருப்பை ஓவரிகளில் கட்டிகள், கருமுட்டை உண்டாகாதிருத்தல், கருக் குழாயில் சதை அடைப்பு ஏற்பட்டிருத்தல், கருமுட்டை வெடிக்காமலிருத்தல் - சிற்றின்பத்தில் சில பெண்களுக்கு நாட்டம் உண்டாகாமலிருத்தல் போன்ற காரணங்களை முக்கூட்டு மருத்துவ சிகிச்சை அளித்து குழந்தை பிறக்கச் செய்கிறோம்.

திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையில் கீதா - சுப்பிரமணி தம்பதியர் முக்கூட்டு சிகிச்சையால் ஆண் குழந்தை பெற்றுள்ளார்கள்.


பெங்களூர் சிவாஜி நகரில் பசவப்பா தம்பதியருக்கு 20 ஆண்டு குழந்தை இல்லாமல் இருந்து உயிரணு உற்பத்தி ஆகி முக்கூட்டு சிகிச்சையில் ஆண் குழந்தை பெற்றுள்ளார்கள்.

துபாயில் முருகன் - வள்ளி தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி அதிகரித்தும், கருக் குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்றுள்ளார்கள்.

கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரத்தில் அறவே உயிரணு உற்பத்தி இல்லாத சிகாமணி என்பவருக்கு எங்கள் சிகிச்சையில் 110 மில்லியன் கவுண்ட்டும், 20% மொட்டிலிட்டியும் (உயிரணு) உற்பத்தி ஆகியுள்ளது. இது ஒரு பெரிய சாதனை.

திருச்சி மாணிக்கவேல் என்பவருக்கு உயிரணு உற்பத்தி அறவே இல்லாதிருந்து தற்போது (கவுண்ட்) 110 மில்லியனும், 60% மொட்டிலிட்டியும் உற்பத்தி ஆகியுள்ளது.

உலகின் பல நாடுகளிலிருந்து வந்தும், இந்தியாவில் பல மாநிலங்களிலிருந்து வந்தும் எங்கள் நவீன வைத்தியாலயாவில் ஓமியோ - சித்த - ஆயுர்வேத முக்கூட்டு சிகிச்சை பெற்று குழந்தை பாக்கியத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். பலர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள். நூற்றுக்கு தொண்ணூறு சதவிகிதம் பேர் குழந்தை பெற்றுக் கொள்ளுகிறார்கள். நீங்களும் குறைந்த செலவில் குழந்தை பெற வேண்டுமானால் எங்களை உடனே சந்திக்கவும்" என்று அழைக்கிறார்கள்.



டாக்டர்
M.A.சரவணன்
B.H.M.S.



மருத்துவ திலகம்
டாக்டர் A. அர்ஜுனா,
டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா

ஹோமியோபதி-சித்தா-ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் : சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் டாக்டர்களை சந்திக்கும் இடம்: பழைய எண் : 9, புதிய எண் : 65, 100 அடி ரிங் ரோடு, வடபழனி, (கவுரிசங்கர் திருமண மண்டபம் எதிரில் - போக்குவரத்து சிக்னல் பக்கத்தில்). சென்னை - 600 026.
போன் : 044-23623464

வந்தவாசியில்: செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் டாக்டர்களை சந்திக்கலாம்.
நெ. 27, பிராமணர் தெரு, வந்தவாசி - 604 408. திருவண்ணாமலை மாவட்டம் போன் : 04183 - 225208, 226077 செல்: 94430 - 36522, 93444 - 30952

web: www.naveenainfertilityhospital.com
E-mail: drarjuna@naveenainfertilityhospital.com

Advt.



• சாந்தா - தனஞ்ஜெயன் தம்பதியுடன் பூர்ணிதா...

பண்பாடு

நாட்டிய உலகின் தவிர்க்க முடியாத ஜோடி சாந்தா - தனஞ்ஜெயன் தம்பதி. குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, இன்றைக்குக் கதாநாயகியாக களமிறங்கியிருக்கும் பூர்ணிதா, இந்தத் தம்பதியைச் சந்தித்து நடனத்தின் இன்றைய நிலை குறித்து உரையாடினார்.

''முன்பெல்லாம் தெருவுக்குத் தெரு நாட்டியப் பள்ளிகள் இருக்கும். நகரம், கிராமம்னு இல்லாம எல்லா இடங்களிலும் நாட்டியத்துக்கு வரவேற்பு இருந்ததுன்னு எங்க அம்மா சொன்னாங்க. இப்ப ஏன் அது குறைஞ்சுடுச்சு, அங்கிள்?'' என்று ஆரம்பித்தார் பூர்ணிதா.

''நாட்டியம்ங்கிறது ரொம்பப் பெரிய விஷயம். மனம், உடல், ஆன்மிகம்ங்கிற மூன்றையும் உயர்வு நிலைக்குக் கொண்டு போகிற கலை. அதனால தான் ராஜாக்கள் காலத்துலேர்ந்து இந்தக் கலை வளர்க்கப்பட்டது. 'கலை வளர்த்துக் கொலை தவிர்'ங்கிற பழமொழிப்படி பரதம்ங்கிற கலை மனிதனைப் பண்படுத்தி உயரச் செய்யும்!'' என்றனர் தம்பதி.

''இப்படிப்பட்ட ஒரு கலைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு குறையக் காரணம் என்ன?''

■ சாந்தா – தனஞ்ஜெயன் ■

"இப்ப எல்லாமே ஓட்டமா மாறிடுச்சு. யாருக்கும் நிற்கக்கூட நேரமில்லை. பரதம்ங்கிறது பொறுமையாப் பயில வேண்டிய விஷயம் - ஒரு தவம் மாதிரி. பணத்தின் பின்னால் ஓடத் தெரிந்த நமக்குக் கலையின் அருமையை அனுபவிக்கத் தெரியலன்னுதான் சொல்லணும்!"

"இப்பப் பெரிய அளவுக்கு மாடர்ன் டான்ஸ் நிறைய புதுமைகளோடு வந்திருக்கே?"

"அதை மாடர்ன் டான்ஸில்தான் செய்யணும்னு இல்ல. பரதத்திலும் எல்லாப் புதுமைகளையும் செய்யலாம். நமக்குத்தான் பொறுமையில்லை. நாளும் ஒரு புதுமை வளர்க்கக்கூடிய கலைதான் பரதம்!"

"அப்போ மாடர்ன் டான்ஸ் சுத்த வேஸ்ட்டுங்கறீங்களா?"

"நிச்சயமா. அனாவசியக் குலுக்கல்களையும், ஆபாச அசைவுகளையும் தவிர அதில் வேற என்ன இருக்கு? இதை சினிமாவில், டீ.வி.யில் பார்த்து என்ன கிடைச்சிருக்கு? மலிவான ரசனையையும், காட்டுமிராண்டித்தனமான சிந்தனைகளையும் தூண்டறதுதான் மாடர்ன் டான்ஸ் பண்ணுகிற கைங்கர்யம்!"

"ரசிகர்கள் அதைத்தானே கொண்டாடுறாங்க...!"

"இது அப்பட்டமான பொய். ஏன், நல்ல விஷயத்தைத் தந்தா ஏத்துக்க மாட்டேன்னா சொல்றாங்க! இவங்க கெட்டதா பண்ணிட்டு கேட்டா ரசிகர்களைக் காரணம் காட்றாங்க. 'கண் சிமிட்டும் நேரம்' ஒரு படத்துல என்னோட (தனஞ்ஜெயன்) நாட்டியம் ஐந்து நிமிடம் வர வேண்டியது. தயாரிப்பாளரும் டைரக்டரும் ஆடியன்ஸ் ஏத்துக்க மாட்டாங்கன்னு இரண்டு நிமிடமாக குறைச்சாங்க. ஆனா அந்தப் படத்துல கைத்தட்டல் வாங்கின ஒரே காட்சி என்னோட நாட்டியக் காட்சிதான். ஆக ரசிகர்களைக் குறை சொல்வதற்கு நமக்குத் தகுதியில்லை."

மனிதனைக் கடவுளுக்கு அருகில் கொண்டு சொல்லும் கலைதான் பரதம்

வளர்க்கும் பரதம்!



"மாடர்ன் டான்சில் புதுவித முயற்சிகள்..." என்ற பூர்ணிதாவை இடைமறித்து,

"மாடர்ன் டான்ஸ் மேலோட்டமான விஷயம். அது நாகரிகத்திலிருந்து அநாகரிகத்துக்குப் போற வழி. ஆனா பரதம்ங்கிறது மனிதனை, மனதை வளப்படுத்திக் கடவுளுக்கு அருகில் கொண்டு செல்லும் கலை!" என்றனர் சாந்தா - தனஞ்ஜெயன் தம்பதி முத்தாய்ப்புடன்.

- செந்தில்

படம் ஸ்ரீஹரி



கல்கி



2007 ஜனவரி 21
விய தை 7
மலர் : 65
இதழ் : 25


தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்.


அஸ்ஸாமில் நடக்கும் அக்கிரமம்!

அஸ்ஸாமில் கொடூர வன்முறையில் ஈடுபட்டு வரும் உல்ஃபாவை ஒடுக்கப்போவதாக மத்திய அரசு சூளுரைத்திருக்கிறது. உல்ஃபா தீவிரவாத இயக்கத்தை அழிக்க முடியுமானால், அதை ஏன் நமது அரசு இத்தனை காலமாகச் செய்யவில்லை, எதற்காகக் காத்திருந்தது என்கிற கேள்விகள் எழுகின்றனவல்லவா?

உல்ஃபா ஆரம்பித்துப் பல வருடங்கள் ஆகிவிட்டன. ஆரம்பம் முதலே வன்முறை, பிரிவினை ஆகியவற்றை இலக்குகளாகக் கொண்டிருந்த இந்த அமைப்பை நன்றாக வளரவிட்டாகிவிட்டது. அவ்வப்போது இவ்வமைப்பின் பயங்கரவாதம் தலைதூக்குவதும், அரசு அதைத் தற்காலிகமாக ராணுவ உதவியுடன் அடக்கிவிட்டு, ஒடுக்கிவிட்டதாக எண்ணிக்கொள்வதும் தொடர்ந்திருக்கிறது. உல்ஃபா போராளிகள் யார், எதற்காகப் போராடுகிறார்கள், அஸ்ஸாமின் சமூக - வரலாற்றுச் சூழல் என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து, போராட்டத்துக்கான காரணங்களைக் களையவும் நீக்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால்தான் இந்த வன்முறை இயக்கம் இவ்வளவு தூரத்துக்குப் புரையோடியிருக்கிறது.

ஒவ்வொரு முறை பிரச்னை தலைதூக்கும்போதும் அதன் வீரியமும் கொடூரமும் அதிகரிக்கின்றன. இதனால் மிக அதிகமாகப் பாதிப்புக்குள்ளாகுபவர் அப்பாவிப் பொதுமக்கள்தான். இதில் மேலும் வேதனையான விஷயம் என்னவெனில், மக்களைப் பாதுகாத்து பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அனுப்பப்படும் ராணுவமோ, சிறப்புக் காவல் படையோகூட ஒரு கட்டத்தில் தடம் பிறழ்ந்துபோய் சராசரி மக்களைக் கொடுமைப்படுத்த ஆரம்பித்துவிடுகிறது. அதன்பிறகு பிரச்னை திசை திரும்பிப்





போய்விட, மனித உரிமை ஆர்வலர்கள், ராணுவத்தை வெளியேற்றுவதற்காகப் போராட ஆரம்பித்து விடுகிறார்கள்!

எப்படி முயன்றாலும் வன்முறை இயக்கங்களைக் களையவோ, சீர்திருத்தவோ முடியாமலே போய்விடுகிறது.

தற்போதைய அஸ்ஸாம் பிரச்னையில் புதியதொரு பரிமாணமாக, பிற மாநில துவேஷமும் சேர்ந்துபோயிருக்கிறது. பிழைப்பு தேடி அஸ்ஸாம் வந்த - ஒரு பாவமும் அறியாத - பீஹாரிகள் 62 பேரை உல்ஃபா கொடூரமாகக் கொலை செய்திருக்கிறது!

இதுபோன்ற பிற மாநில துவேஷ உணர்வினால் தூண்டப்படும் தீவிரவாதம், இந்தியாவின் இதர பல மாநிலங்களிலும் இருந்து வருவதுதான். ஆனால், அஸ்ஸாமில் இந்த துவேஷ உணர்வோடு அஸ்ஸாமையே தனி நாடாகப் பிரித்தாள வேண்டும் என்ற பிரிவினை உணர்வும் சேர்ந்துகொண்டு சிக்கலுக்கு மேல் சிக்கலாக அச்சுறுத்துகிறது.

அண்டை நாடான பங்களாதேஷ், உல்ஃபா தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் அளித்து வருவதாக ஆதாரபூர்வமாக அறிகிறோம். இது குறித்து பங்களாதேஷுடன் பேசப் போவதாக நமது அயலுறவுத் துறை கூறியிருக்கிறது.

'அடைக்கலம் அளிப்பது வேறு; தூண்டி விடுவது வேறு' என்று இனம் பிரிக்காமல், 'அடைக்கலம் அளிப்பதே தூண்டி விடுவதற்குச் சமம்தான்' என்று இந்திய அரசு அறிவித்து, அண்டை நாடுகளை எச்சரிக்க வேண்டும். தூண்டிவிடும் அயல்நாட்டினர் குறித்துப் புலனாய்வு செய்து, அதுபோன்ற நடவடிக்கைகளை உலகறிய கண்டித்து பகிரங்கப்படுத்தவும் வேண்டும். மென்மையான அணுகுமுறை உதவாது.

தற்போது ராணுவத்தை அஸ்ஸாமுக்கு அனுப்பியிருப்பதால் பயங்கரவாதம் ஓரளவு கட்டுப்படும். அரசும் அது குறித்து மறந்துபோய்விடும் - மீண்டும் அது கொடூரமாகத் தலைதூக்கும் வரை!

அவ்வாறு நடக்க அனுமதியாமல், அஸ்ஸாம் பிரச்னை குறித்து நன்கு அறிந்த ஒருவரைப் பொறுப்பாக்கி, அவருக்கு உதவ சிறு குழு அமைத்து, இச் சிக்கலுக்குப் பல்முனைத் தீர்வு காணும்படி பணிக்க வேண்டும். சமூக, பொருளாதார, அயலுறவு அம்சங்களை அலசி ஆராய்ந்து அடையும் தீர்வாக அது அமைய வேண்டும்.

பயங்கரவாதத்துக்குத் தலை வணங்கக் கூடாதுதான்; ஆனால், பயங்கரவாதம் அரும்பவும் தழைக்கவும் இடங்கொடாத சரியான சூழலை உருவாக்குவது அதைவிடவும் சிறந்தது. ●

வாரம் ஒரு பட்டுப் புடவை!

ணி	சி	த்	தி	மா	தா	ன்
க	ண்	த	மா	மி	த்	க
ழ்	ம்	அ	த்	தை	தா	ம
பி	த்	பா	ப்	ய	ரி	பெ
டி	ங்	தி	த்	க	ர	ஓ
து	ட்	ன்	த	ந்	ழு	கொ
ல்	வா	பா	பொ	அ	ப்	பா



இங்குள்ள கட்டங்களில் குடும்ப உறவுகள் சில இடமிருந்து வலம், வல மிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் மற்றும் குறுக்கு நெடுக்கமாக இடம் பெற்றுள்ளன. அந்த உறவுகளைக் கண்டு பிடித்த பின், மீதமிருக்கும் எட்டு எழுத் துக்களை ஒழுங்குபடுத்தினால், உங் களுக்கு ஒரு செய்தி கிடைக்கும். அதனை எங்களுக்கு எழுதியனுப்பவும். சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு, சென்னை தி.நகர் பாலம் சில்க் சாரீஸ் வழங்கும் பட்டுப் புடைவை ஒன்று பரிசாகக் கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை எழுதும் பட்சத்தில் பரிசுக்குரியவர் குலுக்கல் மூலம் தேர்ந் தெடுக்கப்படுவார்.

விடையை கீழே குறிப்பிட்டுள்ள கட்டத்தில் எழுதி, இந்தப் பக்கத்தைக் கிழித்து கல்கி முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி

கடைசி தேதி : 22.1.2007

விடை :

பெயர் : ....

விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....

சுஜாதா

14



வடக்கே சென்ற கருத்து!

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று இயற்கையை ஐந்தாகப் பிரித்துச் சொல்வது நம் வழக்கம். அதேபோல் குணங்களை (properties) ஒலி, தொடுகை, உருவம், சாரம், மணம் என்று ஐந்தாகப் பிரிப்பார்கள். இதில் நிலத்துக்கு ஐந்து குணங்களையும் நாம் சொல்ல முடியும். நிலத்தில் சப்தங்கள் உண்டு. அதைத் தொட்டுப் பார்க்கலாம். அதற்கு வடிவம் உண்டு. அதற்கு சாரம் Substance உண்டு வாசனை உண்டு. நீருக்கு இவற்றில் நான்கு குணங்கள்தான் சொல்ல முடியும். வாசனை கிடையாது (நான் கார்ப்பரேஷன் நீரைச் சொல்லவில்லை).

நெருப்புக்குச் சப்தம் உண்டு. தொட்டால் சுடும், வடிவமும் உண்டு. காற்றுக்குச் சப்தம் உண்டு. அதைத் தொட்டால் உணரலாம், வடிவம் இல்லை. ஆகாயத்தில் சப்தம் மட்டும் தான் உண்டு.

திருமழிசை ஆழ்வார் தன் திருச்சந்த விருத்தத்தில் இந்தக் கருத்தை ஓசை நயத்தோடு சொல்கிறார்.

'பூநிலாய வைந்துமாய்
புனற்கணின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய் சிறந்த
காலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி
வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ண நின்னை
யார்நினைக்க வல்லரே'

(பூ - பூமி, புனல் - நீர், கால் - காற்று, மீ - ஆகாயம், நிலாய - நிலவிய)

பூமிக்கு ஐந்து குணங்கள், நீருக்கு நான்கு குணங்கள், நெருப்புக்கு மூன்று, காற்றுக்கு இரண்டு, ஆகாயத்துக்கு ஒன்று என்று நீ பரவி இருப்பதை யாரால் எண்ணிப் பார்க்க முடியும் என்று ஆழ்வார் 'எண்ணி'ப் பார்த்திருக்கிறார்.

இது திருச்சந்த விருத்தத்தின் முதல் பாசுரம்.

சிவவாக்கியரின் பாடல்களில்கூட இது அப்படியே 303ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதனால் சிவவாக்கியரும், திருமழிசை ஆழ்வாரும் ஒருவரே என்றுகூட சிலர் கருதுகிறார்கள்.

இந்தப் பாடலின் ஆதாரக் கருத்தானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களுக்கும் குணங்கள் கூறுவது. நல்லெழுதியாரின் பரிபாடலில் உள்ளது. இதே கருத்து விஷ்ணு புராணத்திலும் உள்ளது. விஷ்ணு புராணம் ஆழ்வார்களின் காலத்துக்குப் பிற்பட்டது. பரிபாடல் ஆழ்வார்களின் காலத்துக்கு முற்பட்டது.

எனவே பிற்சங்க காலத்திலிருந்து ஆழ்வார் மூலமாக வடக்கு நோக்கிச் சென்றிருக்கிறது இந்த அற்புதமான கருத்து.

(படிக்கலாம்)


அக்கம் பக்கம்

விரைவில் சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் மாநிலங்களுள், உத்ராஞ்சலும் ஒன்று. ஐந்து ஆண்டுகள் முழுமையாக முதலமைச்சராக இருந்த மூத்த காங்கிரஸ் தலைவரான என்.டி. திவாரியை முன்னிறுத்தி காங்கிரஸ் தனது தேர்தல் வியூகத்தை வகுத்துள்ளது. ஆனால், வயதாகிவிட்டதால், மறுபடி திவாரி முதலமைச்சராவதைவிட, தீவிர அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதையே விரும்புவதாகவும் ஒரு தகவல். பா.ஜ.க.வில் மக்களின் பேரபிமானம் பெற்ற தலைவர்கள் யாருமில்லை என்பது பெரிய குறை. இதற்கிடையில், மறுபடி ஆட்சிக்கு வந்தால் 'உத்ராஞ்சல்' என்ற மாநிலத்தின் பெயரை 'உத்தர்கண்ட்' என்று மாற்றப் போவதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது.




செவ்வாயில் குடியேற்றம்!

ஆந்திராவில் தொலைபேசித் துறை ஊழியரான ரமணராவ், ஆந்திர கவர்னராக இருந்த சுஷில் குமார் ஷிண்டே விரைவில் அப்பதவியை ராஜினாமா செய்வார் என்று சொன்ன ஒரே மாதத்தில் கவர்னர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மத்திய அமைச்சர் ஆனார். அதன் பின் ஆந்திர காங்கிரஸ்காரர்கள் மத்தியில் ரமணராவுக்கு ஏக செல்வாக்கு. இப்போது அவர் ராகுலைவிட பிரியங்காவையே சோனியா அரசியலில் முன்னிறுத்த வேண்டும் என்கிறார். ஆனால் லாலு, ராகுலையே உ.பி. சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சராக முன்னிறுத்தி காங்கிரஸ் போட்டியிட வேண்டும் என்கிறார்.



• முகேஷ்



மலையாளத்தில் எழுதப்பட்ட ஐம்பது கதைகள் கொண்ட ஒரு புத்தகம் அண்மையில் வந்திருக்கிறது. அந்தக் கதைகள் மலையாள சினிமா பத்திரிகை ஒன்றில் மலையாள நடிகர் முகேஷ் எழுதி, வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றவை.

செவ்வாய் கிரகத்தில் பத்தாயிரம் பேர் குடியேற வசதியாக ஒரு திட்ட வரைவு தயாரிக்கும் போட்டியை அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் அறிவித்தது. போட்டியில் வென்றவர்கள் இந்தியாவின் ஜலந்தரில் உள்ள ஏ.பி.ஜே. பள்ளியின் பன்னிரண்டு மாணவர்கள். அவர்களுக்குப் பரிசு என்ன தெரியுமா? மிதக்கும் விண்வெளிக் கூடத்தில் தற்போது தங்கியிருக்கும் இந்திய விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸுடன் கலந்துரையாடும் அரிய வாய்ப்பு!

தொகுப்பு : **எஸ்.சி.எம்.**

திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம், தமிழ்நாடு

காசநோயாளிகளே விழித்துக்கொள்ளுங்கள்!





நேரடி குறுகிய கால சிகிச்சை (DOTS) முறை :
காச நோயைக் குணப்படுத்த சிறந்த வழி
(காச நோயைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டம்).

எச்சரிக்கை

- தொடர் இருமலா, நெஞ்சு வலியா?
- திடீர் எடை குறைதலா, பசியின்மையா?
- காய்ச்சலா, சளியில் இரத்தமா?

காசநோயாக இருக்கலாம் - கவலை வேண்டாம்.
காசநோயை முழுமையாக குணப்படுத்த முடியும்.

- காசநோய்க்கான பரிசோதனைகள், மருந்துகள் **இலவசமாக** அனைத்து துணை சுகாதார மையங்களிலும், ஆரம்ப சுகாதார மையங்களிலும், அரசாங்க மருத்துவமனைகளிலும் கிடைக்கும்.
- காசநோயாளிகள் மருத்துவமனையில் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.
- வீட்டிலிருந்தபடியே DOTS – (குறுகிய கால நேரடி சிகிச்சை) முறையால் மட்டுமே ஆறு முதல் எட்டு மாதங்களுக்குள் காசநோயை கட்டுப்படுத்த முடியும். நோயாளிகளின் வீட்டிற்கு அருகாமையிலேயே மருந்துகள் பெற, வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காசநோயற்ற சமுதாயத்தை நோக்கி விறு நடை போட உதவுங்கள்!

பொது நலன் கருதி வெளியிடுவோர்:

மாநில காசநோய் தடுப்புச் சங்கம், சென்னை-600 006.

Visit us at: www.tn.gov.in / www.southindia.com

[illegible]/1557/[illegible]/2006

'அப்பா புரொடியூசர் என்பதால் தான் நீங்கள் நடிக்க வந்தீர்களா?'

இந்தக் கேள்விதான் வாழ்வில் என்னை அதிகமாகத் துரத்தியது.

நான் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, மல்ட்டி மீடியா தொழில்நுட்பம் பயின்றேன். விளம்பர டிசைன்கள் வடிவமைப்பது எப்படி என்று கற்றுக் கொண்டு, சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் படங்களின் விளம்பர டிசைன்களை வடிவமைப்பதற்கு ஆலோசனைகள் வழங்குவது, மேற்பார்வை இடுவது போன்ற பணிகளில் ஆர்வம் செலுத்தினேன். கனடா, வான்கூவரில் உள்ள பல்கலைக்கழகத்தில் திரைப்படத் தொழில்நுட்பம் குறித்த படிப்புக்காக விண்ணப்பம் அனுப்பி வைத்தேன். அங்கிருந்து எனக்கு அட்மிஷன் கடிதமும் வந்துவிட்டது.

அப்போதுதான் சற்றும் எதிர்பாராத வகையில் நான் நடிகனாவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. எனக்கு அதில் விருப்பமில்லை. காரணம் நடிப்பு அனுபவம் என்பது எனக்குத் துளியும் கிடையாது. இன்று சினிமாவுக்கு அடிப்படை டான்ஸ், ஃபைட்.

எனக்கு டான்ஸ் என்பது சுத்தமாகத் தெரியாத விஷயம். எனக்கு நினைவு தெரிந்து, ஒரு சில தடவை ஆரம்பப் பள்ளிக்கூட அளவில் சக மாணவர்களின் பிறந்தநாள் விழாக்களுக்குப் போயிருக்கிறேன். அங்கே, 'ஹேப்பி பர்த் டே' பாடுகிறபோது குழந்தைகள் டான்ஸ் ஆடுவார்கள். நான் அப்படி ஒரு சில சமயங்களில் டான்ஸ் ஆடியிருக்கிறேன். மற்றபடி, வளர்ந்த பிறகு டிஸ்கோ கிளப்புகளுக்குப் போய் ஆடிய அனுபவமெல்லாம் கிடையாது. பள்ளிக்கூட ஆண்டு விழாக்களின் நாடகங்களில்கூட நடித்தது இல்லை. எனவே, என்னை நடிக்க அழைத்தபோது, நான் தர்மசங்கடமாகத்

காதல்



தான் உணர்ந்தேன். எனக்கு சினிமா தொழில்நுட்பத்தில்தான் ஆர்வம் இருந்ததே ஒழிய, நடிப்பில் இல்லை. ஆனாலும் இயக்குநர் ரவிமரியா தயாரிப்பாளரான என் அப்பாவிடம், அந்தக் கதைக்கு, கதாபாத்திரத்துக்கு நான் மிகவும் பொருத்தமாக இருப்பேன் என்று சொல்லி கன்வின்ஸ் செய்து விட்டார். அப்பாவும் ஓ.கே. செய்துவிட்டார்.

படத்துக்குப் பூஜை என்று தனியாக வைத்துக்கொள்ளாமல், படத்தின் முதல் நாள் படப்பிடிப்



2

பையே இரு வொற்றியூரில் ஒரு கோயிலில் வைத்துக் கொண்டார்கள். முதல் காட்சியிலேயே நான் ஒழுங்காக நடிக்கத் தெரியாமல் சொதப்பினேன். இத்தனைக்

படுத்திய பாடு!

கும் அது மிகவும் சிம்பிளான ஒரு காட்சி தான். நான் கோயிலில் என்னுடைய காதலியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பேன். அவள் வருகிறாளா என்று பார்த்துவிட்டு, என் கையில் இருக்கும் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு 'ஏன் இன்னமும் வரலை?' என்று நான் வசனம் பேச வேண்டும். ஒரே ஒரு வரி வசனம் தான். ஆனால் அந்த ஒரு வரி என்னை என்னபாடு படுத்திவிட்டது தெரியுமா!?

நான் காதலி வருகிறாரா என்று பார்த்துவிட்டு, கைக்கடிகாரத்தையும் பார்த்துவிட்டு, வசனத்தையும் பேசிவிட்டேன்; ஆனால், கேமராவைப் பார்க்கவில்லை. இயக்குநர் "இன்னொரு டேக் எடுக்கணும்; இந்தத் தடவை கரெக்டா பண்ணிடுங்க" என்றார். நான் தலையை ஆட்டினேன். அடுத்த தடவை, காதலி வருகிறாரா என்று பார்த்துவிட்டு, கைக் கடிகாரத்தையும் பார்த்துவிட்டு கேமராவையும் பார்த்தேன்; ஆனால் வசனத்தைக் கோட்டை விட்டேன்.

மறுபடியும் ஒரு டேக். ஒழுங்காக எல்லாவற்றையும் செய்துவிட்டதாக நினைத்துக் கொண்டேன். ஆனால், இயக்குனர், "காதலி வருகிறாரா என்று பார்க்கலையே?" என்றபோது தலையில் அடித்துக் கொண்டேன். ஒரு வழியாக ஆறேழு டேக்குகளில் அந்தக் காட்சியினை தவறில்லாமல் நடித்து முடித்தேன். அன்றைய ஷூட்டிங் அத்துடன் முடிந்தது.

வீட்டுக்குப் புறப்படுவதற்காக



"நாசர் என்னை அவாய்ட் பண்ணினார்!"

காரை நோக்கி நடந்து சென்றபோது, ஷூட்டிங்கை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் சிலர் என்னை நெருங்கி பேப்பர்களை நீட்டி ஆட்டோ கிராஃப் கேட்டார்கள். நான் தயங் கினேன். அவர்கள் விடுவதாக இல்லை. நானும் பந்தா பண்ண விரும்பாமல், அவர்களுக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். அடுத்து, அந்த ஏரியா லேடீஸ் சிலர் ஆட்டோகிராஃப் கேட்டபோது எனக்கு மிகவும் தர்மசங்கட மாக இருந்தது. "நான் ஒண்ணும் பெரிய நடிகன் இல்லீங்க! இதுதான் எனக்கு முதல் படம்! இன்றைக்குத்தான் எனக்கு முதல் நாள் ஷூட்டிங். எங்கிட்டே போய் ஆட்டோகிராஃப் கேட்கறீங்களே?" என்று ஒப்பனாகவே கேட்டு விட்டேன். "அத னால் என்ன? நீங்க சினிமால நடிக்கறீங் கல்ல! ஆட்டோகிராஃப் போடுங்க!" என்றார்கள். அப்போதுதான் ஒரு சினிமா நடிகருக்கு இந்தச் சமுதாயம் தரும் மதிப்பு எனக்குப் புரிந்தது.

படத்தின் முதல் ஷெட்யூல் ஷூட்டிங் என் அம்மாவின் சொந்த ஊரான கொடைக்கானலில் நடைபெற்றது. தமிழ்த் திரையுலகின் மூத்த கலைஞர்களான விஜயகுமார், நாசர், ஸ்ரீவித்யா ஆகியோ ருடன் எனக்குக் காட்சிகள் இருந்தன. ஸ்ரீவித்யா, விஜயகுமார் இரண்டுபேரும் என்னுடன் சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றாலும், நாசர் என்னிடம் பட்டும் படாமல்தான் இருந் தார். எனக்குள்ளேயே 'இவர் மட்டும் ஏன் நம்மிடம் பேசாமல் நம்மை அவாய்ட் பண்ணுகிறார்' என்று கேட்டுக் கொண் டேன். 'நடிக்கத் தெரியாமல் புரொடியூ சரின் மகன் என்ற ஒரே தகுதியில் இவன் நடிக்க வந்துவிட்டான்' என்று நாசர் நினைத்ததுதான் அதற்குக் காரணம் என்று புரிந்துகொண்டபோது எனக்கு ஆழ்ந்த வருத்தம் ஏற்பட்டது.

(பேசலாம்)

இனி நல்ல நேரம்!

உதயாவை ஞாபகமிருக்கிறதா? 'திருநெல்வேலி' படத்தின் மூலம் பரபரப்பாக பேசப்பட்டவர். இடையில் திடீரென்று காணாமல் போய்விட்டார். ஆனால், "நான் எங்கயும் போயி டலை. இதோ 'காதல் சாதி' படம் மூலமா உங்க பார்வைக்கு மீண்டு(ம்) வந்துட்டேன்" என்கிறார் உதயா. சரி, இவ்வளவு நாட்கள் எங்கிருந்தாராம்?

"நடிச்சிட்டுதானிருந்தேன். ஆனா பல படங்கள் திரைக்கு வராமலேயே போயிடுச்சு. இப்பத் தெளிவாயிட்டேன். மாடு மேய்க்கற பையனா நான் நடிச்சிருக்கிற 'காதல் சாதி' படம் இதோ வரத் தயாரா இருக்கு. அடுத்து 'விண்ணைத் தாண்டி வருவாயா' படமும் ரெடி. இனி நல்ல நேரம்தான்" என்கிறார். இன்னொரு விஷயம் தெரியுமா? இவரது தம்பி விஜய்தான் அஜீத்தை வைத்து 'கிரீடம்' படத்தை இயக்கி வருகிறார். 'கிரீடம்' சாதாரணப் படமல்ல. ரஜினி நடித்த 'பில்லா'வைத் தான் திரும்ப எடுக்கிறார்கள் அஜீத்தை வைத்து!

- அனுசுயா



எழுபது துறைகள், இருநூற்றைம்பது ஆசிரியர்கள், ஆயிரம் பணியாளர்கள் என பிரமாண்டமாக வளர்ந்து நிற்கும் சென்னைப் பல்கலைக்கழகம், நூற்றைம்பது ஆண்டுகளைக் கடந்து, ஐந்து நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுள்ளது. அதன் நாற்பத்தொன்றாவது துணை வேந்தராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு.எஸ்.ராமச்சந்திரனைச் சந்தித்துப் பேசினோம்.

'இளைஞர்கள் கனவு காண வேண்டும்' என்று நமது குடியரசுத் தலைவர் கூறியுள்ள நிலையில், நமது மாணவர்களின் கனவுகள் எத்தகையதாக அமைய வேண்டுமென நினைக்கிறீர்கள்?

''இன்றைய இளைய சமுதாயத்துக்கு - கல்வி, முன்னேற்றம் குறித்த கனவுகள் நிச்சயம் வேண்டும். அத்தகைய மாணவ, மாணவிகள் நாளுக்கு நாள் பெருகி வருவது மிகவும் நம்பிக்கை தருகிறது.''


நூற்றுக்கு நூறு சதவிகிதம் மாணவர்களிடம் படிப்பை மட்டுமே புகுத்துவது சரிதானா? விளையாட்டு, கலைத் திறமைகள் தேவையில்லையா?

''தலைமையாசிரியர்கள், முதல்வர்கள் தத்தமது பள்ளியின், கல்லூரியின் தேர்ச்சி விழுக்காடு முடிவுகளை மட்டுமே மனத்தில் கொண்டு இப்படி ஒரு குறுகலான பார்வை கொண்டிருப்பது வருத்தத்துக்குரியது. பெற்றோர்களும் கூட இதே மாதிரியான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். கல்வி பயிலும் காலத்தில் மாணவர்கள் பிற கலைகளிலும் திறமையுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.''

மேலை நாட்டுக் கல்வி முறைக்கும், நமது கல்வி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

''மேலை நாட்டுக் கல்வி முறையில் பணம் என்கிற விஷயம் பிரதானம் பெறுகிறது. தகவல்களின் தொகுப்பாகவே மேலைக் கல்வி முறை அமைந்திருக்கிறது. ஆனால் நமது இந்தியக் கல்வி முறையில்தான் வாழ்க்கைக்கான விஷயங்கள் கற்றுத் தரப்படுகின்றன.''

"இளைஞர்களுக்குச்



இந்தியாவில் கல்வி கற்றுவிட்டு வெளிநாட்டில் பணிபுரிய விரும்பும் இளைய தலைமுறையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

''நம் நாட்டில் அதிக முதலீடு இராணுவத்துக்கும், பாதுகாப்புக்குமே சென்று விடுகிறது. மாறாக கல்வி, தொழில், வேலைவாய்ப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால் இந்நிலை மாறும்.''

எஸ்.ராமசாமி

கட்டாயச் சீருடை, செல்போனுக்கு அனுமதி மறுப்பு போன்ற கல்லூரி விதிமுறைகளைப் பற்றி உங்கள் கருத்து?

''இதைப் போன்ற விஷயங்களை மறுக்கவோ, கட்டாயப்படுத்த வேண்டியதோ இல்லை. பள்ளிப் பருவத்தைத் தாண்டிய கல்லூரி இளைஞர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.''

உங்கள் பல்கலையில் ராகிங்கை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

''எங்கள் பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' மனநிலை வரக்கூடாது என்பதற்காகவே சீனியர்களின் பொறுப்பில், வழிகாட்டுதலில் ஜூனியர் மாணவர்களை இருக்கச் செய்கிறோம். இது ராகிங் என்னும்



''சுதந்திரம் தேவை!''

மனநிலையை நீக்கப் பெருமளவில் உதவுகிறது.''

பள்ளி, கல்லூரிகளில் இன்றைக்குத் தற்கொலைகள் அதிகமாகிவிட்டனவே...?

''இதில் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பச் சூழல் பெரிய அளவுக்குப் பங்கு வகிக்கிறது. இருந்தபோதிலும் தற்கொலை மனோபாவத்தைப் போக்கக்கூடிய கவுன்ஸெலிங்குகள் எல்லாக் கல்லூரிகளிலும் இடம்பெற வேண்டும்.''

நாற்பத்தொன்றாவது துணைவேந்தரான உங்களது திட்டங்கள் என்னென்ன?

''நல்ல ஆசிரியர், நல்ல வகுப்பறை என உள்கட்டுமானத்தில் கவனம் செலுத்தவும், இன்டெர்ன்ஷிப் முறையைக் கட்டாயப்படுத்தவும், மாணவ முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளவும் திட்டமிட்டுச் செயலாற்றத் துவங்கியுள்ளேன்.

தமிழக அரசு பெருமளவில் உதவ முன்வந்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் சிறப்பை மேலும் உயர்த்துவதே என் நோக்கம்!''

சந்திப்பு: ப்ரீத்தி கோபால்
ரத்திகா மித்தல்
படம்: டெலி.கண்ணன்

- சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

ஒற்றைப் பெற்றோரோடு வளர்ந்து வரும் குழந்தைகளின் மனநிலை, மற்ற குழந்தைகளைக் காட்டிலும் எளிதில் பாதிப்படையக் கூடியது. காரணம் அந்தக் குழந்தைகளின் மனத்துக்குள், 'ஐயோ நமக்கு இந்த மாதிரி அம்மா, அப்பாவோடு சேர்ந்து ஜாலியா இருக்க முடியலையே' என்கிற வருத்தம் இருந்துகொண்டே இருக்கும். தங்கள் பள்ளியில், வெளியிடங்களில், அண்டை வீடுகளில், மற்ற குழந்தைகளைப் பார்க்கும்போது இவர்களுடைய ஏக்கம் அதிகமாகும்.

வளர்ப்பில் இருக்கிறது வருங்காலம்!

தன் துணையை இழந்தோ, பிரிந்தோ வாழ்கிற துயரம், வேலைச் சுமை, சமூகப் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கெல்லாம் ஆளாகியிருக்கும் ஒற்றை பெற்றோரின் மன அழுத்தம் இன்னொரு புறம்.

இம்மாதிரியான நூற்றுக்கணக்கான பெற்றோர்களுக்கு, தங்கள் குழந்தைகளை மனக் குறைகளுக்கு ஆளாகாமல் வளர்த்தெடுப்பது எப்படி என்று கவுன்ஸெலிங் தருகிறார் 'ஐ ஸ்கில்ஸ் கவுன்ஸெலிங்' மையத்தை நடத்தி வரும் ஷைலா எம்.ராவ்.

'சுய பரிசோதனை செய்யுங்கள்; உங்கள் தகுதியையும், திறமையையும் உணருங்கள்; குழந்தையைச் சரியாக, முறையாக, அன்பாக, கண்டிப்பாக, அரவணைப்பாக வளர்க்கும் முறைகளைக் கடைபிடியுங்கள்; எதிர்காலத்தை மனத்தில் வைத்து முன்னேறுங்கள்; குழந்தைகளின் பிரச்னைகளைக் கேளுங்கள்; எக்காரணத்தை முன்னிட்டும் அடிக்காதீர்கள்; உங்கள் சொந்தப் பிரச்னைகளைக் குழந்தைகள் மீது திணிக்காதீர்கள்' என்று அறிவுறுத்துகிறார்.

ஒற்றைப் பெற்றோர்கள் தங்களது சோகத்தின் சாயலையோ, கஷ்டங்களின் பாரத்தையோ, குழந்தைகளிடம் காண்பித்தால் இருட்டில் வைக்கப்பட்ட செடிகளாகவே அவர்கள் வளருவர். ஆகையால் தான் இந்த கவுன்ஸெலிங் அவசியம்" என்றும் சொல்கிறார்.

தொகுப்பு
சிபிமணு



'நான்' தான்

நம்முடைய மனம் ஒரு பிரச்னையை அசை போட்டுக் கொண்டிருக்கும். அந்தப் பிரச்னை தீர்ந்தவுடன் கவலைப்படுவதற்காக வேறொரு பிரச்னையைத் தேர்ந்தெடுத்து, அதைப் பற்றி யோசித்துக் கவலைப்படத் துவங்கிவிடுவோம். அதாவது, கவலைப்படுவது மட்டுமே நமது முக்கிய கடமை என்பதைப் போல.

அப்படி நாம் சிந்திக்கும் பிரச்னை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டதா அல்லது பிறரால் ஏற்படுத்தப்பட்டதா என்பதில் நமக்கு எப்போதும் தெளிவு இருந்தால், நமக்கு வாழ்வில் அமைதி நிலவும்.

அந்த அமைதிக்கு நாம் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அப்படிச் சுயத்தைப் பரிசோதித்து நமக்குப் பழக்கமில்லாததால், நாம் வேறொரு சுலபமான முறையைப் பார்ப்போம்.

'உங்கள் எண்ணங்களைக் கவனியுங்கள்' என்றால், உங்கள் எண்ணங்களில் உங்களைப் பற்றியவை எத்தனை, மற்றவர்களைப் பற்றியவை எத்தனை, வாழ்வின் பிரச்னைகளுக்கு உங்களில் எத்தனை பேர் பொறுப்பேற்கிறீர்கள் அல்லது மற்றவர்கள் மீது பொறுப்பைச் சுமத்துகிறீர்கள் என்று கவனியுங்கள். உங்களது ஒவ்வோர் எண்ணமும் மற்றவர்களை அல்லது மற்ற விஷயங்களை நோக்கியே இருப்பதைப் புரிந்து கொள்ளும்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

'பணம், கார், நாய், கல்வி, காதல், ஆண், பெண், அரசாங்கம், மதம், கடவுள், நம்பிக்கை, செல்வம், வறுமை என்று எல்லாமே பிரச்னைதான். அத்தனைக்கும் நான்தான் பலிகடா' என்று நொந்து கொள்கிறோம். ஆனால் எவருமே அந்த 'நான்' என்பதை எந்தப் பிரச்னைக்கும் பொறுப்பாக்குவதில்லை. ஆக 'நான்' ஜெயிக்க வேண்டுமென்பதற்காக இத்தனைப் பிரச்னைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

இது நடக்கக் கூடியதா? ஒரு போதும் நடக்காது. ஏற்கெனவே பார்த்ததை மீண்டும் ஒருமுறை பார்ப்போம். கார் பிரச்னையில்லை, ஓட்டுபவர்தான் பிரச்னை; செல்வம் பிரச்னையில்லை, செல்வத்தின் சொந்தக்காரர்தான் பிரச்னை.

இராமாயணத்தில் ஒரு நிகழ்வு!

சுவாமி சுத்தானந்தா



சந்தோஷம் 12

'இவ்வுலகில் எப்படி வாழ்வது?' என்று வசிஷ்டரிடம் ராமர் கேட்க, அதற்கு வசிஷ்டர் 'ஹே ராமா! இந்த பூமியில் நீ நடக்கும்போது புல், கற்கள், பனிக்கட்டி, மணல், தார் என்று விதவிதமான நிலப்பரப்புகள் இருக்கும். வெப்பம் மிகுந்த சாலையில் நீ நடந்தால் சூட்டினால் உன் பாதங்கள் தீய்ந்துவிடும். பனிக்கட்டியின் மீது நடந்தால் குளிரில் பாதங்கள் உறைந்துவிடும். எந்த இடத்திலும் உன் பாதங்களுக்கேற்ற மென்மையை, வசதியை உணர வேண்டுமென்பதற்காக, அத்தனை நிலப்பரப்பையும் தோலினால் மூடுவது சாத்தியமன்று. அப்படி மூட முடிந்து மூடினாலும், நிலப்பரப்பின் விதவிதமான அழகுகளையும் மறைத்துவிட நேரிடுமே! ஆனால் உன் பாதங்களை மூடுவதால், நீ எங்கு சென்றாலும் கல், பனிக்கட்டி, சொரசொரப்பான மணல், மென்மையான புல் என்று எதன் மீது நடந்தாலும், நீ எப்போதும் தோலின் மென்மையை உணரலாம்'' என்கிறார்.

இப்படித்தான் உலகில் பலவிதமான மனங்களைச்

தமிழ் வடிவம் : சிவசங்கரி

சந்திக்க நேர்கிறது. எல்லோரையும் மாற்றுவதென்பது சாத்தியமில்லாத விஷயம். ஒரே ஒரு மனத்தை மட்டும் மாற்ற முடியும் - அதுதான் நம்முடையது.

இந்நிலையில், 'நான்'தான் சந்தோஷம் என்பதை நாம் உணர்ந்துவிட்டாலே, எங்கு சென்றாலும் நம்முடைய நிழலைப்போல அதுவும் நம்முடனே வரும். அப்போது உலகம் முழுவதும் அழகாகவே இருக்கும். எல்லாமே மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

என் உடலை நீங்கள் தொடலாம். ஆனால், என் மனத்துக்கு உங்களை நான் அனுமதித்தால் ஒழிய, என் எண்ணங்களுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லை. நல்ல பழக்கவழக்கங்களைப் பின்பற்றி நல்ல மனிதராக உருவாக வேண்டும் என்று அம்மாவும், அப்பாவும் அறிவுரை கூறுகின்றனர். இதை நாம் உள்வாங்கிக் கொள்வதே இல்லை. ஆனால் சிகரெட் பிடிக்கும்படி ஒரு நண்பன் சொன்னால், விருப்பம்போல ஊதாரித்தனமாகச் செலவு செய்வதற்கு ஒரு நண்பன் ஆலோசனை கூறினால் அவற்றையெல்லாம் அப்படியே உள்வாங்கிக் கொள்கிறோம். இதைப் போன்ற தவறுகளைச் செய்துவிட்டு விளைவுகளைச் சந்திக்க நேரிடும்போது, 'ரொம்ப வெகுளியாக இருந்துவிட்டேன். என்னை ஏமாற்றிவிட்டார்கள்' என்று நமக்கு நாமே சொல்லிக்கொண்டு, நமது செயல்களை நியாயப்படுத்திக் கொள்கிறோம். நாம் குழந்தையல்ல இப்படி ஏமாறுவதற்கு. நாம் ஒத்துழைக்காமல் நம்மை யாரும் ஏமாற்றிவிட முடியாது.

அனைத்துக்கும் காரணம் 'நான்' என்பதே!

"நேற்று அந்தப்புரத்துல நடந்த சண்டையில அரசியார் மன்னரைத் தூக்கி எறிஞ்சு பேசிட்டாங்களாம்."

"அப்புறம் என்ன ஆச்சு?"

"மன்னர் அகழிக்கு அந்தப்புறமா விழுந்து கிடந்தாராம்."

- மும்பை கருணா



உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். 'நான் யார்?' என்று கேட்பதற்குப் பதிலாக, 'எனக்கு என்ன வேண்டும்?' என்று கேளுங்கள். அப்போது எல்லோரும் வாழ்வில் மகிழ்ச்சியைத்தான் விரும்புகிறார்கள் என்பதை உணர்வீர்கள். தன் பிரச்னைகள் தீர வேண்டும் என்பார் ஒருவர். கார் சரி செய்யப்பட வேண்டும், வீடு பழுது பார்க்கப்பட வேண்டும், கார் அல்லது வீடு வேண்டும், ஆண் அல்லது பெண் துணை வேண்டும், சுவையான உணவு வேண்டும், உலகைச் சுற்றி வர வேண்டும்... இவற்றை ஆராய்ந்து பார்த்தால், எல்லாமே 'சந்தோஷத்துக்காக' வேண்டுமே தவிர, அதனதன் மதிப்புக்காக அல்ல.

இப்படி ஒரு பொருள் வேண்டுமென்று கேட்பது மட்டுமல்ல, வேண்டாம் என்று விட்டுவிட வேண்டுமென்றால்கூட, அதுவும் சந்தோஷத்துக்காகத்தான். மகிழ்ச்சியாக இருக்க ஒருவர் ஒன்றில் ஈடுபட்டால், அதையே மகிழ்ச்சிக்காக ஒருவர் துறந்து செல்கிறார்! அனுபவிப்பதும் துடிப்பதுமான இந்தத் தொடர்ச்சியான முறை, வாழ்வில் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

ஆக, 'நான்' என்பதன் மூலம் நாம் வாழ்வில் எதைச் சேர்க்கிறோம், எதைத் தவிர்க்கிறோம் என்பதைப் பொருத்தே நம் வாழ்வில் நமக்கு அமைதி கிடைக்கும்.

(தொடரும்)

உ
श्री रामजयम् ।

பகவத் கீதையில் (அத்தியாயம் 4:18/19) சொல்லப்பட்டுள்ள தியானம் செய்யும் முறை

Dr. V. KRISHNAMURTHY

Wednesday to Friday
402/41, 38th 'A' Cross
26th Main
(Opp. to SBM)
Jayanagar - 9th Block
Bangalore - 69
Phone: (080) 3292 2523

Saturday to Monday
"RAMAN HOUSE"
Old No.21, Kuppiah
Street,
West Mambalam,
Chennai (Madras) - 33
Phone : (044) 2489 0370

இப்புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள தியான முறை பயில தனியாக நேரம், இடம் ஒதுக்க தேவையில்லை. இதை பயின்று வர, விரைவில்

(1) நமது வியாதிகள் குணமாகின்றன.

(2) பணம் நீர் வீழ்ச்சி போல் நமக்கு வருகிறது; கடவுள் தரிசனம் கிடைக்கிறது.

(3) நாம் சொல்வது அப்படியே நடக்கிறது (வாக்கு பலிதம்), மற்றும்

(4) நமக்கு தேவையான, இன்றியமையாத உதவிகளை நாம் கேட்காமலேயே மற்றவர்கள் வலிய வந்து செய்கின்றனர்.

என்று இப்புத்தகத்தின் முந்தைய பதிப்பு வாசகர்கள் எமக்கு தொடர்ந்து எழுதிய வண்ணம் உள்ளனர்.

இப்புத்தகம் தபாலில் பெற ரூ.50=00 M.O. செய்க

லஜ்ஜாவதி


பொய்



நீண்ட நாளைக்குப் பிறகு பாலசந்தர் இயக்கி இருக்குற படம். அவரோட ட்ரேட் மார்க் குறையாம வந்திருக்கு. திரையிலயும் ஊழல், நேர்மையில்லாத அரசியல்வாதிகளையே பார்த்து சலிச்சுப்போன கண்களுக்கு வள்ளுவனார் கேரக்டர் மூலமா ஆறுதல் தந்திருக்காரு கே.பி. உதய்கிரண் காதல் சுட்டி. கொடுத்த வேலைய கச்சிதமா செஞ்சிருக்கார். அவரோட அம்மாவா வர்ற அனுராதா கிருஷ்ணமூர்த்தி படுபாந்தம். லட்சியத்துக்காக காதலையே துறக்கத் துணியற புதுமுகம் விமலா ராமன், நெஞ்சு நிறையறார். அதுக்கு முழு மனசோட உதய்கிரண் வழிவிடும்போது நமக்குப் பதைபதைச்சுப் போகுது; காதலுக்கு ஒரு புது கோணம் எட்டிப் பார்க்குது. அங்கேயே முடிச்சிருந்தா 'பொய்' இன்னும் நிறைவா இருந்திருக்கும்.

கற்பனை அப்பாவா கே.பி.யோட நடிப்பு அடி தூள். மகனைக் கண்டபடி அவர் திட்டும்போது காது குளிரக் கேக்கலாம்போல இருக்கு. 'விதி'யா நுழைஞ்சு வில்லங்கம் பண்ற பிரகாஷ்ராஜ், டென்ஷன் ராஜ்! ரேணுகாவ ரொம்பப் பேசவிட்ட டைரக்டர், கீதுமோகன்தாஸை வீணடிச்சுட்டார். பூ விக்கிற இளைஞனையும் அமெரிக்கா பத்திப் பேச வைக்க கே.பி.யால மட்டும்தான் முடியும். வித்யாசாகரோட வித்தக இசைத் திறனுக்கு சல்யூட். எல்லாப் பாடல்களுமே இனிமை... இதம்... இதயம் தொடும். 'இவ்வளவு அழகா இலங்கை'ன்னு ஏங்க வைக்குது பிஜு விஸ்வநாத்தின் கேமரா.

புதுசா முளைச்ச காதலனை ஒதுக்க நடனப் (ஸ்ரீதர் நடனம் அட்டகாசம்) போட்டி, அம்மாவும் மகனும் பேச செல்ஃபோன் வச்சுக்காததுன்னு பல காட்சிகள் பழைய வாசனை அடிச்சாலும் 'பொய்', உண்மைக் காதலர்களோட உணர்வுப் போராட்டம்!



புகலிடம்!

எப்பொழுதெல்லாம்
உன் நினைவு வருகிறதோ
அப்பொழுதெல்லாம்
நான்
இங்கு வருவதுதான்
வழக்கம்

எப்படிச் சிதறினாலும்
என்னை
விழாமல் தாங்குவது
நீதானே

உன்
ஏந்துதல் இல்லையெனில்
என் வெப்பமே
என்னைத்
தீர்த்திருக்கும்

இதுதான் சரியென்று
நான் சொன்னாலும்
எதுவும் சரியென்பது
உன் வாதம்

அதுதான்
என் நம்பிக்கையும் கூட

அந்த
ஒட்டுதலில்தான்
இன்னும் என் உருவம்
ஊசல் கொண்டுள்ளது

தஞ்சை சகா



"சும்மா இருப்பதே சுகம்"

மௌனத்தின் பெருமையைப் பற்றிப் பெரியோர் பலர் சொல்லியிருக்கிறார்கள். 'மௌனம் கலகம் நாஸ்தி' என்பது ஒரு முதுமொழி. உலகத்திலே கலகம் இல்லாதிருப்பது ஒன்றுதான் முக்கியமான காரியம் என்றால், நாம் எல்லோரும் ஊமைகளாகிவிடலாம். இம்மாதிரியே, கலகம் உண்டாவதெல்லாம் ஸ்திரீகளினால்தான் என்றும் சொல்லப்படுவதுண்டு. 'சீதை இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை; துரோபதி இல்லாவிட்டால் பாரதமில்லை; ஹெலன் இல்லாவிட்டால் டிராய் யுத்தம் இல்லை. ஆதலின் 'பெண்கள் இல்லாவிட்டால் கலகம் கிடையாது' என்று சொல்வார்கள். இதற்காக உலகில் பெண்களே வேண்டியதில்லையென்று தீர்மானித்து விடலாமா? இதில் ஒரு சங்கடந்தான் இருக்கிறது. பெண்கள் இல்லாவிட்டால் கலகம் இல்லாமலிருக்கலாம்; ஆனால், அதோடு உலகமும் இல்லாமல் போய்விடும்; அவ்வாறே பேச்சில்லாவிடில் கலகமில்லாமலிருக்கலாம்; அத்துடன் சிநேகமும் இல்லாமல் போய்விடும்.

மௌனத்திற்கு ஒரே ஓர் உபயோகந்தான் உண்டென்று எனக்குத் தோன்றுகிறது. ஏகாதசி உபவாசத்துக்குப் பிறகு துவாதசி பாரணை ருசிப்பதைப் போல், ஒருநாள் மௌனமாயிருந்தால் மறுநாள் பேச்சின் சுவை அதிகமாகக் கூடும். மகான் தாயுமானவர் மௌனத்தின் சிறப்பைக் குறித்து எல்லையில்லாமல் பாடியிருக்கிறார். அவரும், பட்டினத்தடிகளும் தற்செயலாகச் சந்தித்தார்களென்று ஒரு நிமிஷம் கற்பனை செய்துகொள்வோம். அவர்களுக்குள் பின்வருமாறு சம்பாஷணை நடக்கலாமென்று தோன்றுகிறது.

தாயு: பட்டினத்தாரே! மௌனத்தின் சுகத்தைப் பார்த்தீர்களா? என்ன ஆனந்தம்! என்ன அற்புதம்!

பட்டி: தாயுமானாரே! சும்மா இருப்பதே சுகமென்று சொன்ன உம் வாயில் சர்க்கரையை அள்ளிக் கொட்ட வேண்டும். மௌன இன்பத்தின் முன்னால் மற்ற இன்பங்களெல்லாம் துச்சம்! துச்சம்! துச்சம்!

ஒரு முகூர்த்த காலம் பேசினாலும் இவர்களால் மௌன இன்பத்தைப் பற்றி முழுவதும் பேசி முடிக்க முடியாது.

'இனிது இனிது ஏகாந்தமினிது' என்று தமிழ் மூதாட்டி கூறினாள்; ஆயினும் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்வதற்காக அந்தப் பாட்டி ஊர் ஊராய் மக்கள் இருப்பிடம் தேடிச் சென்றதாக அறிகிறோம்.

- 'அதிர்ஷ்ட கவசம்'
வானதி வெளியீடு


சினிமா, நாடகத்திலே பல வேஷங்களில் ஒரு நடிகன் வருகிறான். ஒன்றில் அவன் ராமனாக வரலாம், இன்னொன்றில் ராவணனாக வரலாம்; ஒன்றில் பணக்காரனாகவும் இன்னொன்றில் தரித்திரனாகவும் வரலாம். இப்படி வேஷம் மாறுகிறதென்றாலும் வேஷம் போட்டுக்கொண்ட ஆசாமி ஒருவன் தான். அப்படியே நம்முடைய வாழ்க்கை நாடகத்தில் நாம் போட்டுக்கொள்ளும் பல வேஷங்களில் ஒரு வேஷமாக இல்லாமல், இத்தனை வேஷங்களையும் போட்டுக்கொள்கிற அந்த ஒரு நிஜ ஆசாமியாக இருப்பது ஆத்மாதான். வேஷங்கள் பல இருக்கின்றன என்பதாலும் வேஷமாயில்லாத ஒரு நிஜ ஆசாமி இருப்பதாலும்தான் இந்த வேஷங்கள் அவனுக்கு ஏற்பட முடிகிறது என்று ஆகிவிடுகிறது.

வேஷத்தைக் கலைத்துவிட்டு, அந்த ட்ரெஸ், மேக்-அப் எல்லாவற்றையும் எடுத்துவிட்டு ஆசாமி தன் வீட்டில் இருக்கிறாற்போல், ஆத்மாவானது மனசு, உடம்பு போன்ற உடுப்பும் ஹரிதாரமும் இல்லாமல் தூக்கத்திலும் நிஷ்டையிலும் இருக்கிறது. ஒரு

உயர்ந்த அமைதி!

காரியமும் எண்ணமுமில்லாமல், இவற்றால் ஏற்படும் இழுபறிப் போராட்டம், அதாவது தேவாஸுர யுத்தம் இல்லாமல் ஜீவன் இருப்பது அப்போதுதான். ஆசையும், அதனால் ஏற்படும் அவஸ்தையுமில்லாமல் ஜீவன் இருப்பது, மனசின் ஆட்டமில்லாமல் ஆத்மா மட்டும் இருந்து கொண்டிருக்கும் நிலையிலேதான். பிரசாந்த நிலை என்கிற உயர்ந்த அமைதி நிலை அதுதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்





சிவப்பதிகாரத்தைத் தொடர்ந்து அடுத்த படத்துக்கு ஆயத்தமாகிவிட்டார் டைரக்டர் கரு.பழனியப்பன். 'அடுத்த படத்தைப் பற்றிய அறிவிப்பில்தான் வாய் திறப்பேன்' என்றவரை வம்படியாகப் பேச வைத்தோம்.

பார்த்திபன் கனவு, சதுரங்கம், சிவப்பதிகாரம் என உங்கள் படத் தலைப்புகளில் எல்லாம் தமிழ் மணம் வீசுகிறதே என்ன காரணம்?

"தமிழில் தலைப்பு வைத்தால்தான் வரிவிலக்கு என்ற அறிவிப்பு வரும் முன்னரே தலைப்புகளைத் தமிழில் வைத்தவன் நான். வலிந்து வைக்காமல் வாய்ப்பு இருக்கும்போது வைப்பதில் ஒன்றும் தப்பில்லையே!"

பார்த்திபன் கனவுக்கும், சிவப்பதி காரத்துக்கும் ஏன் இத்தனை இடைவெளி?

"இடையில் 'சதுரங்கம்' என்ற படம் செய்ததுதான் இந்த இடைவெளிக்குக் காரணம். ஸ்ரீகாந்த் - சோனியா அகர்வால் நடித்து முழுதும் முடிந்துள்ள நிலையில், தயாரிப்புக் காரணங்களால் அந்தப் படம் வெளிவரத் தாமதமாகிக் கொண்டுள்ளது."

"சிறந்ததைக்

சிவப்பதிகாரத்தில் இந்த அளவுக்குப் நாட்டுப்புறப் பாடல்களைப் பயன் படுத்தியது அவசியம்தானா?

"படத்தின் மையம் நாட்டுப்புறப் பாடல் இல்லை. அரசியல்வாதிகளுக்குத் தகுதிகள் வேண்டும் என்பதுதான். கதை டிராவல் பண்ண ஓர் அபத்தக் காத லையோ, இரட்டை அர்த்த காமெடியையோ கொடுக் காமல் நாட்டுப்புறப் பாடல்களை

கரு.பழனியப்பன்

எடுத்துக் கொண்டேன்.”

உங்கள் கதைக்காக விஷாலைத் தேர்வு செய்தீர்களா? அல்லது விஷாலுக்காக உருவாக்கப்பட்ட கதையா?

“கதைக்குத்தான் ஹீரோ. அந்த வகையில்தான் விஷாலைத் தேர்வு செய்தேன். இப்போதைக்கு விஷால் டைரக்டர் டிலைட்.”

பிரமாண்ட தயாரிப்புகளைப் பற்றி...

“படம் பார்க்கும்போது மட்டுந்தான் பிரமாண்டம் வேலை செய்யும். அரங்கை விட்டு வெளிவரும் ரசிகனை திருப்திப் படுத்தப்போவது கதையம்சம்தான். இரண்டு ரயில்களைத் திரையில் மோத விட்டுக் காண்பிக்கலாம். அந்த ரயிலில் பிரயாணித்த ஒருவனுடைய கூக்குரல் கூட ரசிகனுக்குப் போய்ச் சேராத போது பிரமாண்டம் என்பது வீண்தானே!”

எந்த மாதிரியான தளத்தில் நீங்கள் இயங்குவதாக உணர்கிறீர்கள்?

“எல்லாக் கதைகளும் சொல்லப்பட்ட கதைகள்தான். சொல்லும் விதம் புதுமையாக, உண்மையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிற

காலம் தீர்மானிக்கும்!”



வன் நான். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ‘நோக்கம் உயர்ந்த படைப்புகளே நல்ல படைப்புகள்’ என்பார். அந்தத் தளமே என் தடமாக இருக்கும்.”

எந்தப் படத்தைப் பார்த்தாலும் ஐம்பது நாட்கள், நூறு நாட்கள் வெற்றிகரமாக ஓடியதாக விளம்பரம் செய்கிறார்கள்? எதுதான் வெற்றிப் படம்?

“சினிமாவும் வியாபாரம்தானே! வியாபாரத்தில் அப்படித்தான் நடக்கும். எது சிறந்தது என்பதைக் காலம் தீர்மானிக்கக் காத்திருக்கிறது.”

உங்கள் அடுத்த ப்ராஜக்டைப் பற்றி?

“அதற்கான இறுதி அறிவிப்பை பத்திரிகையாளர்களாகிய உங்கள் முன்னிலையில் வெகு விரைவில் வெளியிடுவேன்.”

- விக்டர் மனோ

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

14.1.2007 முதல் 20.1.2007 வரை

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம்: மேன்மையான வாரம். தனம், குடும்பம், கல்வி, வாக்கு மேலோங்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். தடை விலகித் திருமண காரியம் கைகூடும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கூட்டுத் தொழில் செய்வோர் கவனமாக இருக்கவும். குரு/சனி/ராகு/கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

ரிஷபம்: நல்ல யோகமான வாரம். கல்வி வளம் மேலோங்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு, மனை வாங்க நல்ல தருணம். நீண்ட தூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். லெட்சுமி கடாக்ஷம் பெருகும். ராகு/கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மிதுனம்: தெய்வ பலம் நிறைந்த வாரம். குழந்தைகளால் மனசந்தோஷம் ஏற்படும். கல்வி வளம் வளர்ச்சி பெறும். உடல் நிலை நன்றாக இருக்கும். மறைமுக எதிர்ப்பு இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். திருமண காரியம் கைகூடும். நண்பர்களால் அனுகூலம் ஏற்படும். பொருளாதாரம் மேலோங்கும். சொத்து சேரும். குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

கடகம்: திருமண காரியம் கைகூடும். குழந்தை பாக்கியம் கிட்டும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். தீராத பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. உடல்நிலை சுமாராக இருக்கும். மறைமுக எதிர்ப்பு இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

சிம்மம்: மனக்குழப்பம் தீரும் வாரம். நல்ல காரியம் கைகூடும். வெளியூர்ப் பயண வாய்ப்பு ஏற்படும். திருமண காரியம் கைகூடும். கணவன் - மனைவி உறவு பலப்படும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். பணக் கஷ்டம் விலகும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கன்னி: வெற்றி வாகை சூடும் வாரம்

மனத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் பெருகும். கல்வி வளம் மேலோங்கும். பணக் கஷ்டம் விலகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற் படும். சுபகாரியம் கைகூடும். குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

துலாம்: மேன்மையான வாரம். சுபச் செலவு ஏற்படும். வீடு/மனை வழியில் ஆதாயம் கிட்டும். கல்வி வளம் மேலோங் கும். உடன்பிறப்பால் அனுகூலம் ஏற் படும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தனவிருத்தி ஏற்படும். சனி/ராகு/கேது வழியில் நற்பலனைத் தரும்.

விருச்சிகம்: மிக அருமையான வாரம். ஆடை, ஆபரண அலங்காரப் பொருட்கள் சேரும். குழந்தைகளால் சந் தோஷம் கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. தூர தேச அழைப்பு கிட்டும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட் டும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

தனுசு: சுபச்செலவு கைகூடும். வராத பணம் கைக்கு வந்து சேரும். உடல் ஆரோக் கியம் பாதிக்கப்படாது. தெய்வபலம் நிறைந்து இருக்கும். வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். நண்பர், உறவினர் களால் ஆதாயம் கிட்டும். மறைமுக எதிர்ப்பு விலகும். குரு/சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

மகரம்: பணக்கஷ்டம் விலகும். சுபச் செலவு ஏற்படும். தடைபட்ட திருமணக் காரியம் கைகூடும். மனச்சலனம் விலகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. யாரிடமும் வாக்குவாதத்தைத் தவிர்க் கவும். உத்தியோகத்தில் இடமாற்றம் உறுதி. வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கும்பம்: வராத கடன்கள் வந்து சேரும். மனக்குழப்பம் தீரும். நீண்ட தூரப் பிர யாண வாய்ப்பு வந்து சேரும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். நண்பர், உறவினர் களால் ஆதாயம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ராகு/கேது/ குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம்: மனதுக்கு சந்தோஷம் மிகுந்த வாரம். தொட்டது எல்லாம் வெற்றி வாகை சூடும். சொத்து/மனை வாங்க நல்ல தருணம். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற் படும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பல னைத் தரும்.

பரத்வாஜ் பதில்கள்

என் சகோதரி மகனுக் குத் திருமண காரியம் தள்ளிக் கொண்டே போகிறது? எப்போது வரன் அமையும்?

- ஜோ, சென்னை

உங்கள் சகோதரி மகனுக்கு சர்ப்ப தோஷம் உள்ள ஜாதகமாகப் பார்க்கவும். 2007-ல் திருமணம் முடியும்.

இரண்டு வருடங்களாக முயன்றும் என் மகனுக்கு சரியான வரன் அமைய வில்லை. என்ன செய்யலாம்?

- ராமநாதன், சென்னை

தங்கள் பையனுக்கு 2007-ல் திருமணம் நடக்கும். உறவு கிடையாது. படித்த பெண் அமைவாள். குரு பலன் நடக்கிறது. முயற்சி செய்யவும்.

என் மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்? அயல்நாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளதா?

- மைதிலி ரவிச்சந்திரன், திருவள்ளூர்


உங்கள் பெண் ஜாதகப்படி தோஷம் எதுவும் இல்லை. வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். 2007 கடை சியில் திருமணம் நடக்கும். பரிகாரம் தேவையில்லை. மேல்நாட்டுக்குச் சென்று படிக்கும் யோகம் உள்ளது.


மங்கலம் சங்கமம் சந்தோஷம் . . .
விவாஹா பட்டு!



விவாஹா
தி சென்னை சில்க்ஸ்
தி சென்னை சில்க்ஸ்
சென்னை • கோயமுத்தூர் • திருப்பூர் • ஈரோடு • திருச்சி

அ.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன், பேட்டி என்றாலே ரொம்ப அபூர்வமாகப் பேசுபவர். அவரை நாம் சந்தித்தபோது இதனை உணர்ந்துகொள்ள முடிந்தது.



"கை கழுவப்படுவார்

தி.மு.க. அரசு 'மைனாரிட்டி அரசு' என்று விமர்சனம் செய்கிறீர்கள். கூட்டணிக் கட்சிகள் பக்கபலமாக இருக்கும்போது, உங்கள் விமர்சனம் எடுபடவில்லையே?

"ஐம்பது சதவிகித தொகுதிகளைக் கூட பிடிக்காமல் தி.மு.க. ஆட்சி செய்கிறதே, அது மைனாரிட்டி ஆட்சி தானே. சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் அமைந்த முதல் மைனாரிட்டி ஆட்சி இதுதான். கூட்டணிக் கட்சிகள் கருணாநிதியை விரைவில் கைகழுவி விடும். அதிகாரத்தைப் பகிர்ந்தாலும்கூட தி.மு.க.வால் சமாளிக்க முடியாது. கடந்த காலங்களில் கருணாநிதி எப்படியெல்லாம் கூட்டணிக் கட்சித் தலைவர்களை அவமதித்தார் என்பது யாவரும் அறிந்ததே. அறிவாலயத்து ஆர்க்கெஸ்ட்ராவாக இருக்கும் கூட்டணிக் கட்சிகள், அபஸ்வரம் பாடும் நேரம் வந்துவிட்டன."

சட்டமன்றத்தில் அடிக்கடி வெளிநடப்புச் செய்கிறீர்களே, எதிர்கட்சியான அ.தி.மு.க. மக்கள் பிரச்னைகளை சட்டசபையில் பேச வேண்டாமா?

"நாங்கள் சபை நிகழ்ச்சிகளில் பிரச்னைகளை எழுப்பினாலும் எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பதில்லை. தீர்மானம் நிறைவேற்றி எங்களை வெளியேற்றாமல், ஒட்டுமொத்தமாக வெளியே அனுப்பி விடுகிறார்கள். இதைப் போன்ற சம்பவங்களைக் கண்டித்திருக்கிறார் புரட்சித் தலைவி. எங்களை வெளியே அனுப்பி விட்டு, சொந்தக் கட்சி உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சி உறுப்பினர்களின் ஜால்ராக்களில் குளிர் காய்கிறார் கருணாநிதி."

ஜெயலலிதா எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் மக்கள் பிரச்னைகளில் உரிய கவனம் செலுத்துவதில்லையே?

"யார் சொன்னது? புரட்சித்தலைவி மட்டும் இல்லையென்றால் தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்கள் இன்னும்

கொடுமைகளை அனுபவிப்பார்கள். சிக்குன் குன்யா முதல் விமான நிலைய விரிவாக்கம், துணை நகர, ஆக்ரமிப்புகள், நெல் கொள்முதல், கரும்புக்கு விலை, வாட் விவகாரம், முல்லைப் பெரியாறு என்று மக்கள் தொடர்பான அனைத்துப் பிரச்னைகளையும் அலசி அறிக்கை விடுகிறார் புரட்சித்தலைவி. பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டதைக் கண்டிக்க வில்லையா? மத நல்லிணக்கம் நிலவ வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவர் புரட்சித்தலைவி. ஆனால் அந்த அக்கறை இன்றைய முதல்வருக்கு இல்லை. அவர் தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துப் போகாமல் கவர்ச்சித் திட்டங்களால் கானல் நீராக்கி வருகிறார்."

தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறாரே கருணாநிதி...

"என்ன நிறைவேற்றினார்? கூட்டுறவு வங்கிகளுக்குப் பணம் சென்று சேராததால் 75 சதம் விவசாயிகளுக்குக் கடன் ரத்தாகவில்லை. அதேபோல கொடுத்த தொலைக்காட்சிகளில் பாதிக்கு மேல் வேலை செய்யவில்லை. ஸ்டாலின் நேரடியாகச் சென்று சோதனை செய்த இடத்திலேயே தொலைக்காட்சி வேலை செய்யவில்லை.

இலவச நிலம் என்று அறிவித்துவிட்டு மேடையில் நான்கு பேருக்குப் பத்திரம் கொடுத்துவிட்டால் போதுமா?

கருணாநிதி!"



கேஸ் அடுப்பு கொடுக்கப் போகிறார்களாம். ஏற்கெனவே எரிவாயு சிலிண்டருக்குப் பல நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிற நிலை. எப்படிச் சமாளிப்பது? அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்துகொண்டே போகிறது. மணல், செங்கல் விலையேற்றத்தினால் கட்டுமானத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது."

தி.மு.க.வின் செல்வாக்கு வளர்ந்திருப்பதாக லயோலா கல்லூரி கருத்துக் கணிப்புச் சொல்கிறதே!

இதைப் போன்ற கணிப்புகள் பல முறை பொய்த்துப் போயிருக்கின்றன. தமிழ்நாட்டில் பலமான கட்சி அ.தி.மு.க. தான். சென்ற சட்டமன்றத் தேர்தல்களில் 79 கழக வேட்பாளர்கள் 3000க்கும் குறைவான வோட்டு வித்தியாசத்தில்தான் தோற்றார்கள். உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் கட்சியின் அதிகார துஷ்பிரயோகம், பணபலம் ஆகியவற்றைச் சமாளித்துக் கணிசமாக வெற்றி பெற்றோமே!"

அ.தி.மு.க.வுக்கும் பா.ம.க.வுக்கும் மீண்டும் தோழமை மலருமா?

"தோழமை குறித்து புரட்சித்தலைவி முடிவெடுப்பார். ஆறுக்கும் மேற்பட்ட அதிகார மையங்களைக் கொண்டிருக்கும் இந்த ஆட்சியின் செயல்பாடுகளைக் கண்டு கூட்டணிக் கட்சிகளும், அதிகாரிகளும் வெறுத்துப் போயிருக்கிறார்கள். கடுமையான நிதிப் பற்றாக்குறை தமிழக அரசைத் தாக்கப் போகிறது. இன்னொரு விஷயத்திலும் கருணாநிதியின் சுயரூபத்தை பாருங்கள்... எத்தனையோ தமிழ் அறிஞர்கள் இருக்கும் தமிழ்நாட்டில் செம்மொழி தொடர்பான கமிட்டியில் தம் மகள் கனிமொழியைப் போட்டிருக்கிறார்.

தி.மு.க. போடும் ஆட்டத்துக்கான முடிவு பிப்ரவரிக்குப் பிறகு தெரிய வரும்."

- ப்ரியன்

சிறுகதை



'காதல்' என்பது வெறும் ஹார்மோன் சமாசாரம் என்று பலர் சொன்னதை என் அறிவுஜீவி மூளை ஒரு சமயத்தில் ஆமோதித்தது நிஜம். ஆனால் அதெல்லாம் என் கால்சென்டரில் திவ்யா வேலைக்கு வந்து சேரும் வரைதான். திவ்யாவை ஏனென்று தெரியாமல் எனக்கு முதல் பார்வையிலேயே பிடித்துப் போனது. அவளைவிட அழகான பெண்களை நான் பார்த்திருக்கிறேன், பேசியிருக்கிறேன் என்றாலும், திவ்யாவை அப்படிப் பார்த்துப் பேசி, பழகிப் பிடித்த பெண்களின் கூட்டத்தில் சேர்க்க முடியவில்லை.

ஏன்?

எனக்குத் தெரிந்த இதர பெண்களைப் போல் திவ்யா இல்லை.

ஆண்மையும் பெண்மையும் கலந்த அந்த சரிவிகிதாச்சார கலப்புதான் என்னை அவள்பால் ஈர்த்துக்கொண்டது என்று கூடச் சொல்வேன்.

இதெல்லாம் மட்டும் காதல் என்ற சமாசாரம் என்னிடம் தோன்றப் போதுமா என்று கேட்பீர்கள். வாஸ்தவம்தான். அதற்கும் மேலாக எங்களிடையே இணைப்பாக அமைந்த ரசனை.

திவ்யா வேலையில் சேர்ந்ததுமே எங்கள் தலைமை அதிகாரி என்னை அழைத்து

"உங்கள் குருப்பில்தான் மிஸ் திவ்யா வொர்க் பண்ணப் போறாங்க... அழைச்சிட்டுப் போய் மத்தவங்களை அறிமுகப் படுத்துங்க... சேகர்..." என்றார்.

"ஹாய், ஐ'ம் திவ்யா..." என்று ஆரம்பித்தது எங்கள் நட்பு. எங்கள் க்ருப்பில் இருந்த விவேக், மனோஜ், மதுமிதா, நளினி, ராஜேஷ் ஆகியோருடன் திவ்யாவையும் இணைத்துக் கொண்டேன். "நான்தான் இந்த க்ருப்பின் தலைவன். 'ஒன் நைட் அட் கால் ஸென்டர்' படித்திருக்கிறீர்களா திவ்யா?" என்று கேட்டபடி என்னுடைய இடத்துக்கு திவ்யாவை அழைத்துப் போனேன்.

"ஓ... சேதன் பகத்துடையது தானே... படித்திருக்கிறேன்... அவருடைய முந்தைய நாவல் 'ஃபைவ் பாய்ன்ட் ஸம் ஒன்' நீங்கள் படித்திருக்கிறீர்களா?" என்றாள் திவ்யா பதிலுக்கு. "ம்..." என்றபடி பதில் சொன்ன நான், சற்றும் எதிர்பார்க்காமல் இன்னொரு கேள்வியைத் தமிழில் கேட்டாள் திவ்யா.

'நீங்கள் தமிழ்ப் புத்தகங்கள் படிக்க மாட்டீர்களா சேகர்?' கால் ஸென்டரில் வேலைக்கு வரும் பெரும்பாலானவர்கள் தமிழ் பேசத்தான் பழகியிருப்பார்கள். படிப்பதற்கு அல்ல!

"உங்கள் வயதுப் பெண்கள் தமிழ்ப் புத்தகங்கள் கூடப் படிக்கிறார்களா, என்ன?" என்றேன் ஆச்சர்யத்துடன்.

"நான் படிக்கிறேனே?" என்றாள் திவ்யா சிரித்தபடி.

ஜெயகாந்தனிலிருந்து இரா.முருகன் வரை அனுத்தமாவிலிருந்து வாஸந்தியின் எழுத்து வரை அத்தனை ஆண்-பெண் எழுத்தாளர்களைப் பற்றித் தொடர்ந்த நாட்களில் பேசித் தீர்த்தோம். எனக்குப் பிடித்த பாடல் அவளுக்கும் பிடித்தது. நான் ரசித்த சினிமாவை திவ்யாவும் அலச ரசித்தாள். அவளுக்குப் பிடித்த வண்ணம் எனக்கும் உகந்ததாக இருந்தது.

திவ்யா இப்படி மெள்ள மெள்ள என்னை ஆக்ரமித்தாள்.

அவளைப் பார்த்த உடனே மனத்துக்குள் சொல்லத் தெரியாத சந்தோஷ ஊற்றுகள் சீறிப் பாய்ந்து முளைத்தால், அவளை நினைக்கும் நிமிஷங்கள் மயிலிறகால் மனத்தைத் தடவுவதைப் போல் உணர்ந்தால், சுகமோ, துக்கமோ எதுவாக இருந்தாலும் உடனே அவளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற வேட்டை கிளம்பினால், அவற்றுக்கெல்லாம் ஒரே அர்த்தம்தான், ஒரே காரணம்தான் இருக்கிறது என்று இலக்கியங்களில் படித்த போது அறியாததை, இப்போது உணர்ந்தேன் என்றால், அதுதான் காதல்...

காதலுக்கும் கண்கள் உண்டு...

ஆனால், மிகவும் சீரியஸாக அதை உண்மையான உள் அர்த்தத்துடன் திவ்யாவிடம் சொல்லும் தருணத்துக்காகத்தான் நான் காத்திருந்தேன். அதற்கு ஏற்றாற் போல், ஒரு நாள் மாலையில் - அன்று எங்கள் இருவருக்கும் விடுமுறை - ஒரு ரெஸ்டாரன்ட்டில் பேசிக் கொண்டிருந்த தருணத்தில்...

நான், திவ்யா, மனோஜ் மூன்று

பேரும் டிபன் சாப்பிட்ட பின் பொதுவாகத் திருமணங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். மனோஜ் காதல் திருமணத்தை ஆதரிக்கவில்லை. திவ்யா அதனை ஆதரித்துப் பேசினாள். நான் இரண்டு பேருடைய கட்சிக்கும் அப்போது குறிப்புகள் தந்து ஊக்கப் படுத்திக் கொண்டிருந்தேன்.

"கமான் திவ்யா. காதல், கீதல் எல்லாம் இன்ஃபாச்சுவேஷன். நான் இதுவரை எந்தப் பெண்ணையும் காதலித்தது இல்லை. காதலிக்கவும் மாட்டேன். எங்க அப்பா, அம்மாவுக்கு எனக்கு எந்த மாதிரி மனைவி இருந்தால் நன்றாக இருக்கும் என்று தெரியும். அதனால் அவங்ககிட்ட அந்தப் பொறுப்பை விட்டுவிட்டேன்." என்றான் மனோஜ்.

"மனோஜ், ஒருவேளை உனக்கென்று எந்தவிதமான தனிப்பட்ட அபிப்ராயங்களும், பிடிப்புகளும் இல்லாததால் நீ இப்படிப் பேசலாம். உனக்கு மனசுக்குப் பிடித்த மாதிரி ஒரு பெண் அமையலை...

"சேகருக்கென்று தனியான கருத்துகளும், அபிப்ராயங்களும் இருக்கின்றன மனோஜ். உன்னை மாதிரியில்ல. சேகரைப் போல ஒரு கணவன் கிடைத்தால் நல்லது. அதிர்ஷ்டம்தான்..." என்று திவ்யா பேச, எனக்கு வியர்த்தது. ஆனால் அதற்குள் திவ்யாவுடைய செல்போன் பலமாக சங்கீதம் பாட 'ஹலோ..' என்று அதை எடுத்துப் பேசியவள் "ஹாய்... என்றவள் 'எக்ஸ்க்யூஸ் மீ...'' என்று எங்கள் இருவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சற்று விலகிச் சென்றாள்.

அதற்குள் மனோஜின் செல்ஃபோனில் அவன் நண்பன் ஒருவன் அவனுக்காக எங்கோ காத்திருப்பதாகக் கூறவே, அவனும், விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டான்.

திவ்யாவின் வருகைக்காகக் காத்திருந்த எனக்கு, அந்தத் தனிமை தேவையாக இருந்தது.

திவ்யா என்ன சொல்ல வந்திருப்பாள்?

"உங்கள் பரம எதிரி மகரந்த சேனனுக்கு நம் நாட்டிலேயே ஆதரவு பெருகி வருகிறது மன்னா!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்?"

"'எங்கள் நாட்டின் மீது படையெடுக்க வரும் மகரந்த சேனனே வருக! வருக!'ன்னு நம்ம ஆளுங்களே நோட்டீஸ் அடிச்சி ஒட்டியிருக்காங்க!"



கிடைக்கல... அதனால பேசற..." என்றாள் திவ்யா.

"என்னை விடு. சேகரைப் பாரு. பேச்சிலர்தான். காதல்னா என்ன ஸ்பெல்லிங்னு கேக்கற ஆளு. என்ன அப்படித் தானே...?'' என்று என்னை வம்புக் கிழுத்தான் மனோஜ்.

எனக்கு 'திக்'கென்று இருந்தது. இதுவரை பல சமயங்களில் இதைப் போன்ற விமர்சனங்கள் வந்தபோதும் இந்த சமயத்தில் இந்த விமர்சனம் என்னைக் கொஞ்சம் கலவரப்படுத்தியது.

நாசமாய்ப் போகிற செல்ஃபோன்கள்!

திவ்யா திரும்பி வந்ததும் நாமே கேட்கலாமா... என்ன சொல்ல வந்தாய் என்று...? சே சே... அசிங்கமாகவும், அற்பமாகவும் இருக்கும்... சரி, பொறுத்திருந்து பார்ப்போம்.

சரியாகப் பதினைந்து நிமிடங்கள் கழித்து வந்தாள் திவ்யா.

"ஸாரி... சேகர்... என் கஸின் யு.எஸ். ஸிலிருந்து. அவன் நாளை மறுநாள் இந்தியா வருகிறானாம்... சரி கிளம்பலாமா?" என்று பேசிய பேச்சுக்களை எல்லாம் மறந்தவளா

"எல்லா லேடீஸும் கறுப்பு பேட்ஜ் குத்திக்கிட்டு ஆபீஸ் வந்திருக்காங்களே ஏன்?"

"நேத்து 'பவானி' டீ.வி. சீரியல்ல அண்ணி கேரக்டர் செத்துப் போயிடுச்சாம்!"

- நெல்லையப்பபுரம் செல்வன்



சுக் கிளம்பினாள்.

சரி... இன்னொரு சமயம் வராதா... அப்போது பார்த்துக்கொள்வோம் என்று நினைத்துக் கொண்டேன்.

வந்தது; ஆனால் வேறுவிதமாக.

நான் ஒரு மாதம் கொச்சி, திருவனந்தபுரத்தில் திறக்கப்பட்ட கால் ஸென்டர்களில் பயிற்சி கொடுப்பதற்காகப் போக வேண்டியிருந்தது.

திவ்யாவும் ஏனோ அதற்குப் பிறகு அந்தப் பேச்சை எடுக்கவில்லை.

நான் வரப்போவதாக அனுப்பிய மெயிலின் பதிலில், 'உங்களுக்கு ஒரு ஸர்ப்ரைஸ் காத்திருக்கிறது' என்று கடைசி வார்த்தைகளில் முடித்திருந்தாள்.

'அது என்னவாக இருக்கும்?' பதில்தான் கிடைக்கவில்லை.

வந்ததும் கிடைத்தது.

அன்று காலை ஆபீஸ் நான் வரும்போதே களைகட்டி இருந்தது. எல்லாருடைய முகங்களிலும் சிரிப்பு, மகிழ்ச்சி.

நான் உள்ளே நுழைந்தவுடன்... "ஹாய்.. சேகர் ஈஸ் ஹியர்.. டு ஷேர் த சேட் நியூஸ்.." என்றாள் நளினி.

"என்ன நியூஸ்...?" என்றேன் நான் புன்னகையோடு.

"திவ்யா ஈஸ் கோயிங்... டு பி எ வொய்ஃப்" என்றாள் மது.

நான் திகைப்புடன் பார்த்தேன்.

"ஸ்டாப் இட் மது..." என்று புன்னகை மலர வந்தாள் திவ்யா. அவள் கைகளில் ஒரு கட்டுத் திருமண அழைப்பிதழ்.

என் காலடியில் உலகம் நழுவிக் கொண்டிருந்தது.

"சேகர்... ஐயம் கெட்டிங் மாரீட்... சங்கர்... என்னுடைய தூரத்துச் சொந்தத்தைச் சேர்ந்த பையன்..."

"கங்க்ராட்ஸ்... சங்கரைப் பற்றிச் சொன்னதேயில்லையே..." என்றேன்.

"இது அப்பா, அம்மா பார்த்துப் பண்ணற திருமணம் சேகர்.." என்றாள் திவ்யா.

"அன்னிக்குப் பெரிசா லவ் மேரேஜுக்கு ஸப்போர்ட் பண்ணிப் பேசின... சேகர் மாதிரி கணவன் கிடைச்சா நல்லதுங்கறதுன்னு சொன்ன... இன்னிக்கு என்னடான்னா அப்பா-அம்மா பார்த்துப் பண்ணினதுங்கறே...?" என்றான் மனோஜ்.

நான் கேட்க வேண்டிய கேள்வி.

திவ்யா சிரித்தாள்.

"அட அசடா... எனக்குக் காதல் கல்யாணத்தின் மேல் வெறுப்பு கிடையாதுன்னா, அப்பா - அம்மா பார்த்துப் பண்றதுல வெறுப்புன்னு அர்த்தமா? சேகர் மாதிரி ஹஸ்பெண்ட் கிடைச்சா நல்லதுதான். இப்பவும் சொல்றேன்.."

"நாங்ககூட நீ சும்மா சேகர் கூடவே கடலை போடறதப் பார்த்து உனக்கு சேகர் மேலே 'லவ்ஸ்'னுதான் நினைச்சோம்..." என்றான் விவேக்.

திவ்யா சிரித்தாள். நான் வியர்த்தேன்.

"காதலுக்கும் நட்புக்கும் வித்தியாசம் இருக்கு. என்னுடைய அபிப்ராயத்தில் காதலுக்கு வயதுண்டு... நட்புக்கு வயதில்லை.."

"அப்படின்னா...?" விவேக் விளக்கம் கேட்க ஆரம்பிக்க...

திவ்யாவின் இருபத்திரண்டு வயதும் எனது நாற்பத்திரண்டு வயதும் மின்னலாய்த் தோன்றி விடையை எனக்கு உணர்த்திவிட்டன. ●

"நான் மனசில் நிக்கிற ஆளு!"

'பிதாமகன்', 'உயிர்' படங்களின் தனது நடிப்பால் எல்லாத் தரப்பினரையும் கவர்ந்த சங்கீதா, இப்போது ராஜ் டீ.வி.யின் 'காசு மழை' நிகழ்ச்சியின் தொகுப்பாளினி.

'சினிமாவுல பேசப்பட்டுக் கொண்டிருக்கையில இது என்ன திடுதிப்புன்னு டி.வி.யில?' என்றால்,

"நடிப்பதைவிட இந்த மாதிரி கேம் ஷோக்களை நடத்த கொஞ்ச 'ஐ க்யூ' வேணுங்க. கூடவே நல்லா தமிழ் பேசவும் தெரியணும். இந்த ரெண்டும் எனக்கு இருக்குன்னு நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஸ்ட்ராங்கா நம்பினார். அதனால இந்த நிகழ்ச்சியை ஜாலியா பண்றேன்" என்கிறார் சங்கீதா.

'மத்த கேம்ஷோ காம்பியர் மாதிரி உங்க ட்ரெஸ்ஸிங் இல்லைங்கறது உங்களுக்குக் குறையா தெரியலையா?'

"குறைத்துப் போட்டால்தான் தவறு. சிம்பிளாக, கண்களை உறுத்தாத மாதிரி ட்ரெஸ் பண்றது அழகுங்க. என்னோட சிம்பிளான ட்ரெஸிங்கைப் பார்த்துட்டு இன்னொரு காம்பியர் 'நானும் இனிமே உன்னை மாதிரி சிம்பிளா ட்ரெஸ் பண்ணப் போறேன்'னு சொன்னாங்க தெரியுமா?"

'டீ.வி.க்கு வந்துட்டாலே, சினிமா வாய்ப்பு இல்லாததுதான் காரணமாயிருக்கும். நீங்க எப்படி?'

"தயாரிப்பாளர் என் குடும்ப நண்பர். அதனால ஒப்புக்கிட்டேன். டீ.வி.க்கு வந்துட்டா, மார்க்கெட் போயிடுச்சுன்னு அர்த்தமில்ல. எங்க நடிச்சாலும் மக்கள் மனசுல நிக்கறமாங்கறதுதான் முக்கியம். சமீபகாலமா தமிழில் நான் நடிச்ச படங்கள் பேசப்பட்டிருக்கே..."


'தனம்' படம் வந்த பிறகு என் கேரக்டர் மட்டுமில்ல, என் நடிப்புத் திறனோட முழு டைமென்ஷனும் ரசிகர்களுக்குப் புரியும்.

டீ.வி.யோ, சினிமாவோ எங்க இருந்தாலும் சங்கீதா முத்திரை பதிப்பா. அதுதான் அவ ஸ்டைல்" என்று 'பஞ்ச்' டயலாக் பேசியவர், "'காசுமேலே காசு' கொட்டணும்னு டீ.வி.க்கு வரலே. என் திறமை மேலே பாராட்டு கொட்டணும்னு வந்திருக்கேன்" என்றார் முத்தாய்ப்பாக.

- குட்டிக்கண்ணன்



ஓம் ஸ்ரீ சாயிராம்



அதிருத்ர மகாயக்ஞ அழைப்பிதழ்

உலகத்தில் அமைதியும், செழிப்பும் நிலவ, பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயிபாபா அவர்களின் தெய்வீகத் திருமுன்னிலையில், திருவான்மியூர், சென்னை-41ல் அதிருத்ர மகாயக்ஞம் 20 ஜனவரி 2007, சனி முதல் 30 ஜனவரி 2007, செவ்வாய்கிழமை வரை 11 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த யக்ஞத்தில் 11 ஹோம குண்டங்கள் அமைக்கப்பட்டு 140 வேதவிற்பன்னர்கள் (ரித்விக்குகள்) பங்கெடுத்துக் கொள்வார்கள்.

அனைவரும் இந்த யக்ஞத்தில் கலந்து கொண்டு பகவானின் பேரருளை பெறுவதற்கு அழைக்கின்றோம்.

சாயி இளைஞர்கள்
தமிழ்நாடு

மொபைல் போன் எடுத்து வருவதை தவிர்க்கவும்

அண்மையில் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி பி.என்.ஸ்ரீகிருஷ்ணா. தற்போது மத்திய அரசின் ஆறாவது சம்பள கமிஷனின் தலைவர். சென்னை வந்திருந்தவரிடம் பேசியதிலிருந்து...

மரண தண்டனைக்கு

ஒரு சாமானியக் குடிமகனுக்கு நீதி கிடைக்க, நீங்கள் காரணமாக இருந்த அனுபவம் உண்டா?

"நான் பிராக்டீஸ் செய்ய ஆரம்பித்த புதிதிலேயே எனக்கு அப்படி ஓர் அனுபவம் ஏற்பட்டது. ஒரு நிறுவனத்தில் ஸ்டெனோவாக வேலை பார்த்து வந்த ஒருவரை, திடீரென்று வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அவர் நீதிமன்றத்துக்குப் போனார். அவர் சார்பாக நான் ஆஜரானேன். இன்று நாட்டின் முன்னணி சட்ட நிபுணர்களாக இருக்கும் மூன்று வழக்கறிஞர்கள், அந்த நிறுவனத்தின் சார்பில் வாதாடினார்கள். இறுதி வெற்றி என் கட்சிக்காரருக்குத்தான்! இப்போதுகூட என்னை எங்காவது பார்த்தால், 'நீங்கள் மட்டும் அன்றைக்கு எனக்காக வாதாட முன்வராமல் இருந்திருந்தால், நான் அப்போதே தற்கொலை செய்து கொண்டிருப்பேன்' என்று சொல்லி உணர்ச்சிவசப்பட்டுக் காலில் விழுந்து விடுவார். எத்தனையோ வழக்குகளில் வாதாடி நிறைய பணம் சம்பாதித்திருந்தாலும் கூட... என் வாழ்க்கையில் இந்த கேஸ் எனக்கு அளித்த திருப்தி மகத்தானது!"

மும்பைக் கலவரத்தைப் பற்றி விசாரணை நடத்தியபோது எப்படி உணர்ந்தீர்கள்?

"அந்த நீதி விசாரணையில் பதினைந்தாயிரம் தஸ்தாவேஜுகளைப் படித்துப் பார்த்து, ஐநூற்று ஐம்பது பேரை சாட்சிகளாக விசாரிக்க வேண்டி இருந்தது. கர்ப்பிணிப் பெண்கள், கருவில் இருக்கும் குழந்தைகளைக் கூட வன்முறையாளர்கள் கொடூரமாகக் கொன்ற சம்பவங்களைக் கேட்டபோது நெஞ்சு வெடித்தது. அவற்றையெல்லாம் கேட்டுவிட்டு இரவு படுத்தால் தூக்கம் வராது."

நம் நாட்டில் இலஞ்ச, ஊழலுக்கு எதிரான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இதுவரை ஓர் அரசியல்வாதி கூட இலஞ்சம் வாங்கியதற்காகவோ ஊழல் செய்ததற்காகவோ தண்டிக்கப் படவில்லையே! இது ஏன்?


"ஓர் அரசியல்வாதி லஞ்சம் வாங்கினாரா, இல்லையா, ஊழல் செய்தாரா, இல்லையா என்பதை, ஒரு நீதிபதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்களின் அடிப்படையில்தான் முடிவு செய்து தீர்ப்பு வழங்குகிறார். அந்த ஆதாரங்களைத் திரட்டுவது யார்? அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள காவல் துறையும், அரசாங்கமும்தானே? நான் சமர்ப்பித்த விசாரணை கமிஷன் அறிக்கையில் கூட ஒரு சில அரசியல்வாதிகள், இன்னின்ன பிரிவுகளின்படி குற்றம் இழைத்திருப்பதற்காக அவர்கள் மீது வழக்குத் தொடரலாம் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அரசாங்கம் அவர்கள் மீது வழக்குத் தொடரவில்லை. இப்படித்தான் அரசியல்வாதிகளும் பணம் படைத்தவர்களும் தப்பித்து விடுகிறார்கள்."

அரசாங்கங்கள் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையே மதிப்பதில்லையே! உதாரணமாக காவிரி, முல்லைப் பெரியாறு பிரச்னைகள்...

"நமது அரசியல் சட்டம் அரசாங்கம்,

பி.என்.ஸ்ரீகிருஷ்ணா

சட்ட மன்றம், நீதித்துறை ஆகிய மூன்றுக்கும் என்னென்ன பணிகள் என்று திட்டவட்டமாக வரையறுத்துள்ளது. அதை மூன்று அமைப்புகளும் உணர்ந்து, அரசியல் சாசனப்படி செயல்பட்டால் எந்தப் பிரச்னையும் வராது. நீதித் துறையின் பணி, ஒன்று நடந்த பிறகு, அது சட்டப்படி சரியா, தவறா என்று விமர்சிப்பதுதான். ஆனால் இன்று நீதித்துறை, 'அரசாங்கம் இப்படி, செய்ய வேண்டும்; சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகியவை இப்படிச் செய்ய வேண்டும்' என்று மற்றவர்களது வட்டத்தில் மூக்கை நுழைத்து அறிவுறுத்த வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. ஒரு கிரிக்கெட் மேட்சில் ஓர் ஆட்டக்காரர் மிக மோசமாக விளையாடுகிறார் என்பதற்காக அம்பயர், தானே ஆட்டக்காரரிட



விவாதம் ஏன்?

மிருந்து கிரிக்கெட் மட்டையை வாங்கி ஆட ஆரம்பித்து விடலாமா? நீதிமன்றத்தின் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தாத அரசாங்கங்களை, நீதிமன்றத்தால் என்ன செய்ய முடியும்?"

மரண தண்டனை சர்ச்சைகள் குறித்து உங்கள் கருத்து என்ன?

"உச்சநீதிமன்றம் விசாரித்து ஒருவருக்கு மரண தண்டனை அளித்துள்ளது. மத்திய மந்திரிசபையின் ஆலோசனையின் பேரில் அதனை மறுபரிசீலனை செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்கள் முடிவு எடுக்கட்டும்; மற்றவர்கள் மேடைகளிலும் டெலிவிஷன்களிலும் எதற்காக விவாதம் செய்ய வேண்டும்?"

நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்குப் பல வருடங்களாகின்றனவே, ஏன் இத்தனை கால தாமதம்?

"போதுமான நீதிபதிகள் இல்லை; நீதிமன்றங்களில் அடிப்படை வசதிகள் இல்லை. இன்னொரு பக்கம், நாட்டில் பல புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அதற்கேற்ப புதிய புதிய வழக்குகள் போடப்படுகின்றன. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான குடும்பக் கட்டுப்பாட்டைப் போல புதிய சட்டங்கள் கொண்டு வருவதிலும் கட்டுப்பாடு அவசியம்."

- எஸ். சந்திரமௌலி

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

கொசு

இருபத்தி மூன்று வயதில் தனக்கு மீண்டும் வேறொரு பெயர் வைக்கப் படும் என்று சாந்தி நினைத்துப் பார்க்கவே இல்லை.

“பேர மட்டும் தமிழ்ப் பேரா மாத் திருவோங்க. இந்த ஒரு கண்டிசனுக்கு நீங்க சம்மதிச்சித்தான் ஆவணும்.”

பெண் பார்த்துவிட்டு, முத்து ராமனின் அப்பா இளம்புமுன் கைகூப் பியபடி சொல்லிவிட்டுப் போன காட்சி அவளுக்கு நினைவுக்கு வந்தது. தன்னையறியாமல் சிரித்துக் கொண்டாள். சா-ந்-தி தமிழ்ப் பெயர் இல்லையா இது? வேறென்ன பெயர்? இங்கிலீஷா? இந்தியா? தெலுங்கு?

அவளது தந்தை சந்தேகமாகக் கேட்டபோது, முத்துராமன்தான் விளக்கம் சொன்னான். அது வடமொழியாம்.

“த... என்னா செலவானாலும் செரி. மொதல்ல ஒலைய மாத்திரணும். பொண்ணுக்குக் கல்யாணம் வெச்சிக்கிட்டு இப்பிடி உளுத்த ஓலையோட நின்னம்னா நாலு பேரு காறித் துப்பு வானுங்க. வாழ மண்டி கணேசன் நாத் தம்பது ரூவா தர்றேன்னான். நீ வேலை பாக்கற வூடுங்கள்ல கேட்டுப்பாரு” - காது மடிப்பிலிருந்து பீடியை உருவிப் பல்லில் கடித்தவண்ணம் தன் முடிவைச் சொல்லிவிட்டு சாந்தியின் அப்பா குடிசைக்கு வெளியே போனார்.

அவர் ஓட்டுகிற மீன்பாடி வண்டி தன் சக்திக்கு உட்பட்ட வருமானத் தைக் கொடுக்கவே செய்கிறது. ஆனா லும் நான்கு வயிறுகளுக்கு அது போது மானதல்ல. சாந்தியும் அவளது அம்மாவும் தெரிந்தவர்கள் வீட்டில் வேலை செய்யலாம் என்று முடிவு செய்து தொடங்கியபோது, அவளது தங்கை சரோஜாதேவி ஏழாம் வகுப்பில் படித் துக்கொண்டிருந்தாள். முத்துராமனின் தந்தையைப் போல யாரோ ஓர் உள்ளூர் அரசியல்வாதிதான் அதட் டல் போட்டு அவளைப் பள்ளிக்குக் கொண்டுவிட்டார். படிப்பு வந்தால் படிக்கட்டும். குறைந்தபட்சம் ஒரு வேளை உணவு உறுதி.

பெரும்பாலான தினங்களில் காலி யாகவே இருக்கிற பாத்திரங்கள், மளி கைச் சாமான்களுக்கான பிளாஸ்டிக் டப்பாக்கள், கிழிந்து தொங்குகிற சாயம்போன உடைகள் அடங்கிய, ஒரு சிறு தூறலுக்கும் தாக்குப் பிடிக்க வக்கில்லாத நொறுங்கிய குடிசைதான் அவர்களுடையது.

அப்பா பேச்சுக்கு அம்மா ஏதும் பேசவில்லை. ஓலை மாற்றுகிற விஷ யத்தில் அவள் பெரும்பாலும் தேர்தல் களையே நம்பியிருப்பாள். வோட்டுக் கேட்டு வருகிற மகராசன்களில் யாரா வது ஒருவர் இதுநாள் வரை அந்தப் பிரச்னையைத் தீர்த்துக்கொண்டிருந் தார். வீட்டுக்கு ஓலை. தண்ணிக்குக் குடம். சென்ற முறை யாரோ ஒருவர் சூட்கேஸ் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போனார்.

“நீ ஜெயிச்ச வந்தா வேல குடுக் கறியோ என்னமோ, ஊட்டுக்குள்ளாற வெயிலு, மள வந்து ஊத்தாம கூரை மாத்த கொஞ்சம் ஏற்பாடு பண்ணு கண்ணு. ஒனக்குப் புண்ணியமாய் போவும். கண்டிசனா ஒனக்குத்தான் என்

வோட்டு" என்று வோட்டு கேட்டு வருபவரை ஓர் உலுக்கு உலுக்கிவிடுவாள்.

ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் குடிசையின் கூரையை அம்மா எத்தனை திறமையாக மாற்றிவிடுகிறாள்! சாந்திக்கு அது எப்போதும் தீராத வியப்பு.

''வேற வழியில்லடி. வாயுள்ள புள்ளதான் பொழைக்கும். நாய் உள்ள வூட்லதான் திருட்டு நடக்காது. இந்த வூட்டுக்கு வாயும் நாந்தான்; நாயும் நான்தான். உங்க ரெண்டு பேத்துக்கும் எவனையானா ஒருத்தன புடிச்சிக் கட்டி வெச்சிட்டேன்னா போதும்.''

''எதுக்கும்மா? நீ ஒருத்தி படற கஷ்டம் போதாதா?''

''அட போடி போக்கத்தவளே. கஷ்டக்கணக்கு பாத்திருந்தன்னா கால் வயிறு கஞ்சிகூட கெடைச்சிருக்காது. என்னா கெட்டுப்போச்சு இப்ப? த...ரெண்டு பேரும் பனமரத்துல

2





"மன்னா, பக்கத்து நாட்டு அரசர் நம் மீது படையெடுத்து வருவதாய் ஓலை அனுப்பியுள்ளார்"

"என்ன தைரியம்! சரி, நாமும் வேறொரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதாய் பதில் ஓலை அனுப்புங்கள்."

- ஆர்.ஸ்ரீ.

பாதியா எந்திரிச்சி நிக்குறீங்கல்ல? நாம பெத்ததுன்னு ஒரு இது மனசுக்குள்ளார வருதில்ல? இதுக்கு மேல இன்னா வேணும்? காசு பணம் பாதில போனாத்தாண்டி கஸ்டம். பாத்ததே இல்லன்னா, அதுவும் சாமி மாதிரி தான். எப்பயாச்சும் வரம் குடுக்கும்னு கனா கண்டுக்கினே போய்க்கினு இருக்க வேண்டியதுதான்."

பெண் பார்க்க வந்திருந்த முத்துராமன் குடும்பத்தினரிடமும் அம்மா இதைத்தான் சொன்னாள். கோயிலில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்ற போது மட்டும் முத்துராமனும் அவனது தந்தையும் மறுத்துவிட்டார்கள்.

"அதெல்லாம் வேணாம்மா. எங்க காலனில, எங்க பேட்டைல, நடு ரோட்டுல மேடை போட்டு நடத்தறதுதான் எங்களுக்கு வசதி. ஏற்கெனவே எங்க மாவட்டச் செயலாளராண்ட பேசியிருக்கேன். வந்து நடத்திக் குடுக்கறேன்னிருக்காரு. மைக்கு செட்டு செலவெல்லாம் எங்களோடது. கட்சிக் காரங்க நூறு பேரு வருவாங்க. பிரியாணி போட்டா சந்தோசப் படுவாங்க. நாம சாம்பார் சாதம் போட்டாக்கூட போதும். அந்தச் செலவ மட்டும் பாதியா பிரிச்சிக்குவம்" என்றார் முத்துராமனின் அப்பா.

தேர்தல் சமயங்களில் வோட்டுக் கேட்டு வரும் வேட்பாளர்களைத் தவிர, சாந்திக்கு அரசியலில் ஏதும் தெரியாது. தன் எதிர்காலக் கணவன் ஓர் அரசியல்வாதி என்பது அவளுக்குப் புதிதாக இருந்தது. வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டையில் வலம் வரக்கூடியவன். இப்போதைக்கு பைக் வைத்திருக்கிறான். சைதாப்பேட்டையில் நடக்கிற கட்சிக் கூட்டங்களில் முதல் வரிசையில் அவனைப் பார்க்கலாம். ஓரிரு முறை மேடை ஏறி யாரையோ வழிமொழிந்திருப்பதாகவும் சொன்னார்கள். 'எப்படியும் அடுத்த கார்ப்பரேசன் எலக்சன்ல கவுன்சிலராயிருவான்' என்று அவனது அம்மா சொன்னபோது கேட்க வினோதமாக இருந்தது அவளுக்கு. எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்கள் வரும்முன், மாப்பிள்ளை ஒரு டெய்லர் என்று மட்டுமே அவளுக்குச் சொல்லப் பட்டிருந்தது. அதனாலென்ன? டெய்லர் கவுன்சிலராகலாம். கவுன்சிலர் சேர்மன் ஆகலாம். சேர்மன் எம்.எல்.ஏ. ஆகலாம். அதிர்ஷ்டம் மட்டும் உடன் வர வேண்டும்.

'அப்பிடி இல்லீங்க. இது உழைப்புங்க. ராப்பகலா உழைக்கணும். கஸ்டம் பாக்காம உழைக்கணும். அரசியல் சுலபமில்லீங்க. நான் ட்ரை பண்ணேன். மேலுக்கு வர முடியல. எம் புள்ள வந்துருவான். அது நிச்சயம். அவன ஒரு எம்.எல்.ஏ. ரேஞ்சுக்கு நிக்க வெச்சிப் பாக்காம இந்தக் கட்ட போய்ச் சேராது. அது மட்டும் நிச்சயம்!"

கண்ணில் பற்றி எரிந்த கனவுடன் அவனது அப்பா பேசியது சாந்திக்கு வியப்பாக இருந்தது. புதிய மனிதர்கள், புதிய உறவு, புதிய இடத்துக்குப் போக ஆயத்தமாக வேண்டிய தருணம். பரவாயில்லை, ஓரளவு நல்ல குடும்பமாகத் தெரிகிறார்கள். ஒப்பீட்டளவில் சற்று வசதியானவர்களாகவும்கூட. ஆனால் விடாப்பிடியாக ஏன் பெயரை மாற்ற நினைக்கிறார்கள்?

"தப்பா நெனச்சிக்காதீங்கம்மா. நம்மளுக்குத் தமிழ்தான் எல்லாம். எம்பேரு தமிழரசன். இவனுக்கு முத்து ராமன்னு பேரு வெச்சது இவனோட அம்மா. மொத புள்ள பாருங்க. அதத் தான் வெச்சித் தீரணும்னு கண்டிசனா சொல்லிட்டா. ரெண்டாவது புள்ளைக்கி தமிழ்க்கனல்னு தலைவர் வந்து பேரு வெச்சி முக்கா பவுன்ல செயின் போட்டுட்டுப் போனாரு. பொண்ணு பொறந்தா தமிழ்ச்செல்வின்னு வெக்கணும்னு நெனச்சேன்; புள்ளையாயிட்டான். என்னோட மருமவளா வரவளுக்குத் தமிழ்ப் பேரா இருக்கறதுதான் எங்களுக்குப் பெருமை, கௌரவம்."

அப்பாவோ, அம்மாவோ இதற்கு இலேசான மறுப்புத் தெரிவிக்கலாம் என்று சாந்தி நினைத்தாள். ஆனால் இருவருமே அமைதியாகத்தான் இருந்தார்கள். பரபரவென்று மேற்கொண்டு ஆக வேண்டியவை குறித்துப் பேசி விட்டு, தை பிறந்ததும் திருமணம் என்று முடிவு செய்து, காபி சாப்பிட்டார்கள்.

"ஜனவரியில பாளையங்கோட்டைல ஒரு மாநாடு இருக்குதுங்க. இன்னும் தேதி முடிவாகல. அது தெரிஞ்சதும் சொல்லி அனுப்புறோம். அதுக்குப் பிரச்னை வராம கல்யாணத் தேதிய வெச்சிக்கங்க" என்று புறப்படும் போது முத்துராமன் சொன்னான்.

வாசல்வரை சென்று வழியனுப்பி விட்டு உள்ளே வந்ததும் அம்மா அவளை இழுத்து திருஷ்டி கழித்தாள்.

"விடிஞ்சிதுடி ஒனக்கு. நல்ல எடம். மாப்ள படிச்சவரா இருக்காரு. கௌரவமான குடும்பம். அவங்கப்பாரு எவ்ளோ தன்மையா பேசுறாரு, பழகுறாரு பாத்தியா?"

"அதெல்லாம் சரிம்மா... பேர எதுக்கு மாத்தணுங்கறாங்க?"

"இந்தப் பேர வெச்சிக்கிட்டு என்னா சொகத்தக் கண்டுட்ட? மாத்திக்கிட்டுப் போயேன். நான் அவங்கம்மாவாண்ட விசாரிச்சுட்டேன். இந்தப் பொண்ணு ஓ.கே. ஆனா வள்ளி மயில்னு பேரு வெக்கறதா அவங்கப் பாரு முடிவு பண்ணியிருக்காராம். அதுவும் சாமி பேருதான். நல்லா இருக்கில்ல?"

வள்ளிமயில். அட! இது என்ன பெயர்? அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் சாந்தியை விடவுமா என்று தெரியவில்லை. முத்துராமன் தன்னை எப்படிக் கூப்பிடுவான்? வள்ளி என்றா? மயில் என்றா? சாந்தி அனிச்சையாக எழுந்து கண்ணாடி முன் சென்று நின்று சில வினாடிகள் தன்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். பெரிய பேச்சுவார்த்தைகளோ, விவாதங்களோ, அபிப்பிராய மாறுதல்களோ இல்லாமல் சுமுகமாகத் திருமணம் பேசி முடிவு செய்யப்பட்டது அவளுக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தது. நேற்று வரை நினைத்துப் பார்க்கவில்லை. எல்லாம் சடாரென்று கூடி வந்து முடிந்துவிட்டது.

இனி என்ன? எக்மோரிலிருந்து சைதாப்பேட்டைக்கு 23C இருப்பதாக அப்பா சொன்னார். ஏறிக் குந்திக்கினா அர அவரு. அவ்ளதானே?

"த... பஸ்ஸு இன்னாத்துக்கு? அதான் மாப்ள பைக்கு வெச்சிக்கிறாருன்னு சொன்னாங்கல்ல?" என்றாள் அம்மா.


தன் மனத்தில் முத்துராமனும் அம்மாவின் மனத்தில் அவனுடைய பைக்கும் சரியாகப் பொருந்தி அமர்ந்தது பற்றி யோசித்துக்கொண்டே வெளியே வந்தாள் சாந்தி.

(தொடரும்)

"எதுக்காக ஆபீசுக்கு லீவு கேட்கறீங்க?"

"இன்னிக்கு ஒரே சீரியல்ல நாலு டெத்து சார்!"

- அம்பை தேவா



இந்திய டென்னிஸ் வீரரான கரன் ரஸ்டோகி சென்ற வாரம் சென்னை முழுக்க 'சென்னை ஓபன் டென்னிஸ்' போட்டிப் பற்றியே பேச வைத்துவிட்டார். இத்தனைக்கும் லியாண்டர் பெயஸ், மகேஷ் பூபதி இருவரும் இந்த வருடம் ஆப்சென்ட். இருந்தும் டோர்னமென்ட் களைகட்ட காரணம் ஸ்பெயின் வீரரும் உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரருமான ரஃபெல் நடால்.

இந்த ஸ்பெயின் இளம் சிறுத்தையை இரண்டாவது ரவுண்டில் சந்தித்தார் இந்திய இளம் புயலான கரன் ரஸ்டோகி. வயதுதான் இருவருக்கும் ஒன்றே தவிர ரேங்கிங்கில் ஏணி வைத்தாலும் எட்ட முடியாத உயரத்தில் இருப்பவர் நடால். சுலபமாகத் தோற்கப்போகிறார் என்று அனைவருமே எதிர்பார்த்த சமயத்தில் முதல் ரவுண்டில் தம் கட்டி ஆடி 4 - 4 என்கிற ஸ்கோரை எட்டினார் ரஸ்டோகி. நுங்கம்பாக்கம் ஸ்டேடியம் மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டது. உலகின் இரண்டாம் நிலை வீரரோடு சரிக்குச் சமமாக நிற்பதென்பது இலேசுபட்ட காரியமா என்ன? இறுதியில் நடாலின் வியர்வையை விட்டர் விட்டராகக் கொட்ட வைத்த பிறகே 4 - 6, 1- 6 என்கிற செட் கணக்கில் அவரிடம் சரணடைந்தார் ரஸ்டோகி.

இந்த ஆட்டத்தைப் பார்த்த அனைத்து டென்னிஸ் பிதாமகன்களும் ஒப்புக் கொண்ட விஷயம், நாளைய இந்திய டென்னிஸின் நம்பிக்கை நட்சத்திரம் நிச்சயம் ரஸ்டோகி என்பதுதான்.

சரி, எங்கிருந்து இந்தப் புதுப் பையன் திடீரென்று முளைத்தார்?

ரஸ்டோகி ஒரு மும்பைவாசி. மூன்று வயதில் பிளாஸ்டிக் மட்டையில் டென்னிஸ் ஆடிப் பயிற்சியாளர்களைக் கவர்ந்து டென்னிஸுக்குள் நுழைந்தவர். அதன் பிறகு ரஸ்டோகிக்கு வாழ்க்கையே அடியோடு மாறிவிட்டது.

சிறு வயதில் பயிற்சியாளருடன் ஆடும் ஆட்டங்களில் அவரைத் தோற்கடிக்காமல் வீடு திரும்ப மாட்டாராம் ரஸ்டோகி. "பல சமயங்களில் பயிற்சியாளரே ஆட்டத்தை எனக்காக விட்டுக் கொடுத்து விடுவார். பின்னே அப்போதுதானே அவரும் வீடு போய்ச் சேர முடியும்!" என்று சிரிக்கிறார் இவர்.




நம்பிக்கை

ஏழு வயது முதல் உள்ளூர் மற்றும் தேசியப் போட்டிகளில் ஆட ஆரம்பித்த ரஸ்டோகிக்குத் தோல்விதான் ஆரம்பப் பரிசாக் கிடைத்திருக்கிறது. சுமை தாங்காமல் ஒரு நாள் பெற்றோரிடம் இவ்வாறு கேட்டிருக்கிறார் "அம்மா என்னால் டென்னிஸில் பிரகாசிக்க முடியாமல் போனால் என்ன செய்வது?" அப்போது அவர் அம்மா அவருடைய தலையைக் கோதியபடி, "செல்லமே, உன் கனவு என்னவோ அதை நனவாக்க முயற்சி செய். டென்னிஸ் உனக்கு மறந்துபோகும் வரைக்கும் ஆடு.

நீ எத்தனை முறை தோற்று வந்தாலும் பரவாயில்லை. இருக்கவே இருக்கிறது நம்முடைய ஃபேமிலி பிஸினஸ்" என்று ஆறுதல் சொல்லியிருக்கிறார்.

ஆரம்பத் தோல்விகள் ரஸ்டோகிக்கு நல்லாசிரியர்களாக இருந்திருக்கின்றன. விழுப்புண்களால் ஆட்டத்தின் நுணுக்கங்களை நன்கு கற்றுக்கொண்ட ரஸ்டோகி 2004ஆம் ஆண்டின் ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் ஜூனியர் பிரிவில் செமிஃபைனல் வரைக்கும் முன்னேறியிருக்கிறார்.

ஒவ்வொரு கோடையின்போதும் அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற நிக் பொலேட்டரி டென்னிஸ் அகாடெமியில் பயிற்சி எடுக்கிறார் ரஸ்டோகி. அங்கு ஒருமுறை நடந்த பயிற்சி ஆட்டத்தில் விம்பிள்டன் சாம்பியனான மரியா ஷரபோவாவைத் தோற்கடித்ததை இன்னமும் மறக்காமல் இருக்கிறார். "தாம் ஒரு ஸ்டார் என்கிற நினைப்பிலேயே இருப்பார்



நட்சத்திரம்!

அவர். ஆட்டத்தின் முதல் கேமில் தோற்றவுடனே எனக்கு வீரம் வந்தது. ஒரு பெண்ணிடம் தோற்பதா என்று 'ஈகோ' எழுந்தது. நல்லவேளையாக அந்த ஈகோ எனக்கு அன்று வெற்றியையேத் தேடிக் கொடுத்தது" என்கிறார்.

இதுவரைக்கும் சத்தமில்லாமல் ஆடிக்கொண்டிருந்த ரஸ்டோகிக்கு சென்னை ஓப்பன் ஒரு பெரிய வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறது. "அருமையாக ஆடுகிறார். என்னைக் கொஞ்சம் தடுமாறச் செய்துவிட்டார்" என்று நடாலிடமே பாராட்டுப் பத்திரம் வாங்கியிருக்கிறார் என்றால் சும்மாவா!

வியாண்டர், மகேஷுக்குப் பிறகு ரஸ்டோகி, பொபன்னா, பிரகாஷ் அமிர்தராஜ் என்ற மூன்று இளைஞர்கள் கரங்களில் தான் இந்திய டென்னிஸ் தவழ இருக்கிறது. மற்றவர்களைப் போல ரஸ்டோகி எந்த வெளிநாட்டு வீரரையும் பூஜிப்பதில்லை. தம்முடைய ஆதர்ச நாயகனாக லியாண்டர் பெயஸையே ஏற்றுக் கொள்கிறார்.

"நாட்டுக்காகப் பதின்மூன்று வருடங்களாக உழைத்துக் கொண்டிருக்கிறார் பயஸ். இந்தப் பதின்மூன்று வருடங்களும் அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்து பயிற்சிக்குச் செல்கிறார். இந்த உழைப்பும் கட்டுப்பாடும் எனக்கு இருந்தால் போதும். என் கனவு நனவாகிவிடும்" என்கிறார் ரஸ்டோகி.

தொகுப்பு : ச.ந.கண்ணன்

காவ்யா

சென்ற வாரம் இந்தப் பகுதியில் பேசின சுஜனா, டி.வி. பக்கமே போகாதீங்கன்னு சொன்னாங்க. ஆனா என் அட்வைஸைக் கேட்டா நீங்க ஆச்சர்யப்படுவீங்க. என் சீக்ரட் ஆஃப் சக்ஸஸ் கொஞ்சம் வித்தியாசமாத்தான் இருக்கும்.

ஜனவரி வந்தாச்சு. மார்ச் முதல் தேதி பப்ளிக் எக்ஸாம். அதனால அடுத்த மூணு மாதங்களில் எப்படிக் கவனமா படிக்கணும்னு நான் டிப்ஸ் தர்றேன். இதுக்குப் பிரதியுபகாரமா உங்க வெற்றியை எனக்கும் டெடிகேட் பண்ணுவீங்கதானே!

ஜனவரி - டிப்ஸ் மாதம்!

ஜனவரி முதல் தேதி எல்லோருக்கும் குதூகலமாகவும் ஆர்ப்பாட்டமாகவும் இருந்திருக்கும். ஆனால் ப்ளஸ் டூ படிக்கிற மாணவர்களுக்கோ 'அடடா ஜனவரி வந்திருச்சே, இன்னும் ரெண்டு மாசம்தானே இருக்கு'ன்னு நெகத்தைக் கடிச்சுட்டு இருப்பாங்க. இதற்கான சுலபத் தீர்வு - வரும் முன் காப்போம். கடைசி நேரத்துல மாங்கு மாங்குன்னு படிக்காம ஜனவரியிலேயே நூறு சதவிகித உழைப்பைக் காட்டுங்க. கைடு எல்லாத்தையும் ஓரங்கட்டிட்டு பகவத் கீதையைப் படிக்கிற மாதிரி முழுப் பாடப் புத்தகத்தையும் ஆழமாவும் அர்த்தம் புரிஞ்சும் படிங்க. கிடைக்கிற விடுமுறைகள்ல மேத்ஸ் சம் எல்லாம் போட்டுப் பாருங்க. இந்த வருடம் நுழைவுத் தேர்வு இல்லாததால் முழு மதிப்பெண்கள் பார்த்து சீட் கிடைக்கிற நிலைமை உருவாகலாம். ஆங்கிலத்திலும் தமிழிலும் கொஞ்சம் கவனம் செலுத்தினா, அது நம்ம டோட்டலை எங்கேயோ கொண்டு போயிடும்.

ஆறு பாடங்கள் இருக்கு இல்லையா, இதுல ஏழு நாட்களை தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் ஒதுக்கிடுங்க. மீதி இருக்கிற நாட்களை சரிசமமா மத்த பாடங்களுக்குப் பகிர்ந்துக்குங்க.

• காவ்யா



பிப்ரவரி - புறக்கணிப்பு மாதம்!

இந்த மாதம் ஓரேடியா படிக்காம தொண்ணூறு சதவிகிதம் உழைச்சா போதும். மார்ச் மாதம் தேர்வுங்கிறதால இந்த மாசம்தான் நீங்க கவனமா இருக்கணும். உடலையும், மனசையும் தேர்வுக்கு மெள்ளத் தயார்ப்படுத்துங்க.

இருபத்தைந்தாம் தேதிக்குப் பிறகு மொழிப் பாடங்களைத்தான் படிப்பீங்க. அதனால அதிகபட்சமா இருக்கிற இருபத்தைஞ்சு நாட்கள்ல அதிக மார்க் வாங்க வேண்டிய நடவடிக்கைகளில் இறங்குங்க. ஜனவரியில நடந்த ரிவிஷன் தேர்வுகள்ல குறைந்த மதிப்பெண்கள் எடுத்திருந்தா இடிஞ்சு போக வேண்டாம். போன வருஷம் எனக்கும் இதே நிலைமை தான் ஏற்பட்டுச்சு. ஆனாலும் கலங்காம உடனடியா என் தவறுகளைத் திருத்தினேன். ஸ்டேட் ஃபர்ஸ்ட் வந்தேன்.

பிப்ரவரி முதல் இரண்டு வாரங்கள்ல அரசாங்கத்தோட டி.பி.ஐ. கேள்வித்தாள்களை நல்லா எழுதிப் பழகுங்க. இருநூறுல ஐம்பது மதிப்பெண்கள் ஒரு மார்க் கேள்விகளாக இருக்கும். அதைச் சரியா செய்தாலே உங்க விடைத்தாள் ரொம்ப அழகா இருக்கும். இந்த மாதம் வேண்டும் என்றே தூக்கம் வரத்தான் செய்யும். அந்தச் சமயங்கள்ல அட்டகாசமா தேர்வு எழுதி நல்ல மதிப்பெண்கள் வாங்கி நாளைக்கு உங்க தெருவுல நீங்க கம்பீரமா நடந்து போகிற காட்சியை நினைச்சுப் பாருங்க. தூக்கம் தன்னால ஓடிப்போயிடும். ரிலாக்ஸ் பண்ணிக்கொள்ள கோயிலுக்குப் போகலாம்;

மாணவர்களே மாணவர்களுக்கு வழிகாட்டும் தொடர் 2

வேண்டாம். ஞாயிறு இரவே புத்தகத்தை மூடிப் பரணில் வைச்சுடுங்க. தேர்வு சமயங்கள்ல எந்தக் குளறுபடியும் வேண்டாம். பேனாவைக் கூட எழுதிப் பார்த்த பிறகு தேர்வுக்கு எடுத்துட்டுப் போங்க.

முதல் தேர்வு மட்டும்தான் படபடப்பா இருக்கும். இந்தக் கிணற்றைத் தாண்டிட்டா, அப்புறம் மத்த எல்லாத் தேர்வுகளும் நமக்குப் பழகிடும். மிக முக்கியமா, தேர்வுக்குச் செல்லும் வழியில் நண்பர்களிடம் தேர்வு பற்றிப் பேசவே பேசாதீங்க! அதேபோல தேர்வு முடிந்த பிறகும் எது எது சரியாகச் செய்திருக்கிறீர்கள் என்றும் அலசி ஆராய வேண்டாம். உடனே அடுத்த தேர்வுக்கு உங்க மன



+2 படபடப்பு வேண்டாம்!

யோகா பண்ணலாம்.

மார்ச் - உஷார் மாதம்!

தேர்வு மாதம். நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்யும் மாதம். திங்கட்கிழமை தேர்வு என்றால், அன்றைக்குக் காலையில் புதிதாக எதையுமே படிக்க

நிலையை மாத்திடுங்க. சைக்கிளில் செல்லும்போது படிப்பது, மரத்தடியில் கடைசி நேரத்தில் விறுவிறுப்பாகப் படிப்பது போன்ற எந்தப் போர்க்கால நடவடிக்கைகளும் வேண்டவே வேண்டாம்.

- ச.ந.கண்ணன்

சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள ஸ்ரீ அகோபில மடம் பள்ளியில் படித்த காவ்யா, 2006ஆம் வருடத் தேர்வில் 1186 மதிப்பெண்கள் எடுத்து 'ஸ்டேட் ஃபர்ஸ்ட்' வந்தார். இப்போது சி.ஏ. படித்துக் கொண்டிருப்பவரின் கனவு, கருப்பு கோட் அணிவது!



சுகம் சேர்க்கும் ஸ்ருதிலயா!

வீணைகளின் அணிவகுப்பு, வயலின்களின் தோரணம் என வாத்தியங்களின் சங்கமமாய் இருக்கிறது ஸ்ருதிலயா நிறுவனம். சற்று ஓய்வாக வாடிக்கையாளர்களிடம் பேசிக்கொண்டிருந்த லக்ஷ்மணகோஸ்வாமியிடம், 'திருவிழா முடிந்த களைப்போ...' என்றால்,

"டிசம்பர் வரப்போகிறது என்றாலே நாங்கள் ஜுரூராகிவிடுவோம். சீசன் விழாக்களுக்கு வருபவர்கள், வெளிநாட்டுக்காரர்கள், ரெகுலர் கஸ்டமர்கள் என்று நிற்க நேரம் இருக்காது. இப்பத்தான் ஒரு வழியாக கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகி இருக்கோம்'' என்றார் பூரிப்புடன்.

• லக்ஷ்மணகோஸ்வாமி



'எல்லாவித வாத்யக் கருவிகளும் உங்களிடம் கிடைக்குமா?'

"எலெக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட எல்லா வாத்யங்களும் இருக்கின்றன. ஆனால் 1989ல் மயிலாப்பூரில் ஸ்ருதிலயா ஆரம்பிச்சதோட நோக்கம் வீணைகளை ஏற்றுமதி பண்ணுவதற்காகத்தான். அப்புறம் கஸ்டமர்களை நிறைவு செய்யும் பொருட்டு எல்லாவித வாத்தியக் கருவிகளையும் விற்பனை செய்ய ஆரம்பித்தோம்" என்றவர்,

"வருடா வருடம் சிலச் சில புதுமைகளைச் செய்து வீணைகளை அறிமுகப்படுத்துவதே எங்களது வழக்கம். 2005ல் ரத்தின வீணையையும், 2006ல் சங்கு வீணையையும் அறிமுகம் செய்துள்ளோம். வீணையைச் சுற்றி பிளாஸ்டிக் ஷீட்டால் செய்யப்பட்டு வந்ததை மாற்றி, முதன் முதலாக மரத்தால் டிசைன் செய்தது நாங்கள்தான்" என்றார். வீணை செய்வதில் உள்ள கஷ்டங்களையும் அவர் குறிப்பிட மறக்கவில்லை.

''வீணை செய்



வ்தற்கு முதலில் பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட பலா மரங்களைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்கு வேர்ப் பலாதான் பொருத்தமானது. மரத்தைத் தேர்வு செய்த பின், கைவேலைப்பாட்டின் மூலமாக வீணையைத் தயாரிக்க வேண்டும். எதிரும் புதிருமாக வேர்கள் ஓடுவதால் இயந்திரம் உதவாது. இன்னொன்று, கைவேலைப்பாடு உள்ள வீணையைத்தான் வெளிநாட்டவர் அதிகம் விரும்புகின்றனர். இதற்கென இருக்கும் கலைஞர்களைக் கொண்டு செய்யப்படும் எங்களின் தயாரிப்புகள் தரத்திலும், அழகிலும் உயர்வாக அமைந்திருக்கின்றன'' என்றார்.

விலை விவரங்களைப் பற்றிக் கேட்டால்...

''ஆறாயிரம் தொடங்கி அறுபதாயிரம் ரூபாய் வரை வீணைகள் இருக்கின்றன. தஞ்சையில் தயாரிக்கப்பட்டு வரும் எங்களது வீணைகள், கொடுக்கும் பணத்தைவிட மதிப்பு வாய்ந்தது என்பதை எங்களால் உறுதியாகக் கூற முடியும். சொந்த ஊரில் இருந்தபடியே பெற்றுக்கொள்ள விரும்பும் வாடிக்கையாளருக்கு டோர் டெலிவரியும் இப்போது செய்கிறோம்'' என்றார்.

'வாத்யக் கருவிகள் எலக்ட்ரானிக்ஸ் மயமாகிவிட்டனவே...'

''ஆரம்பத்தில் இது குறித்த எதிர்ப்புகள் இருந்தன. கற்றுக்கொள்வதற்கு பலருக்குப் பொறுமை இல்லை. விரைவாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். என்னதான் எலெக்ட்ரானிக் கருவிகள் வந்தாலும் வீணை, தம்புரா, புல்லாங்குழல் இசைக்கு ஈடாகாது'' என்கிறார் லக்ஷ்மணகோஸ்வாமி, ஒரு புல்லாங்குழலை எடுத்து வாசித்தபடி.


- தர்ஷிணி

படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**

'பில்கேட்ஸ் ஹீரோவா, வில்லனா?' என்கிற பில்லியன் டாலர் கேள்விகளுக்கு ஒரே வரியில் பதில் சொல்லிவிடலாம்... அதீத புத்திசாலித்தனமும், கூடவே சின்னப் பிள்ளைத் தனமும் ஏதோ ஒரு மந்திர விகிதத்தில் கலந்த விநோதக் கலவைதான் பில்கேட்ஸ்.

1955 அக்டோபர் 28-ஆம் தேதி, சியாட்டில் நகரில் பிறந்த பில் கேட்ஸ், துறுதுறு குழந்தையாக வளர்ந்தார்.

படிக்கும் வயது வந்ததும் அவரைப் பள்ளியில் சேர்த்து விட்டார்கள். தன்னுடைய வகுப்பில் மற்ற பையன்களை விட பில் கேட்ஸ் சின்னஞ் சிறுவனாக இருந்ததால், அவ



* இளவயதில் தாயுடன் பில் கேட்ஸ்...

பில் கேட்ஸ் சாதனை சரித்திரம்

2

ரால் பிற மாணவர்களோடு ஒன்றாகச் சேர்ந்து பழக முடியவில்லை. அதனால் நெருங்கிய நண்பர்கள் கிடைக்கவில்லை. இந்த ஆரம்ப இடைவெளி, அடுத்தடுத்த வகுப்புகளில் மேலும் அதிகமானது.

பில் கேட்ஸின் இந்த நுணுக்கமான பிரச்னையை யாரும் கவனிக்கவில்லை. ஆனால், பையன் தேர்வுகளில் மதிப்பெண் குறைவாக வாங்குகிறானே என்று பெற்றோர் கவலைப்பட்டனர்.

படிப்புப் பிரச்னை ஒரு பக்கமிருக்க, வீட்டிலும் பில் கேட்ஸின் பிடிவாதம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டிருந்தது. பெற்றோரின் பேச்சைக் கேட்பதே இல்லை. அவர்கள் என்ன சொன்னாலும் அதற்கு நேரெதிராக ஏதாவது செய்து கொண்டிருந்தார்.

பையன் நிஜமாகவே மந்தம் என்றால், கூடுதலாக ட்யூஷன் வைத்துத் தேற்றப் பார்க்கலாம் அல்லது வேறொரு நல்ல பள்ளியில் சேர்க்கலாம். ஆனால், இப்படி துறுதுறுவென்று திறமையை ஒளித்து வைத்துக் கொண்டு, அதைப் பயன்படுத்த மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறவரை என்ன செய்வது?

பில் கேட்ஸின் நல்ல காலம், மனதளவில் அவனுக்கு ஏதோ பிரச்னை அல்லது குழப்பமிருப்பதை அவர் அம்மா மேரி கேட்ஸ் உணர்ந்து கொண்டது. உடனே மனவியல் நிபுணர் ஒருவரிடம் அவரை அழைத்துச் சென்றார்.

அனைத்து விவரங்களையும் நிதானமாகக் கேட்டுத் தெரிந்துகொண்ட அந்த மருத்துவர், பில் கேட்ஸிடம் அன்பாகப் பேச்சுக் கொடுத்தார். அவருடைய மனவோட்டத்தைப் புரிந்துகொள்ள முயன்றார்.

ஆனால், கேட்ஸுடன் பழகத் தொடங்கியதுமே டாக்டருக்கு ஒரு விஷ

ஜெயிக்கப் பிறந்தவன்!

யம் தெளிவாகப் புரிந்துவிட்டது. 'பிரச்னை, நிச்சயமாக இந்தப் பையனிடம் இல்லை. அவனுடைய வேகத்துக்குச் சுற்றியிருக்கிற உலகம்தான் இயங்க மறுக்கிறது. அதனால் ஏற்பட்டிருக்கும் எரிச்சலைத்தான், இப்படி அடங்க மறுத்தலின் மூலம் வெளிக் காட்டுகிறான்.'

இந்த உண்மையை உணர்ந்துகொண்ட பிறகு, பில் கேட்ஸின் நெருங்கிய சிநேகிதராகிவிட்டார் அந்த டாக்டர். இருவரும் பல சுவாரஸ்யமான புத்தகங்கள், மனவியல் விஷயங்களைப் பற்றி விவாதிப்பது என்று மாதக் கணக்கில் நீடித்தது அந்த நட்பு.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த மேரி கேட்ஸுக்குக் குழப்பம், 'என்ன டாக்டர்? பையன் தேறுவானா, மாட்டானா?' என்று சந்தேகத்துடன் கேட்டார்.

'இவனோடு நீங்கள் போட்டியிடுவது வீண் வேலை' என்ற டாக்டர், 'நீங்கள் எவ்வளவுதான் முயன்றாலும், கடைசியில் அவனுக்குத்தான் வெற்றி! அவன் ஜெயிக்கப் பிறந்தவன். பேசாமல் உங்கள் மகனை அவன் போக்கிலேயே விட்டுவிடுங்கள்' என்றுவிட்டார். அத்துடன் பெற்றோர் தங்கள் மகனைப் பற்றிக் கவலைப்படுவதை நிறுத்திவிட்டார்கள்.

'இந்தக் காலகட்டத்தில் பில் கேட்ஸுக்குத் தன்னைச் சுற்றியிருந்த எல்லாமே 'போர'டிக்கத் தொடங்கியிருந்தது. அநேகமாக ஒவ்வொரு ப்புப் பாடங்களையும், சில வாரங்களுக்குள் படித்து முடித்துவிட்டு, அடுத்து என்ன என்று ஆசிரியர்களைக் கேட்க ஆரம்பித்தார். அவருடைய சிந்தனை வேகத்துக்கு ஆசிரியர்களும் பொருந்தாத போது, அவர்கள் மீதும் சலிப்பு உண்டாகிவிட்டது.

பெற்றோர், நண்பர்கள், பள்ளி, பாடங்கள், ஆசிரியர்கள் என்று யாராலும், எதனாலும் அவருடைய அறிவுத் தேடலை, ஆவேசத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளவோ, பூர்த்தி செய்யவோ முடியவில்லை. சீக்கிரத்திலேயே தாம் விரும்பியதைப் போன்ற, தம் புத்திசாலித்தனத்துடன் பொருந்தக்கூடிய, தொடர்ந்த சவால்களை அளிக்கக்கூடிய, ஓய்வின்றி தம்மை உற்சாகமாக வைத்திருக்கக் கூடிய ஒரு நல்ல தோழமையைக் கண்டுகொண்டார் பில் கேட்ஸ்.

அந்தத் தோழமையின் பெயர், அறிவியல்!

(தொடரும்)



சிறுகதை

அழகான மாளிகை... அஞ்சாறு அறைகள்!

ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். குழந்தைகளுக்கு ஸ்கூல் விடுமுறை.

'ஃபவுண்டர்ஸ் டே'வாம். குழந்தைகளை ஸ்கூலில் விடும் வேலை இல்லை.

சாவகாசமாக டிபன் சாப்பிட்டு விட்டு வெளியில் வந்து கால்களுக்கு சாக்ஸ் மாட்டிக் கொண்டிருக்கிறேன்.

ஹாலில் தேவதர்ஷினி, ரவியிடம் கேட்கிறாள்.

''அண்ணா... ஏதாவது விடுகதை சொல்லேன்...''

''விடுகதையா... ம்...'' - அவன் யோசிக்கிறான்.

'என்ன புதிர் போடப்போறான்...' என்று எனக்கே ஓர் ஆர்வம் ஏற்பட்டது. காது கொடுத்துக் கேட்டேன்.

அவன், ''அழகான மாளிகை, அஞ்சாறு ரூம். ஆனா ஒருத்தரும் இல்ல. அது என்ன..?'' என்று கேட்டான்.

'அது என்ன...' நானும் யோசித்தேன்.

'எல்லா ரூமும் காலியா, ஆளில்லாம இருந்தால் அது பாழடைந்த மாளிகையாத்தான் இருக்கணும்.

ஆனால், பையனோ 'அழகான' என்கிறான்.

அப்படியானால் அது, அப்போதுதான் கட்டப்பட்ட புதுக் கட்டடமாக இருக்கும். இன்னும் யாரும் குடியேறி இருக்கமாட்டார்கள்.

விடுகதை என்பது இப்படி நேரடியாகவா இருக்கும்? ஒரு பொருளைப் பற்றி மறைமுகமாகச் சொல்லப்படுவதுதானே விடுகதை!

அப்படியானால், ரவி சொல்ல வந்தது என்ன...?

மகளுக்கும் என் நிலைமைதான் போலும்.

''தெரியல... நீயே பதில் சொல்லு....''

''தெரியலையா... ரொம்ப சிம்பிள். அழகான மாளிகை, அஞ்சாறு அறைகள், உள்ளே ஒருத்தரும் இல்லே! அது வேறெதும் இல்லே. நம்ம அப்பாவோட பர்ஸ்...''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''அதெப்படி...'' என்று தர்ஷினி கேட்க,

''அப்பாவோட பர்ஸ், பார்க்க பளபளன்னு ஜோரா இருக்கும். ஆனால், பாவம் உள்ளே காசே இருக்காது. சும்மா ஜம்பத்துக்குத்தான் பர்ஸ் வச்சிருக்காரு...'' என்றான் அவன்.

'அடப்பாவி. இவன் எப்ப என் பர்ஸைப் பார்த்தான். பிரிச்சு வேற பார்த்திருக்கான். வழக்கமா அந்த வேலையை



அவன் அம்மாதான் செய்வா. அதுல ஒண்ணுமிருக்காது என்கிற ரகசியம் குடும்பத்தில் குழந்தைக்குக் கூடத் தெரிந்திருக்கிறதே...' என்று நான் பதறிக் கொண்டிருக்கும்போதே,

"இன்னொரு விடுகதை சொல்லட்டுமா?" என்று ஆரம்பித்தான் ரவி. எனக்கு பயமாக இருந்தது.

"டிர்ர்ர்ர்....க், டிர்ர்ர்....க்... டபடபடப... படபடபட...தொம்..." என்றான்.

ஒரு பித்தளைச் சாமானைப் படியில் உருட்டிவிட்டது போல் இருந்தது அவன் கொடுத்த சத்தம்.

எனக்கே சிரிப்பு வந்தது.


'அடேய்... விடுகதை தெரியலேன்னா தெரியலைன்னு சொல்லிட்டு வேற விளையாட்டு விளையாடேன். தங்கச்சிகிட்ட சும்மா ஏண்டா டூப் விட்டுக்கிட்டிருக்க? டிர்ராம், டபடபவாம்...' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

பையன், "இதுகூடத் தெரியலயா? அப்பாவோட ஸ்கூட்டர்தான் அது" என்றான்.

இப்போது படியில் உருண்டது பித்தளைச் சாமான் அல்ல... சாட்சாத் நானேதான்.

"அதெப்படி? அதெப்படி?" என்று தர்ஷினி குதிக்க,

"அப்பாவோட ஸ்கூட்டர் கல பத்துல ஸ்டார்ட்டாகாது... கிக்கரை போட்டு உதைச்சுக்கிட்டே இருப்பாரா... அது 'டிர்ர்ர்...க் டிர்க்... 'குன்னுமா... ஒரு வழியா 'டபடபடப...'னு ஸ்டார்ட் ஆகுமா... அதை ஓட்டும்போது 'படபட பட'ன்னு... சத்தம்



போட்டுக்கிட்டே போகுமா... வழியில சின்னப் பள்ளம் இருந்தாலும் விழுந்துடுமா... அதான் 'தொம்'..." என்றான் ரவி.

தர்ஷிணி கைகொட்டிச் சிரித்தாள்.

நான் நெற்றியைத் தடவிக் கொண்டேன்.

போன வார 'தொம்'மில் ஏற்பட்ட சிராய்ப்புத் தட்டுப்பட்டது.

மறு காலுக்கு சாக்ஸ் போடாமல் அடுத்த விடுகதையைக் கவனித்தேன்.

"வயிறு முட்ட குடிக்குமாம் வாயில்லாத குருவி...

எழுதச் சொன்னால் அழுவுமாம் வாயில்லாத குருவி..." என்றான்.

'அப்பாடா... என்னை விட்டுட்டுக் குருவியைத் துரத்திக்கிட்டுப் போய்ட்டான்' என்று நான் பாதி மூச்சுதான் விட்டிருப்பேன். தேவதர்ஷினி என் மீதி மூச்சை நிறுத்தும்படியாக ஒரு பதிலைச் சொன்னாள்.

"ஹே... அப்பாவோட போனாவைத் தானே சொல்றே..."

என் கை அனிச்சையாக சட்டையைத் தொட்டது.

'அது நான்தான்' என்றது ஒழுகும் பேனா.

என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அடுத்ததாக, "சோளக்காட்டு பொம்மையாம் சொந்தமான பொம்மையாம்... காட்டிலிருக்காது, வீட்டிலிருக்கும்.." என்றவனை அதட்டினேன்.

"லீவ் விட்டால் இப்படித்தான் அரட்டை அடிக்கறதா... படிங்க ரெண்டு பேரும்..."

என் குரலைக் கேட்டதும் 'கப்சிப்'பாகி விட்டார்கள். நான் வீட்டுக்குள் நுழைய, ரவி... விஷமப் புன்னகையுடன் தலை குனிந்து நின்றான்.

பையும், ஹெல்மெட்டும் எடுதது க் கொண்டு வெளியில் வந்தேன்.

"சாயங்காலம் வரும்போது ஞாபகமா அரை கிலோ வெங்காயம் வாங்கிட்டு வாங்க. லேட்டானாலும் பரவால்ல" என்று மனைவி சொன்னதை ஒரு காதில் வாங்கி மறுகாதில் விட்டுவிட்டு நடந்தேன்.

என் கவலையே வேறு...

நான் கொஞ்சம் ஒல்லிதான். 'தொளதொள'வென்று எக்ஸ்.எல். சைஸ் சட்டை அணிகிறவன்தான்... ஆனால் பையன் சோளக்கொள்ளை பொம்மையாக்குவான் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை.

'சொந்தமான பொம்மையாம், காட்டிலிருக்காது, வீட்டில் இருக்குமாம்!'

குறுக்கிடாமல் இருந்தால், இன்னும்

'அது ஆபீசுக்குப் போகுமாம், வெங்காயம் வாங்குமாம்' என்றெல்லாம்கூடச் சொல்லியிருப்பான் போலும்.

நான் கோபத்தோடு ஸ்கூட்டரைக் கிளப்பினேன். அது 'டிர்ர்ர்க்... டிர்ர்ர்...க்' என்று உதை வாங்கி 'டபட'வென்று ஸ்டார்ட்டாகி, படபட வென்று ஓடத் துவங்கியது. எங்கே 'தொம்' ஆகுமோ! ●

ஷங்கர் வழியில் நான்!

'பீமா'வை இயக்குவது ஒரு பக்கம் இருந்தாலும், எழில் இயக்கத்தில் ஜெயம் ரவி, பாவனா நடிக்கும் 'தீபாவளி'ப் படத்தை சத்தமில்லாமல் தயாரித்துத் திரைக்கு வெளியிடக் காத்திருக்கிறார் லிங்குசாமி.

"நாமே இயக்குநரா இருக்கணும்ங்கறதை விட நாமும் பலரை உருவாக்கணும்னு நெனைக்கிற ஷங்கர் சாரோட வழிதான் என் வழியும். ஆரம்பத்துல பாலாஜி சக்திவேல் இந்தக் கதையைக் கேட்டுட்டு என்னிடம் அனுப்ப, நானும் யார்கிட்டயாவது சிபாரிசு பண்ணலாம்னுதான் நெனைச்சேன். ஆனால் கதையைக் கேட்ட பிறகு எனக்கே ரொம்பப் பிடிச்சுப்போச்சு. இந்தப் படத்துக்கு நான் தயாரிப்பாளர்னு சொல்றாங்க. என் தம்பி சுபாஷ் சந்திரபோஸ் தான் உண்மையான தயாரிப்பாளர்; வருங்கால இயக்குநர்" என்கிறார் லிங்குசாமி.

- நாதன்



மருத்துவம்

எம்.என்.சங்கர்

ஆஸ்துமா... இன்றைக்குப் பலரின் தீராத நோயாக இருக்கிறது. அதுவும், இந்தக் குளிர் காலத்தில் அதன் கைகள் மிக நீண்டிருப்பதால் அவஸ்தைக்குப் பஞ்சமிருக்காது. 'நவீன மருத்துவத்தில் இதற்கென நிரந்தரத் தீர்வில்லை எனினும் மாற்று மருத்துவ முறையான அக்குபிரஷர் சிகிச்சையில் ஆஸ்துமாவை அடியோடு விரட்டி விடலாம்' என்கிறார், சீனாவிலுள்ள ஷாங்காய் பல்கலைக்கழகத்தில் அக்குபிரஷர் சிகிச்சையில் சிறப்புப் பயிற்சி பெற்றவரான டாக்டர் எம்.என்.சங்கர். எப்படி இது சாத்தியம் என்று அவரிடமே கேட்டோம்...

ஆஸ்துமாவுக்குத் தீர்வு தரும் அக்குபிரஷர்!

"உச்சி முதல் உள்ளங்கால் வரையிலான பிரச்னைகளுக்குத் தீர்வு தரும் மருத்துவமாக, காலங்காலமாக விளங்கி வருகிறது அக்குபிரஷர். நம் உடலில் ஜீரண மண்டலம், ரத்த ஓட்ட மண்டலம் இருப்பதைப்போல சக்திரேகை மண்டலம் என்று ஒன்று உண்டு. சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல், இதயம் என்று எல்லா உறுப்புகளுக்கும் தனித்தனி சக்தி ரேகை உண்டு. இவற்றின் பாதைகளில் உண்டாகும் தடைகளே நோய்களாக வெளிப்பட்டு, மனிதனை அவஸ்தைக்கு உட்படுத்துகின்றன. ஆஸ்துமாவும் இப்படி நுரையீரல் சக்தி ரேகையில் ஏற்படும் தடையால் விளையும் பிரச்னையே.

இதற்கு வைத்தியம் செய்ய நுரையீரல் தொடர்புப் புள்ளியில் அழுத்தம் கொடுக்க வேண்டும். இந்த நுரையீரல் தொடர்புப் புள்ளி உள்ளங்கையில் உள்ளது. இதனைச் சரியாகக் கண்டறிந்து அக்குபிரஷர் நிபுணரால் கொடுக்கப்படும் சரியான அழுத்தமானது, ஆஸ்துமாவை விரட்டுவதற்கான முதல் படி. மருத்துவரிடம் பயிற்சி பெற்ற பிறகு நமக்கு நாமே தொடர்ந்து இப்படி அழுத்தம் கொடுத்துக்கொண்டு வர வேண்டும். நாளடைவில் ஆஸ்துமாவின் வீச்சு குறைய ஆரம்பிப்பதை உணரலாம்.

ஏனைய மருத்துவங்களைப் போல தொடர்ந்து மருத்துவரை நாட வேண்டிய அவசியம் இல்லாததும், நோயை வருமுன் அறிந்து காத்துக் கொள்வதும் அக்குபிரஷரின் தனிச்சிறப்பு. ஒருமுறை நிபுணரிடம் பயிற்சி எடுத்துக்கொண்டால் அதன் பிறகு நாமே மீதி மருத்துவத்தைச் செய்து கொள்ளலாம். ஆஸ்துமாதான் என்றில்லை, சின்ன தலைவலியில் ஆரம்பித்து பெரிய இருதய நோய் வரை அக்குபிரஷரில் அருமையான தீர்வு உண்டு. மருந்துகள் சாப்பிட வேண்டாம். தேவை பொறுமைதான்" என்கிறார் டாக்டர் எம்.என்.சங்கர்.

- வினோ

படம்:
பொள்ளாச்சி சுந்தரம்



• நுரையீரல் தொடர்புப் புள்ளியைச் சுட்டிக்காட்டுகிறார் டாக்டர் சங்கர்...

சாமிக்குக் கோயில் இருக்குது. அரசனுக்குக் கோயில் இருக்குது. மாட்டுக்காக உயிருவிட்ட மனுசன் ஒருத்தனுக்கு கோயில் இருக்கறது உங்களுக்குத் தெரியுமா? 'சின்னக்கோவிலாங்கொளம்'னு ஒரு ஊரு. இந்த ஊருல மாடு, கன்னு இல்லாத வீடே இல்லைன்னு சொல்லலாம். ஊர்ல பெரும்பாதிப் பேரு வெவசாயம் பாக்குறதால, மாடு, கன்ன மேய்க்க ஒருத்தர நெயமிச்சுருவாக. இங்க மாடு மேய்ச்சுக்கிட்டு இருந்த கருப்பங்கர கெழவன் மண்டையப் போட்டுட்டாரு. அந்த நேரத்துல அந்த ஊருக்கு ஒரு ஊமையன் வந்தான்.

ரொம்பக் கெழவனாவும் இல்லாம, ரொம்ப எளந்தாரியாவும் இல்லாம நடுவாந்தரமா இருந்தான். ஊர் மடத்துல படுத்துக் கெடந்திருந்தவன எழுப்பி 'நீ யாரு? ஒம் பேரு என்ன? ஒம் வண்ணம் (ஜாதி) என்ன'ன்னு கேட்டாரு ஒரு பெரியவரு. அவன் 'பேபே'ன்னு என்னவெல்லாமோ சொன்னான். யாருக்குப் புரிஞ்சது? 'ஊமையன் பாஷ உடையாளுக்குத்தான் (தாய்க்குத்தான்) தெரியும்'ங்கிறது சொலவம். அன்னையப் பொழுதுக்கு அந்தப் பெரியவரு, அவனத் தன்னோட கூட்டிட்டுப் போயி வயிறாரச் சோறு போட்டுத் தங்க வைச்சாரு.

விடிஞ்சோன, பெரியவரு ஊமையங்கிட்ட 'இன்னிக்கு எம் மாடு, கன்னுகள மேச்சலுக்குப் பத்திக்கிட்டுப் போறயா'ன்னு சைகையாலயே கேட்டாரு. ஊமையனும் 'சரி'ன்னு சைகையாலயே பதில் சொன்னான். ஏதோ வானத்திலிருந்து குதிச்சு வந்தவன் மாதிரி அந்த ஊருக்கு வந்து ஒரு வீட்டு மாடு, கன்ன மேச்சவன், நாளானதும் ஊர் மாடு, கன்னு பூரா மேய்க்க ஆரம்பிச்சான்.

மாடு மேய்க்கும்போது, எல்லாரும் மாடு பத்த ஏதாச்சும் கம்பு வச்சிருப்பாக. ஆனா, ஊமையன் சீங்கொழல (புல்லாங்குழல்) எப்பவும் இடுப்புல சொருகி வைச்சிருப்பான். அந்த சீங்கொழலுதான் அவஞ் சொத்து.

காலையிலே வெயிலு வந்தோன, மாடுகள மேச்சலுக்கு ஒவ்வொரு தொழுவமா அவுத்து வுடுவான். அந்தக் காலத்துல மாடுக எல்லாம் ஒண்ணாக் கூட, மாட்டு மந்தை இருக்கும். எல்லா மாடுகளும்

ஊமையன் கோயில்!



அங்கதான் கூடும். அப்புறம் அதுக எல்லாத்தையும் பத்திக்கிட்டுக் காட்டுக்குப் போவான் ஊமையன். உச்சிப் பொழுதானதும் கொளக்கர புளிய மரத்தடியில ஒக்காந்து சீங்கொழல எடுத்து ஒரு ராகத்த வாசிப்பான். மேஞ்சிட்டிருக்குற எல்லா மாடுகளும் தன்னால மரத்தடியில கூடிரும். வெயிலு தாழுற வரைக்கும் மாடுக மரத்தடியில படுத்து அசை

■ கழனியூரன் ■



வெட்டும் (அசை போடும்). அப்புறம், கொளத்துக்குள்ள போயி, வெயிலுக்கு எதமா மாடுக குளிக்கும். சாயந்தரமானா திருப்பியும் மேச்சலுக்குப் போகுங்க.

கருக்கலானதும், ஊமையன் சிங் கொழல எடுத்து இன்னொரு ராகம் வாசிப்பான். மேச்சலுக்குப் போன எல்லா மாடுகளும் புளிய மரத்தடியில ஒன்னாக் கூடுங்க. பொழுது மசங்கின ஒடனே மாடுகளப் பத்திக்கிட்டு மந்தைக்கு வருவான். பழகுன மாடுக தானா அதுக வீட்டுக்குப் போயிரும். புது மாடுகள வீட்டுக்காரங்களே வந்து பத்திக்கிட்டுப் போயிருவாக.

இப்படி மாடு மேச்சிக்கிட்டிருந்த சமயம் ஒரு நா, உச்சிப் பொழுதுல மாடுகள தவிப்பார போட்டுட்டு லேசாகக் கண்ண மூடிட்டான். அப்ப உளுந்து வறுத்தா ஒரு வாசம் வருமே... அப்படி ஒரு வாசன ஊமையன் மூக்கத் தொலைக்குது. ஊமையன் கண்ணத் தெறந்து பாக்குறான், ஒரு பெரிய நல்ல பாம்பு, படமெடுத்து ஒரு மாட்டக் கொத்தறதுக்குத் தயாரா நிக்குது.

அதப் பாத்தோன ஊமையனுக்கு வெடவெடன்னு வந்திருச்சு. ஓடிப் போயி அப்படியே அந்தப்



ஊத்துமலையில் இருந்து சங்கரன்கோயில் செல்லும் பாதையில் சின்னக்கோவிலாங்குளம் என்ற கிராமத்துக்கும், சூரங்குடி என்ற கிராமத்துக்கும் இடையில் காட்டுப்பகுதியில் உள்ளது ஊமையப்பர் கோயில். சுற்று வட்டாரத்து மக்கள் இக்கோயிலை 'ஊமையன் கோயில்' என்றும், அக்கோயிலில் உள்ள சாமியை ,'கால்நடைகளின் காவல் தெய்வம்' என்றும் சொல்கிறார்கள்.

இக்கோயிலுக்குச் சின்னக்கோவிலாங்குளம் விலக்கில் (பிரிவில்) இறங்கி, சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்துதான் செல்ல முடியும். சுற்றிலும் தோட்டம், தொரவு மற்றும் காடுகளாக உள்ளது. சிறிய குளத்தை ஒட்டி நிற்கும் கம்பீரமான ஒரு புளிய மரத்தின் அடியில் அமைந்துள்ளது இக்கோயில்.

கோயிலைச் சுற்றிலும் மாடுகளின் சின்னஞ்சிறு கற்சிலைகள் நூற்றுக்கணக்கில் அடுக்கி வைக்கப் பட்டுள்ளன. சுடுமண்ணால் செய்த மாடுகளின் உருவங்கள் வர்ணங்கள் பூசப்பட்டு இன்னொருபுறம் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. கோயிலில் ஏராளமான பித்தளை மணிகள் கட்டப்பட்டிருக்கின்றன. கோயிலின் அருகில் உள்ள புளியமரத்திலும் ஏராளமான மணிகள் கட்டப்பட்டுள்ளன.

பாம்போட கழுத்த கெட்டியாப் புடிச்சுட்டான். நல்ல பாம்பு சும்மா விடுமா? மாட்டக் கொத்த வந்த பாம்பு, ஊமையனக் கொத்திருச்சு. கொத்துன நொடியில ஒடம்புல வெஷம் பரவிருச்சு. வெஷம் பரவுனாலும் ஊமையன் தன்னோட புடியை விடல. கையில இறுக்கிப் புடிச்சதுனாலேயே பாம்பும் செத்துப் போயிருச்சு, ஊமையனும் அப்படியே மரத்தடியில செத்துப் போயிட்டான்.

இதையெல்லாம் பாத்துக்கிட்டேயிருந்த மாடுக கண்ணீர் வடிச்சதுக. எந்த மாடும் கொளத்துக்குப் போயி தண்ணி குடிக்கல சாயந்திர மேச்சலுக்குப் போகல. சிங்கொழலு சத்தங் கேக்காதனால மாடுக அப்பிடியே படுத்தது படுத்தபடியே கெடந்ததுக.

பொழுது மசங்குன பொறவும் மாடுக மந்தைக்கு வராததால ஊர் மக்க எல்லாரும் கையில தீப்பந்தத் தோட ஊமையனையும், மாடுகளையும் தேடிப் புளிய மரத்தடிக்கு வந்தாக.

மரத்தடியில ஊமையன் வாயில நொரத் தள்ளி கையில நல்ல பாம்போட படுத்துக் கெடக்க, மாடுக கண்ணுல தண்ணியோட கெடக்க, அதப் பாத்த ஊர் சனம் பூராவும் அலுவசப்பட்டு (அதிசயப்பட்டு) அப்பிடியே மூக்கு மேல விரல வைச்சாக.

எங்கிருந்தோ வந்த ஊமையன், ஊர் மாடுகளக் காப்பாத்த தன்னோட உசிரையே கொடுத்தானே அவன் தெய்வாம்சமானவன்னு சொல்லிப் புளிய மரத்துக்கடியில அவன அடக்கப் பண்ணி, அடையாளத்துக்கு ஒரு கல்லையும் நட்டு வச்சாக.

இன்னிக்கும் சுத்து வட்டாரத்துல மாடு, கன்னுகளுக்கு சொகமில்லைன்னா 'ஊமையப்பா, உன் சன்னதியில காள மாடு வாகனம் செஞ்சு வைக்கிறேன், மாட்டைக் குணப்படுத்திக் குடுப்பா'ன்னு வேண்டிக்கிறாங்க. சுகமாயிட்டா, உடனே வேண்டுனபடியே கல்லால செஞ்ச உருவத்தக் கொண்டு வந்து ஊமையங் கோயில்ல வைக்கிறாங்க.

இன்னிக்கு அந்தச் சன்னதியில நட்டிருந்த கல்ல எடுத்துட்டு, ஊமையப்பனுக்கு செல வச்சிருக்காங்க. இப்போ, ஊமையப்பரு செலையச் சுத்தி சின்னக் கோயிலக் கட்டியிருக்காங்கன்னு ஊமையப்பன் கோயிலு கதையைச் சொல்றாரு சூரங்குடி மாடசாமி.


(படிக்கலாம்)

நீங்கள் கேட்டவை

● எஸ்.சக்தி, விகே.புரம்

? பீஹாரில் வாழைப்பழம் திருடியதாகக் குற்றம் சாட்டி, ஐம்பது வயது தலித் பெண்ணை மொட்டையடித்து, அரை நிர்வாணமாக்கி ஊர்வலம் விட்டது போன்ற கொடுமைகளை நாம் ஒழிக்க முடியாதா?

! சட்டத்தை அமல்படுத்தாமல் அதர்மத்துக்குத் துணைபோகும் காவலர்கள் ஒரு பக்கம்; கிராமப்புறங்கள் வரை பரந்து விரிவடையாத காவல்துறை மறுபக்கம். இவற்றுக்கிடையில் இதுபோன்ற அநீதிகள் நிகழாதிருக்க, மனவளம் பெருக்கும் கல்வியாவது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஊஹூம்... இந்திய சுதந்திர நூற்றாண்டு விழாவில்கூட 'நூறு சதவிகிதம் மக்களுக்குக் கல்வி' நிறைவேறாது போலிருக்கே!



* காதல் சோதனை...!

● எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி

? ராணுவ அதிகாரிகளே பெண்களிடம் முறையின்றி நடந்துகொள்வது சரிதானா?

! அதெப்படி சரியாகும் ஐயா! சீருடை அணிந்த சிலரின் சீரழிவுக்கு அடையாளம்தான் இந்த மாதிரிச் சம்பவங்கள். சீருடை, இவர்களுக்குக் கம்பீரத்தைத் தருவதற்குப் பதிலாக அதிகார போதையையும் அசட்டுத் துணிச்சலையும் தருகிறது. ராணுவ அதிகாரிகள் கல்லூரியில் மனப்பயிற்சியும் வழங்கப்படுவது அவசியம்.



* போட்டி...



* ...முகாம்..!

● கு.கணேசன், பனங்கோட்டூர்

? "என்னிடம் முப்பது கோடி இருந்திருந்தால் வைகோவையே விலைக்கு வாங்கியிருப்பேன்" என்ற கருணாநிதியின் ஆதங்கம் குறித்து...

! நிரூபிக்க முடியாததை சூசகமாகத் தெரிவிக்கும் அரசியல் யுக்தி.

● நீ.முத்துக்குமார், திருச்சி

? புஷ்ஷின் அடுத்த இலக்கு...?

! எண்ணெய் வளத்துக்கு ஏதேனும் வளைகுடா நாடு அகப்படும்; மனித வளத்துக்கு இருக்கவே இருக்கு - இந்தியா!

● இரா.சாந்தகுமார், திருவள்ளூர்★


? ஒயின் ஷாப்புகளையும் திறந்து விட்டு 'வருமுன் காப்போம்' திட்டத்தையும் அரசு கொண்டு வருவது முரண்பாடு இல்லையா?

! நிச்சயமாக. அந்த ஒயின் ஷாப்புகளுக்கு விற்பனை இலக்கும் (target) நிர்ணயித்து விட்டால் முரண்பாடு முழுமையடையும்!

● வி.என்.கோபால், சென்னை - 91

? 'சத்திய சோதனை'யில் மறைக்கும் அளவுக்கு காந்திஜியும் காதல் வயப்பட்டார் என்கிற செய்தியில் உண்மை இருக்குமா?

! காதல் பலதரப்பட்டது : கலைக்



பணி நேரத்தில் 'டாஸ்மாக்'கில் போய் மது அருந்தலாமா?

! சென்னைக் காவல்துறையின் 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தாரோ, என்னவோ!

● **கி.துரைசாமி, மங்கலப்பட்டி**

? கடவுள் என்பவர் நம்மை ஏன் சோதிக்க வேண்டும்?

! அதுவும் அவருடைய கருணை தான்! சோதனைகளே இல்லாத வாழ்க்கை சலிப்பூட்டும்; அர்த்தமற்றதாகிவிடும். சோதனைகளைச் சந்தித்து, அவரவர் ஆற்றல், முயற்சிக்கு ஏற்ப வெற்றி பெறுவதிலேதான் வாழ்க்கை சுவாரஸ்யமடைகிறது.

● **ஆர்.வஸந்தா, சென்னை - 28**

? ஜல்லிக்கட்டுக்கு மதுரை கோர்ட் விதித்துள்ள தடையை தமிழக அரசு நீக்க வேண்டும் என்று சில அமைப்புகள் கேட்பதில் துளியேனும் நியாயம் இருக்கிறதா?

! மேல்முறையீட்டில் தடை (உயர்நீதி மன்றத்தால்) நீக்கப்பட்டுவிட்டது. தக்க பாதுகாப்போடு (?!) ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி தரப்பட்டுள்ளது. உடல் பாதுகாப்புக்கு ஜல்லிக்கட்டு வீரர்கள் வேண்டுமானால் கிரிக்கெட் வீரர்களைப் பின்பற்றித் தங்களுக்கு ஏற்றதான கவசங்களை அணிந்து கொள்ளலாம். பாவம்.

• குறி வைத்து...!

புஷ்ஷின் அடுத்த இலக்கு...?

காதல், இலக்கியக் காதல், இலட்சியக் காதல், நட்புறவுக் காதல் என இருவர் ஒன்றுபடப் பல காரணங்கள் இருக்கலாம். சரியான அணுகுமுறை நம்மிடம் இருந்தால் காந்திஜியிடம் நமக்குள்ள மதிப்பும் மரியாதையும் சற்றும் குறையாது என்பதே என் திடமான நம்பிக்கை!

● **கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை**

? சீருடை அணிந்த போலீஸ்காரர்,



● புறக்கணிப்பு!



● புதிர் நடனம்!

காளைகள் பாடு தான் திண்டாட்டம்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? எல்.கணேசன், செஞ்சியாரின் எதிர்ப்பு நிலை ம.தி.மு.க.வில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்கிறாரே வைகோ?

! ம.தி.மு.க.வில் பாதிப்பு உண்டோ இல்லையோ, போட்டி ம.தி.மு.க.வை ஏற்க வேண்டும் என்ற கலைஞரின் கோரிக்கைக்கு எழுந்துள்ள எதிர்ப்பால் தி.மு.க.வுக்குப் பாதிப்பு இருக்கும் - குறிப்பாக, வீரபாண்டி ஆறுமுகம் தரப்பிலிருந்து.

● என்.ரத்தினம், கம்பம்

? "சிறுவன் கொலைக்குக் காரண மானவர்களைக் கண்டம் துண்டமாக வெட்ட வேண்டும்" என்று விஜயகாந்த் கர்ஜித்துள்ளது பற்றி...?

! கோரம்! அதைவிட கோரம், "அவன் அப்படிச் செய்திருக்கிறான் என்று தெரிய வந்தால், அவனைத் தூக்கில் போடுங்கள்" என்று அவன் தந்தை கூறியது! குரூரத்தின் உச்சம். கண்டனம் செய்யலாம் - நல்லது. தீர்ப்பு எழுதும் பொறுப்பை நீதிபதிக்கு விட்டுவிடுங்கள், ப்ளீஸ்.

● அ.யாழினி பார்வதம், சென்னை

? மறைந்த நடன மேதை சந்திரலேகாவைப் பற்றி?

! இந்திய நடனத்தை நவீனப்படுத்திய கலைஞர் - அது என்னவென்றே புரியாது போகிற அளவுக்கு!

● கே.கே.வெங்கடேசன், சென்னை

? ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் நன்றாக ஆடிக்கொண்டிருக்கும்போது ஓய்வு பெறுகிறார்கள். நம் நாட்டு கிரிக்கெட் வீரர்கள் ஏன் அப்படிச் செய்வதில்லை?

! நன்றாக ஆடுவதிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டால் போதும்; சன்மானம் பெறுவதிலிருந்து ஓய்வுபெறவே கூடாது என்ற நி(மு)னைப்பாக இருக்கலாம்.

● வி.தேவி, விருதுநகர்

? அரசு விழாக்களில் கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர்களுக்கு மாலை அணிவிப்பதற்குப் பதில் புத்தகங்கள் வழங்க அரசு உத்தரவிட்டிருப்பதைப் பற்றி...?

! வரவேற்கப்பட வேண்டிய நல்ல கருத்து. பொன்னாடைகள், சால்வைகள், தங்க வஸ்திரங்களும் தவிர்க்கப்பட வேண்டும். கலைஞரைத் தவிர, வேறு பலரும் புத்தகங்கள் எழுதியுள்ளார்கள் என்பதை நினைவில் வைக்கவேண்டும்.

● அ. கஜைறல் ரஹ்மான், திருச்சி

? பள்ளி, கல்லூரிகளில் நொறுக்குத் தீனி விற்பனையைத் தடை செய்ய வேண்டும் என்று மாநில முதல்வர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரே மத்திய அமைச்சர் அன்புமணி?

! சுகாதாரக் கேடான நொறுக்குத் தீனி கூடாதுதான். ஒட்டுமொத்த தடை உத்தரவும் கூடாது. பள்ளிக்கூடத்தின் கடும் விதிமுறைகளுக்கும் பாடச் சுமைக்கும் இடையே நொறுங்கிக் கொண்டிருக்கும் மாணவர்களை, நொறுக்குத்தீனி சற்றே மகிழ்ச்சியில் திமிர வைக்கும் என்பதை அமைச்சர் மறக்கக் கூடாது. பள்ளிகளில் விற்பனையாகக்கூடிய நொறுக்குத் தீனிகளை கவனமுடன் தேர்ந்தெடுக்கலாமே! ●


ரூ.100 பரிசு பெறுபவர் :
கே.கே.வெங்கடேசன்,
4/909, முகப்பேர் மேற்கு,
சென்னை - 600 037

ரூ.50 பரிசு பெறுபவர்
இரா. சாந்தகுமார்,
7, மெயின் ரோடு, ஜெயா நகர்,
திருவள்ளூர் - 602 001

சவால்

இந்த முதியவரின் பார்வை எங்கோ பதிந்திருக்கிறது அல்லது எதையோ, யாரையோ எதிர்பார்த்திருக்கிறது. அந்த எதிர்பார்ப்பு என்னவாக இருக்கும் என்று கற்பனை செய்து, மூன்று வரி கமெண்ட்டாக எழுதி அனுப்புங்கள்! சிறந்த எட்டு கமெண்ட்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.250/- பரிசு பெறும்.

பார்வை எங்கே?



படம் : எஸ்.முகம்மது

கடைசித் தேதி : 22.1.2007

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி!

பரிசு ரூ.2000/-

மேருவின் உச்சியில்... 18

ஊரில் பெரிய மனிதர். அவர் பெயர் பெருமான். அவர் வீட்டில் ஒருத்தர் வேலை செய்ய வந்தார். அவர் பெயரும் பெருமாள்! அவரை எப்படி தினமும் கூப்பிடுவது! தன் பெயரையே சொல்லிக் கூப்பிடுவது கஷ்டம் என்பதற்காக, "உங்கள் பெயரைக் கொஞ்சம் மாற்றிக்கொள்ளுங்கள்" என்று கேட்டாராம் எஜமானர்.

வேலைக்கு வந்தவரோ மறுத்தார். "மாட்டேன். இது என் அப்பா வைத்த பெயர். இதை மாற்றிக்கொள்ள முடியாது" என்றார்.

"இல்லை, உங்களை நான் வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டுமானால் பெயரை மாற்றிக் கொண்டால்தான் முடியும்" என்று சொல்லி, "எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை; நீங்கள் ஊருக்குப் போய், அப்பா - அம்மாவிடம் சொல்லிவிட்டு வேறு ஏதாவது பெயர் வைத்துக் கொண்டு திரும்பி வாருங்கள். அதற்கான செலவை நான் கொடுத்து விடுகிறேன். இந்தப் 'பெருமான்' என்ற பெயர் மட்டும் வேண்டாமே" என்றார் எஜமானர்.

(சிருஷ்டி நடைபெறுவதற்காகத் தோன்றிய ஐந்து மூர்த்திகளுள் ஐந்தாவதானவர்) கூப்பிட்டு, "நீங்கள் எந்தப் பெயரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள் - ஒன்றைத் தவிர" என்றாளாம்! சிவம் என்கிற பெயர் நிர்க்குண பிரம்மத்தைக் குறிப்பதனாலே - அது காமேசுவரியுடைய பர்த்தாவான காமேசுவரனைக் குறிப்பதனாலே- அதை மட்டும் தவிர்க்கும்படி கூறினாள். ஏற்கெனவே அந்த ஐவருள் ஒருவர் 'மஹேசுவரன்' என்று தன் பெயரை வைத்துக்கொண்டு விட்டார். அது சிவத்தினுடைய சர்வ வியாபகத் தன்மையைக் குறிக்கிற மாதிரி ஆகிவிட்டது. ஆகவே அதுபோல் ஆகிவிடாமல் வேறு பெயர் வைத்துக்கொள்ளும்படி சொன்னாளாம்.

கேட்டுக்கொண்ட அந்த ஐந்தாவது மூர்த்தி, "என் பெயர் சிவம் அல்ல" என்றாராம்.

"அப்படியானால் உங்கள் பெயர் என்ன?" என்று அம்பாள் கேட்க "சதாசிவம்" என்றாராம் அவர் 'பெருமான்' என்ற பெயர் வேண்டாமென்

இவர் புறப்பட்டுப் போய்விட்டு, நான்கு நாட்கள் கழித்துத் திரும்பி வந்தார். வந்ததுமே, "பெயரை மாற்றிக் கொண்டீரா... என்ன பெயர்?" என்று கேட்டதும் அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"பெத்தபெருமான்!" என்றாராம் அவர்!


இந்த மாதிரி நடந்துவிடக் கூடாது என்பதற்காக, அம்பாள் என்ன பண்ணினாளாம் - ஐந்தாவதாக இருக்கிறவரைக்

சொல்லப்போக, எப்படி ஒரு 'பெத்தபெருமான்' ஏற்பட்டாரோ, அந்த மாதிரிதான் இந்த 'சதாசிவம்'! - இந்தக் கதையை மகா பெரியவர் அழகாகச் சொல்லுவதுண்டு.

ஸ்ரீமன் நகரம்

அனுக்ரஹத்துக்கு இருக்கக்கூடிய ஐந்தாவது தெய்வம் சதாசிவம். ஆக, இந்த

சுதா சேஷய்யன்



ஐந்தும் சிருஷ்டி கிரமத்தின் பொறுப்புகள். இவை அவரவரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அம்பாள் எங்கே உட்கார்ந் திருக்கிறாள் என்றால், அனுக்ரஹத்துக்கும் மேலே உள்ள நிலையில் அவள் அமர்ந் திருக்கிறாள் - ஒரு சிம்மாஸனத்தில் அமர்ந் திருக்கிறாள். அந்த சிம்மாஸனத்தின் மேல் ஒரு பீடம் இருக்கும். பீடத்துக்கு நான்கு கால் கள் இருக்கும். அந்த நான்கு கால்களாக இருக்கக் கூடியவர்கள் யாரென்றால்,

சிருஷ்டிக்கு அதிபதியான பிரம்மா
ஸ்திதிக்கு இருக்கக்கூடிய விஷ்ணு
சம்ஹார மூர்த்தியான ருத்ரன்
திரோபாவத்துக்கு (மறைத்தல்) மஹேசுவரன்

- இந்த நான்கு தேவதைகளும் நான்கு கால்கள். இந்தக் கால்கள் தாங்கும் பீட மாக சதாசிவம் இருக்க, அந்த சதாசிவ பீடத்துக்கு மேலே அனுக்ரஹ பீடத்துக் கும் மேலே - அமர்ந்திருக்கக் கூடியவள் தான் அம்பிகை பரமேசுவரி.

அதனால்தான் ஆசார்யர் பாடுகிற போது 'சதாசிவ பர்யங்க நிலையா' என்று அவளைப் பாடுகிறார்.

இப்படி ஐந்து பேரும் கால்களாகவும் தட்டாகவும் இருக்க, அந்தப் பீடத்தில் ஸ்திரமாக அமர்ந்திருக்கக் கூடியவள் என் பதைத்தான் பஞ்சபிரம்மாஸனஸ்திதா



என்கிற திருநாமம் குறிக்கிறது.

பஞ்சபிரம்மாஸனம் என்றால் என்ன? பஞ்சபிரேதஸ் என்றால் என்ன...? இந்த ஐந்து காரியங்கள் நடக்கின்றனவே சிருஷ் டியை ஒட்டி, அவை அனைத்தும் அம் பாள் தனது சக்தியைப் பிரயோகிக்கிற போது நடக்கும் - அப்போது பஞ்சபிரம் மாஸனம். அவ்வாறு பிரயோகிக்காமல் இருக்கிறபோது பஞ்சபிரேதஸ்.

ஆக, பஞ்சபிரேதஸ்ஸாக - அடங்கிக் கிடக்கும் அம்சங்களாக இருக்கக்கூடிய தற்கு பஞ்சபிரம்மமாக - சக்தியைத் தரக் கூடியவள் அம்பாள். எங்கே, எந்த மாதிரி யான இடத்தில் இருக்கிறாள் என்றால், சிந்தாமணி கிருஹத்தில் இருக்கிறாள்.

சிந்தாமணி கிருஹத்தில் இருக்கக் கூடி யவள், ஸ்ரீமன் நகரத்தில் இருக்கக் கூடி யவள் அவள். ஸ்ரீபுரத்தில் இருக்கக் கூடி யவள். அந்த ஸ்ரீபுரம் எங்கே இருக்கிறது...? 'மேரு' என்கிற அடையாள அமைப்பின் மத்தியில் இருக்கிறது -

ஸுமேரு மத்ய சிருங்கஸ்தா

இந்த மேருவுக்குப் பல விளக்கங் கள் - அடையாளமாகவும் யோக சாஸ்திர பர மாகவும், தந்திர சாஸ்திர முறைப்படி யும் வெவ்வேறு விளக்கங்கள் சொல்லப் படுகின்றன.

மேரு மலைக்கு மேலே, உச்சியிலே ஸ்ரீபுரம் இருப்பதாகவும் கணக்கு. மேரு மலை வட திசையிலே இருக்கிறது. அப் படி வட திசையில் இருக்கக்கூடிய மேரு மலைக்கு வர்ணனை என்னவென்றால் - நான்கு சிகரங்கள். அந்த நான்கு சிகரங் களுள் மூன்று ஒரே உயரத்தில் இருக்கும். இந்த மூன்று சிகரங்களும் யார் என்றால், முத்தொழில்களைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு, சிவன். இந்த மூன்று சிகரங் களுக்கு மேல் நான்காவது சிகரமாக உயரத்தில் இருக்கக்கூடிய சிகரத்தில்தான் ஸ்ரீபுரம் இருக்கிறது. (ஸ்ரீமன் நகர நாயிகா) அந்த ஸ்ரீபுரத்தில், சிந்தாமணி கிருஹத்தில் வீற்றிருக்கிறாள் அம்பாள்.

சிந்தாமணி என்பது என்ன?

சிந்தாமணி என்று ஒரு கல் இருந்த தாகச் சொல்வார்கள். ஒரு சிறிய சிந்தா மணி கல் இருக்கிறது என்று வைத்துக்

கொள்வோம்... அதனிடம் நாம் ஏதேனும் வேண்டும் என்று கேட்டோமானால் உடனே கொடுத்துவிடும்! சிந்தாமணியுடைய குணமே அதுதான்.

ஒருவேளை அப்படி ஒரு கல் இருந்து, அது மலை மலையாக இருந்திருந்தால் கூட என்ன ஆகியிருக்கும்? இன்று ஏன் அப்படி ஒரு கல் இல்லை என்பதற்கெல்லாம் நாம் காரணத்தைச் சுலபமாக யூகித்துக் கொள்ளலாம்! ஒருவேளை அப்படி ஒரு கல் இருந்திருந்தால், 'எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும்' என்று ஆளுக்குக் கொஞ்சமாகப் பிய்த்துக் கொள்ள, அது 'தீர்ந்து' போயிருக்கும்!

இவ்வாறு சிந்தாமணி என்பது எதைக் கேட்டாலும் தரக்கூடியது என்பதால் தான் 'சிந்தாமணி குண நிலயா' என்று அம்பாளைப் பாடுவார் ஆசார்யர். ஏது மற்ற எங்களுக்கு, கேட்டதையெல்லாம் தரக் கூடியவளே என்று பொருள்.

'இத்தனூண்டு' கல்லாக இருக்கக் கூடிய சிந்தாமணியே நாம் கேட்டதையெல்லாம் கொடுக்கும் என்றால், அம்பாள் வீற்றிருப்பதோ முழுவதும் சிந்தாமணிக் கற்களாலான கிருஹத்தில். (**சிந்தாமணி கிருஹ அந்தஸ்தா**) அப்படியானால் அவள் அனைத்தையும் தரவல்லவள் என்றுதானே ஆகிறது.

மேருவின் உச்சி

மேரு மலையின் உச்சியில் இருக்கிறது ஸ்ரீபுரம் என்று பார்த்தோம்.

யோக சாஸ்திரத்தின் அடிப்படையிலே பார்த்தால், பிரம்மரந்திரத்தில் இருக்கிறது ஸ்ரீபுரம் - அதாவது நமது மனத்துக்குள்ளேயே இருக்கக் கூடியது.

ஆக, இதற்கு என்ன அர்த்தம் என்றால், சிந்தாமணி கிருஹம் என்பது நிஜமான சிந்தாமணி கற்களைக் கொண்டு கட்டியது அல்ல. 'ஸ்ரீ' என்றாலே ஐச்வர்யம் என்று அர்த்தம். ஐசுவர்ய நாயகியான அவள் ஐசுவரியபுரியில் இருக்கிறாள். ஐசுவரியபுரத்தில் இருக்கக் கூடியவள். அங்கே சிந்தாமணி கிருஹத்தில் இருக்கிறாள் என்றால், தன்னுடைய குழந்தைகள் எதையெல்லாம் கேட்கிறார்களோ, அதையெல்லாம் தருவதற்காக அவள் சிந்தாமணி கிருஹத்தில் இருக்கக் கூடியவள்.

அம்பாளுக்கு ரொம்பப் பிடித்தது



என்னவென்றால் கடம்ப வனம். கடம்ப வன சுந்தரியாக இருக்கக் கூடியவள். (**கதம்ப வன வாஸினி**) ஆசார்யர் இதைப் பாடுகிறபோது 'நீப உபவனம்' என்று குறிப்பிடுகிறார். நீபம் - கடம்ப மரம். அந்தக் கடம்ப வனத்தில் ஒரு த்வீபம் - மணி த்வீபம். அதற்கு நடுவில் இருக்கிற சிந்தாமணி கிருஹத்தில் இருக்கக் கூடியவள்

அவளே மஹா பத்ம அடவீ ஸம்ஸ்தா என்கிறது ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம்.

பெரிய காடு - எப்படிப்பட்ட காடு என்றால், நிறைய தாமரைப் பூக்கள் பூத்திருக்கக் கூடிய காடு.

அந்தத் தாமரைக்கு இன்னொரு பொருள் - மனம். மனம் என்கிற தாமரை மட்டும் அல்ல; அந்தத் தாமரையைக் கொஞ்சம் ஏற்றிக்கொண்டே போனால் (யோக சாஸ்திர முறைப்படி) சஹஸ்ரார பத்மம் என்று சொல்கிறோமே - குண்டலினி சக்தியை மேலே ஏற்றிக் கொண்டே போய் கபாலத்தில் நிறுத்துகிற இடம் - அந்த சஹஸ்ரார பத்மத்திலே வீற்றிருக்கக் கூடியவள் அம்பாள்.

அம்பாளை நாம் எங்கே கொண்டு போய் கொலு வைக்க வேண்டும் என்பதற்குத்தான் இந்த நாமாவளி. இதையே தான் அபிராமி பட்டரும் பாடுவார்...

(தொடரும்)

போக்கிரி VS ஆழ்வார்

— வெடிக்கக் காத்திருக்கும் நிஜ மோதல்?

பொங்கலுக்கு அரை டஜன் படங்கள் ரிலீஸானாலும் நிஜப் போட்டி என்னவோ விஜய்யின் 'போக்கிரி'க்கும், அஜீத்தின் 'ஆழ்வாரு'க்கும்தான் என்கிறது கோடம்பாக்கப் பட்சி. நமது பங்குக்கு நாமும் விசாரித்தோம்... பெயர் குறிப்பிட விரும்பாத உதவி இயக்குநர் ஒருவர், "ரஜினி, கமல் மாதிரிதான் இன்னிக்கு அஜீத், விஜய்யும். செம மாஸ் ரெண்டு பேருக்கும். ரெண்டு பேரோட படமும் ஒரே நேரத்துல ரிலீஸானா அதுதான் அவங்கவங்க ரசிகர்களுக்கு தீபாவளியும், பொங்கலும். ஆனா அதே நேரத்துல இதுல மிகப்பெரிய சிக்கலும் இருக்கு. ரொம்பத் தீவிரமான அவங்களோட ஃபேன்ஸ் 'தல படம்தான் ஜெயிக்கணும்' 'தளபதி படம்தான் ஹிட்'டுன்னு போட்டியா இறங்கி, அது போராட்டமா முடியவும் வாய்ப்பிருக்கு" என்று குண்டு போட்டார்.

கடந்த தீபாவளிக்கு அஜீத்தின் 'வரலாறு' மட்டும் ரிலீஸ். விஜய்யின் படம் எதுவும் வரவில்லை. அதனால் எந்தப் பிரச்னையுமில்லாமல் தீபாவளி கடந்து போனது. ஆனால் இந்தப் பொங்கலுக்கு இருவருடைய படங்களும் ரிலீஸாவதால் கதிகலங்கிப் போயிருப்பது தியேட்டருக்குப் படம் பார்க்க வரும் பொதுமக்கள்தான்.

குடும்பஸ்தரான பாலா என்பவரை இது குறித்துக் கேட்டபோது, "நீங்க சொல்றது சரிதாங்க. தியேட்டர்ல இவங்க ரெண்டு தரப்பு ரசிகர்களால என்ன வேணா நடக்க வாய்ப்பிருக்கு. அதுவும் ஒரே காம்ப்ளக்ஸ்ல இவங்களோட படங்கள் ரிலீஸானா மக்கள் கதை கந்தல்தான்" என்றார் பயந்தபடி.

தியேட்டர்காரர்கள் முன்னெச்சரிக்கையோடு இருக்க வேண்டிய இச்சூழலில், ரசிகர்களும் படத்தைப் படமாய் மட்டுமே பார்க்கும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், அடுத்தவருக்குத் துன்பம் தரும் விதத்தில் அமைந்துவிடக் கூடாது. சம்பந்தப்பட்ட நடிகர்களும் தத்தமது ரசிகர்களுக்கு, தோழமையாக இருக்கும்படி அறிவுறுத்த வேண்டும்.

போக்கிரி - ஆழ்வார் பிரச்னை பொங்கலுக்குப் புயலைக் கிளப்ப, தமிழ்ப் புத்தாண்டுக்குச் சூறாவளியைச் சுழற்றக் காத்திருக்கின்றன ரஜினியின் 'சிவாஜி'யும், கமலின் 'தசாவதார'மும்!

- நமது நிருபர்





டீம் சோற்றுக் கற்றாழை ஜூஸ்

- இதிலுள்ள ஊட்டச் சத்துகளைப் பாதுகாக்க குளிர் நிலை செய்முறை தொழில்நுட்பம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.
- நன்கு பதப்படுத்தப்பட்ட முதிர்ந்த இலைகளில் இருந்து ஜூஸ் தயாரிக்கப்படுகிறது.
- தண்ணீர், வாசனைத் திரவியங்கள் மற்றும் வண்ணங்கள் எதுவும் கலக்கப்படுவதில்லை.
- ஊட்டச்சத்துகளின் வீரியம் 100% நிலைப்படுத்தப்பட்டுள்ளது

TEAM EUBIO CARE

[DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED]

VANDALUR - Team House, GST Road, Chennai-600 048, Phone : 22750502

ANNA NAGAR - Plot 1200, Z Block, 6th Avenue, Chennai - 600 040 [Opp Kokino Karate School] Phone - 42693332

ADAYAR - Shop No.26, Ground Floor, Corporation Shopping Complex, III Avenue, Indira Nagar, Chennai 600 020, Ph : 4269 5115

For Trade enquires Contact

teamhealthshoppe@drraoholdings.com
Team Health Shoppe, Team House,
GST Road, Vandalur, Chennai - 600 048

E-mail : teamhealthshoppe@drraoholdings.com Web : www.teamhealthshoppe.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.